
தமிழரசு
16-12-1979
50 காசு

# எம் கடன் பணி செய்து கிடப்பதே!



—இப்படி, அமைச்சரவையின் சார்பிலே அமரர் அண்ணா மீது நான் ஆணையிட்டுச் சொல்லி இரண்டரை ஆண்டுக்காலம் ஆகிறது. அதாவது இந்த அரசு அமைத்து இரண்டரை ஆண்டு ஆகிறது.

இந்தக் குறுகிய காலத்திலேயே, நீண்ட நெடுங்காலமாக ஆளும் ஓர் அரசு ஆற்றிடத்தக்க பணிகளை, நாங்கள், இந்த நாடு நலம்பெறத்தக்க வகையில்- நாட்டுமக்கள் பயன்பெறத்தக்க விதத்தில் ஆற்றிவந்திருக்கிறோம்.

இந்த இரண்டரை ஆண்டுக்காலத்தில்-

அமரர், பேரறிஞர் அண்ணர் அவர்களின் கொள்கைகள்-இலட்சியங்கள் எவ்விதத் தடங்கலும் இன்றி, குறைவும் இன்றிச் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஊழல், லஞ்சம், உறவினர்களுக்குச் சலுகை போன்ற நீதிக்கு எதிரான செயல்முறைகள் அடியோடு நீக்கப்பட்டிருக்கின்றன.

உழைப்பவரே உயர்ந்தவர், எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம், ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்கிற தத்துவத்தின் அடிப்படையில், அரசின் நடவடிக்கைகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றன

எதிர்காலத்தில் யார் ஆட்சிக்கு வந்தாலும், மக்கள் தந்த அதிகாரத்தைத் தவறான வழியில் துர்விநியோகம் செய்யாமல் தடுக்க, எச்சரிக்க—நீதியின் தீர்ப்பு உதவி செய்திடவேண்டும் என்று மக்களுக்குத் தந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டு வந்திருக்கிறது.

ஏழ்மை, வறுமை இவைகளை நீக்க நல்ல பல திட்டங்களைத் தீட்ட நிபுணர்களின் அறிவு நிச்சயம் பயன்படுத்திக்கொள்ளப்பட்டு, மக்களின்

மக்களின் எண்ணங்களை-மக்களின் விருப்பங்களைச் சட்டமாக்கவும், அவர்களது தேவைகளை நிறைவேற்றவும்தான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் சட்டமன்றத்திற்கு அனுப்பப்படுகிறார்கள் என்று அமரர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

அதனை உள்ளத்திலே இருத்தி, லஞ்ச லாவண்யம் இல்லாத-ஊழலற்ற-நீதித்துறையில் நிர்வாகம் தலையிடாத அரசை நடத்துகிற மாபெரும் பணியைச் செவ்வனே செய்ய உயிரைக் கொடுத்தாகிலும் பாடுபடுவோம். எங்களின் வாழ்வு வசதிகள் அத்தனையும் இழக்க வேண்டிய நிலை வந்தாலும்-அதற்காக எதிர்ப்படுகின்ற அத்தனை தடைகளையும் எதிர்த்து எங்கள் கடமைகளை நிறைவேற்றுவோம்.

கட்டளைப்படி நாங்கள் எங்கள் கடமையைச் செய்து வந்திருக்கிறோம்.

ஏழை, எளிய தாழ்த்தப்பட்ட, சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களின் மேம்பாட்டுக்காகப் பகுத்தறிவுப் பகலவனாம் தந்தை பெரியார் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் மகத்தானவைகளாகும். அவர்களுக்குக் காணிக்கையாக அறிவித்து அரசை நடாத்திய அமரர் அண்ணா அவர்களைப் பின்பற்றியே, அடியொற்றியே இந்த அரசு நடந்து வருகிறது.

தந்தை பெரியார் அவர்களுக்கு நூற்றாண்டு விழா நடத்தும் அரிய வாய்ப்புக் கிட்டியதொன்றே எங்களுக்குப் பெரும்பேறாகும்.

## மாண்புமிகு முதல்வர்

எனவேதான்—

மதுவிலக்கை நேர்மையான வழியில்-மதுவின் தீமையைப் பற்றி மக்களுக்குப் பிரச்சாரம் செய்வதற்குத் தக்கமுறையில் — தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழா நிறைவு நாளில் சட்டத்திருத்தத்தை அறிவித்துத் தாய்மார்களின் கண்ணீரைத் துடைத்திருக்கிறோம்.

அரசு ஊழியர்களுக்குத் தொண்டனாக இருப்பேன்; தோழனாக இருப்பேன் என்று அன்று கூறியதைப் போலவே, இந்தக் குறுகிய காலத்தில் அரசு ஊழியர்களுக்கு இந்த அரசு அளவற்ற சலுகைகளை அளித்து வந்திருக்கிறது.

வேளாண்மைத்துறை — கல்வித்துறை போன்ற பல்வேறு துறைகளும் மேம்பட்டு விளங்கிடத்தக்க பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் தொடர்ந்தாற்போல எடுக்கப்பட்டு வந்திருக்கின்றன.

தமிழகத்திலே உள்ள யாரோ ஒரு குடும்பம், யாரோ ஒரு தனிமனிதர், எங்கோ கஷ்டப்பட்டால் நமக்கு என்ன என்று நினைக்கின்ற மனநிலை-அலட்சியம்-அந்தச் சுயநலம் யாருக்கும் வந்துவிடக்கூடாது என்பதிலே, இந்த இரண்டரையாண்டுக் காலமும் நாங்கள் மிகமிக எச்சரிக்கையாகவே இருந்து வந்திருக்கிறோம் என்பதைத் தெளிவுப்படுத்த வேண்டியது என்னுடைய நீங்காத கடமை.

தொழிலாளர் நலனைக் கருத்தில் கொண்டு இந்த அரசு, மேற்கொண்ட முனைப்பான நடவடிக்கைகள், வேறெந்த அரசும் செய்யக்கூட நினைத்திராதவை என்பதை என்னால் உறுதியாகச் சொல்லிக்கொள்ள முடியும். தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களுக்குச் சட்டப்படி கிடைக்கவேண்டிய சலுகைகள் அவர்கள் முழுமையாகப் பெற்றிட வாய்ப்பளிக்கவும் அரசு பல சட்டத்திருத்தங்களைக் கொண்டு வந்தது இங்கே குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்பதற்கு உதாரணமாகத் திகழும் இந்த அரசில், தொழில்துறை பெரிதும் மேம்பட்டிருக்கிறது என்பதனை யாராலும் மறுக்கவோ, மறக்கவோ முடியாது.

பெரிய தொழிற்சாலைகள் மட்டுமல்ல, சிறு தொழில்களும் வளர்ச்சியுற வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு நாங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளாலே வேலைவாய்ப்புப் பெற்றோர் பல்லாயிரக்கணக்கானவர்கள் ஆவர்.

கிராமப்புற மக்களும் பயன்பெறும் விதத்தில் நகர்ப்புறங்களிலும் நிறைவேற்றப்பட்டு வரும் வேலைக்கு உணவுத் திட்டத்தின் மூலம் அமரர் அண்ணா அவர்கள் சொன்னதுபோல 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும்' நிலையை இந்த அரசு உருவாக்கியிருப்பது உண்மை-வெறும் புகழ்ச்சியில்லை!

ஆண்டுக்கு ஆண்டு இயற்கைச் சீற்றத்தால் உருவான புயல்-வெள்ள பயங்கரங்கள், பல்வேறு துறைகளிலும் ஏற்பட்ட அல்லது ஏற்படுத்தப்பட்ட வேலைநிறுத்தங்கள்-கிளர்ச்சிகள்-போராட்டங்கள் ஆகியவற்றால் உருவான இன்னல்கள், எதிர்ப்புகள், இடர்ப்பாடுகள் எல்லாவற்றையும் தாண்டி—நிதானமிழக்காமலும், அவசரமோ, ஆவேசமோ கொள்ளாமலும் இந்த அரசு நடைபோட்டு வருகிறது.

எங்கள் அடி ஒவ்வொன்றும், அமரர் அண்ணா அவர்கள் ஒருமுறை குறிப்பிட்டதைப் போல அளவான, ஸ்திரமான முறையில் வைக்கப்படுவதாகும் என்பதை அடக்கத்தோடு சொல்லிக் கொள்வதிலே நான் பெருமை கொள்கிறேன். பதவிச் சுவை எங்களுக்குப் பெரிதல்ல; எம் கடன் பணி செய்து கிடப்பதே என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்வதில் நான் பெருமிதம் அடைகிறேன்!



# பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் – ஒரு விளக்கம்

தமிழ்நாட்டிலுள்ள அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியை வடநாட்டில் அமைந்துள்ள நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்துதான் கொண்டு வர வேண்டியிருந்தது. அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியை இரயில் மூலமாகக் கொண்டு வருவதில் பல சிரமங்களும், இடையூறுகளும், தாமதங்களும் இருந்தன. இரயில் வாகன்கள் தேவைப்படும் நேரத்தில் கிடைப்பது அரிதாக இருந்தது. அத்துடன் இரயில் மூலமாக நிலக்கரியைக் கொண்டு வருவதற்கு அதிகச் செலவும் இருந்த காரணத்தால், அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியைக் கடல் மார்க்கமாகக் கொண்டு வருவதென முடிவு செய்யப்பட்டது. இதற்கான கப்பல்களை வாங்குவதற்கும், அதன் தொடர்பான பணிகளைக் கவனிப்பதற்கும் 1974-ஆம் ஆண்டு பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் என்ற ஒரு நிறுவனம் மாநில அரசுத் துறையின் சார்பில் நிறுவப்பட்டது.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம், 1974ஆம் ஆண்டில் இரண்டு கப்பல்களை வாங்கியது. அக்கப்பல்களுக்கு "எம் வி. 'தமிழ் அண்ணா", "எம்.வி. தமிழ்ப் பெரியார் ஈ.வெ.ரா" என்று பெயர்கள் சூட்டப்பட்டன. காலப்போக்கில் இவ்விரண்டு கப்பல்களும் உபயோகத்திற்குப் பயன்படாமல் போய்விட்டன.

இந்நிலையில் தமிழகத்தில் தூத்துக்குடியில் மிகப்பெரிய 210 மெகாவாட் நிறுவனத்திறன் கொண்ட ஒரு அனல் மின் நிலையம் அமைக்கப்பெற்று, அந்த அனல் மின் நிலையத்தின் முதல் நிலை ஜுலை 1979-ல் செயல்படத் தொடங்கியது. இந்த மின் நிலையம் முழு அளவில் செயல்படத் தொடங்கும்போது நாளொன்றுக்கு 650 மெட்ரிக் டன் நிலக்கரி தேவைப்படும். இந்த நிலக்கரியை வங்காளம் மற்றும் பீகார் மாநில்ங்களில் அமைந்துள்ள நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து கப்பல் மூலமாகத்தான் கொண்டுவரவேண்டியுள்ளது. எனவே, கப்பல் மார்க்கமாகக் கொண்டு வரும் பொருட்டு அதிக எடைத்திறன் கொண்ட கப்பல்களை வாங்குவது பற்றி உலக நாடுகளிலுள்ள பல்வேறு கப்பல் கட்டும் தளங்களுடன் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் தொடர்பு கொண்டது. நிலக்கரிப் போக்குவரத்தில் தூத்துக்குடி, ஹால்டியா போன்ற துறைமுகங்கள் சம்பந்தப்பட்டிருப்பதால் இந்தத் துறைமுகங்களின் அமைப்புக்கு ஏற்றவாறு கப்பல்களை வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. பல்வேறு கப்பல் கட்டும் தளங்களும், அத்தளங்களைச் சேர்ந்த விற்பனை நிறுவனங்களும் விலைப்பட்டியல்களையும் மற்றும் தொழில்நுணுக்கக் குறிப்புகளையும் பூம்புகார் கப்பல் கழகத்திற்குத் தெரிவித்திருந்தன. மற்ற கப்பல் தளங்களுடன் பல்கேரியக் கப்பல் தளத்தைச் சேர்ந்த நிறுவனங்களிடமிருந்தும் விலைப் பட்டியல் வரப்பெற்றன. பல்கேரியக் கப்பல்களுக்கு இரண்டு நிறுவனங்கள் கப்பல் ஒன்றுக்கு முறையே 11.00 மில்லியன் யு.எஸ் டாலரும், 11.75 மில்லியன் யு.எஸ். டாலரும் விலையாகக் கேட்டிருந்தனர். இந்த விலையில் 'கிரேன்ஸ்' மற்றும் 'கிராப்ஸ்' முதலிய உறுப்புகள் அடங்கவில்லை. இதற்காக ஏற்படும் உத்தேசச் செலவுகளையும் சேர்த்து பல்கேரியக் கப்பல் வாங்குவதற்கு ஆகும் செலவு 15.00 மில்லியன் யு.எஸ். டாலரிலிருந்து 15.50 மில்லியன் யு.எஸ். டாலர் வரை இருக்குமென்று குறிப்பிடப்பட்டிருந்தது.

கப்பல்களைக் குறைந்த விலையில் வாங்கும்பொருட்டு மேற்குறிப்பிட்டுள்ள 15.50 மில்லியன் யு.எஸ். டாலர் என்ற விலைக்கு எதிர் விலையாகக் கப்பல்

ஒன்றுக்கு 10.75 மில்லியன் யு.எஸ். டாலர் என்ற விலைக்கு வாங்க அனுமதி தெரிவிக்கப்பட்டது. இந்த எதிர் தொகையானது கப்பல் விற்கும் நிறுவனம் குறிப்பிட்டிருந்த தொகையைவிட கப்பல் ஒன்றுக்கு 4.75 மில்லியன் யு.எஸ் டாலர் அதாவது 3.80 கோடி ரூபாய் குறைவானது ஆகும். இந்தக் குறைந்த விலைக்குப் பல்கேரியக் கப்பல்களைக் கொடுக்க முடியாது என்றும், குறைந்த தொகையாக, கிரேன்ஸ் மற்றும் கிராப்ஸ் இவைகளுடன் சேர்த்து கப்பல் ஒன்றுக்கு 13.50 மில்லியன் யு.எஸ். டாலர் வேண்டுமென்று பல்கேரியக் கப்பல்களை விற்கும் நிறுவனம் தெரிவித்தது. இந்த 13.50 மில்லியன் யு.எஸ். டாலர் என்ற தொகை முதலில் கொடுக்கப்பட்ட ஆஃபரான 15.50 மில்லியன் யு. எஸ். டாலரிலிருந்து குறைக்கப்பட்ட தொகை ஆகும். அதாவது, கப்பல் ஒன்றுக்கு 2.00 மில்லியன் யு.எஸ். டாலர் வரை, அதாவது சுமார் 1.60 கோடி ரூபாய் வரை விலை குறைக்கப்பட்டது.

கப்பல் வாங்குவதற்கு முன்பு கப்பல்களை நேரில் சென்று பார்த்து அறிய மூன்று அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழு பல்கேரியநாட்டில் வார்ணாவிற்கு அனுப்பப்பட்டது. இந்தக் குழுவிற்கு 11.90 மில்லியன் யு. எஸ். டாலர் வரை ஒரு கப்பலுக்கு விலையாக நிர்ணயிக்கலாமென்று அரசு அதிகாரம் அளித்தது. இந்தக் குழு, கப்பல்களைப் பார்வையிட்டு, பல்கேரியக் கப்பல் விற்பனை நிறுவன அதிகாரிகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தியபின் மூன்று கப்பல்களை சராசரி விலையாக 13.00 மில்லியன் யு.எஸ். டாலர் செலவில் வாங்கலாமென்று அரசுக்கு உறுதியாகப் பரிந்துரை செய்தது. இந்தக் குழு நடத்திய பேச்சு வார்த்தையின் அடிப்படையில், இந்தக் குழுவின் தலைவர் பூம்புகார் கப்பல்போக்குவரத்துக் கழகத்திற்கு மூன்று கப்பல்களை சராசரி 13.00 மில்லியன் யு.எஸ்.டாலர் என்ற விலைக்கு பல்கேரிய அரசு மற்றும் தமிழக அரசின் விலை ஒப்புதலுக்கு உட்பட்டு வாங்க பல்கேரியக் கப்பல் விற்பனை நிறுவனத்திற்கு ''லெட்டர் ஆஃப் இன்டென்ட்'' (Letter of indent) கொடுத்திருந்தார். இந்தக் குழு செய்த பரிந்துரையில் 'கொராபோ இம்பக்ஸ்'

## பல்கேரிய கப்பல்களை வாங்குவதில் முறைகேடு எதுவும் நடக்கவில்லை

### குற்றச்சாட்டுகளுக்கு பல்கேரிய வர்த்தக அதிகாரி மறுப்பு

'பல்கேரிய கப்பல்களை வாங்குவதில் எந்தவித முறைகேடோ, தவறுதலோ நடக்கவில்லை

'கப்பல் பேரத்தில் முறைகேடுகள் நடந்ததாகச் சொல்லப்படும் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை; அவதூறானவை' என்று பல்கேரிய நாட்டு வர்த்தகப் பிரிவு அதிகாரி திரு ஆர். வி. சார்கோப் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

'' கப்பல் வாங்குவது குறித்து பல்கேரிய நாட்டு அரசுக்கும் இந்திய அரசுக்கும் இடையே தான் ஒப்பந்தம் ஏற்பட்டது. ஓர் அரசுக்கும் மற்றொரு அரசுக்கும் இடையே அரசு மட்டத்தில் நடந்த பேரம் குறித்து அவதூறு கூறுவதும் குற்றச்சாட்டுகளை சுமத்துவதும் மிகவும் வருந்தத்தக்கவையாகும். (It is a regrettable reflection on a Government to Government deal)'' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## 'விழுப்புரம் கலவரம் சாதிக் கலவரம் அல்ல' _ சதாசிவம் குழு தீர்ப்பு

''விழுப்புரத்தில் நடைபெற்றது சாதிக் கலவரம் அல்ல, இரண்டு சமூக விரோத கோஷ்டிகளுக்கிடையே ஏற்பட்ட மோதலே அது' என்று அக்கலவரம் குறித்து விசாரணைகள் நடத்த அரசினால் நியமிக்கப்பட்ட நீதிபதி சதாசிவம் தன்னுடைய தீர்ப்பில் கூறியுள்ளார்.

அந்தக் கலவரத்தில ஈடுபட்ட சமூக விரோதிகள் மீது தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நீதிபதி அவர்கள் கூறியதற்கிணங்க அந்தக் கலவரத்தில் சம்பந்தப்பட்டவர்கள் மீது குற்ற விசாரணை நடந்து வருகிறது.

விழுப்புரம் கலவரத்தில் பாதிப்புக்குள்ளானவர்க்கு உதவ தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கிறது. அங்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு 10 கிலோ அரிசியும், வேட்டி, புடவை செலவுக்காக ரூ. 25-ம், 256 குடும்பங்களுக்கு குடிசைகள் கட்டிக் கொள்வதற்காக முதலமைச்சரின் நிதியிலிருந்து 1,86,400 ரூபாயும் தரப்பட்டிருக்கிறது. அத்துடன் இந்த மோதவில் உயிரிழந்த 12 குடும்பங்களுக்கு குடும்பம் ஒன்றிற்கு 6,000 ரூபாய் வீதம் நிதி உதவியும் அளிக்கப்பட்டது.

கப்பல் நிறுவனத்தார் இந்தக் கப்பல்களை டெலிவரி எடுக்கும் நாளிலிருந்து 20 ஆண்டுகளுக்கு உதிரிப் பாகங்கள் கிடைப்பதற்கான உறுதியை ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுத் தருவதாகச் சொல்லியிருந்தார்கள். மேலும், அந்நிறுவனம் தனது அலுவலகம் ஒன்றினை சென்னையில் ஏற்படுத்தி இக் கப்பல்களில் பயன்படுத்தப்பெறும் உதிரிப் பாகங்களைத் தருவித்துத் தருவதற்கும் பழுது பார்ப்பதற்கும் முன்வருகிறது என்றும் குறிப்பிட்டிருந்தார்கள்.

இதற்கிடையில் 'சாம்சன்' என்ற கப்பல் கட்டும் தளம் தன்னுடைய கப்பல் விலையை 16.22 மில்லியன் யு.எஸ். டாலர் உயர்த்திவிட்டது என்றும் 'ஸலேபோ' என்னும் கப்பல் தளம் அதனுடைய விலையான 16.5 மில்லியன் யு.எஸ்.டாலர் பரிசீலனைக்கு உரியது என்றும் 'ஓசாகா' கப்பல் கட்டும் தளம் அதன் விலையைக் குறைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் குழுவின் பரிந்துரையின்படி கப்பல் ஒன்றுக்கு சராசரியாக 13.00 மில்லியன் யு.எஸ். டாலர் தொகையில் மூன்று பல்கேரியக் கப்பல்களை வாங்க அரசு அனுமதி அளித்தது. இதற்கிடையில் பல்கேரிய அரசின் 'கொராபோ இம்பக்ஸ்' நிறுவனம், பல்கேரிய அரசு கப்பல் ஒன்றுக்கு 13.20 மில்லியன் யு.எஸ்.டாலர் என்ற தொகையை வலியுறுத்துவதாகத் தெரிவித்தது. கப்பலின் விலையை நிர்ணயிப்பதில் பல்கேரிய அரசின் முடிவும் சம்பந்தப்பட்டிருப்பதால், தேவையானால் முடியாத பட்சத்தில் கப்பல் ஒன்றுக்கு 13.20 மில்லியன் யு.எஸ். டாலர் வரை கொடுக்கலாம் என்றும் எனினும், 13.00 மில்லியன் யு.எஸ். டாலர் விலைக்கே கப்பலை வாங்க அனைத்து முயற்சிகளும் எடுக்கவேண்டும் என்றும் அரசு அறிவித்திருந்தது. அரசின் ஆணைக்கேற்ப குழு, கப்பல் ஒன்றுக்கு சராசரி 13.00 மில்லியன் யு.எஸ். டாலர் என்ற நிலையில் ஒப்பந்தத்தை முடித்தது.

இந்த நிலையில் அரசுக்கோ, பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்கோ தெரியாமல் சில தகவல்களை இடைத்தரகர்கள் 'கொராபோ இம்பக்ஸ்' என்ற கப்பல் நிறுவனத்திற்குத் தெரிவித்தாகத் தெரிந்தது. இது குறித்து மூன்று டெலக்ஸ் நகல்கள் கப்பல் போக்குவரத்துக் கழக அதிகாரிகளுக்கு அவர்கள் 'வார்ணா' சென்றபொழுது கிடைத்திருக்கின்றன. இந்த டெலக்ஸ் நகல்கள் விவரம் 12.5.79 வரை அரசுக்குத் தெரியப்படுத்தப்படவில்லை. முதன் முறையாக சுமார் $1\frac{1}{2}$ மாத காலத்திற்குப்பிறகு அரசின் கவனத்திற்கு இது கொண்டுவரப்பட்டது. இடைத்தரகர்கள் கையாண்ட தவறுகள் அரசுக்குத் தெரிந்தவுடன் கப்பல் வாங்குவது சம்பந்தமாக பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் இடைத்தரகர்களுடன் தொடர்பு கொள்ளக்கூடாது, கப்பல்கள் வாங்குவது பற்றிய தொடர்புகள் இனி பல்கேரிய அரசுடன் நேரடித் தொடர்பாகத் தான் இருக்க வேண்டும்; வேறு எந்தத் தனிநபர் மூலமாகவும் இருக்கக்கூடாது என்று அரசு உடனடி ஆணை பிறப்பித்தது. அத்துடன் இந்தத் தவறுகளில் சம்பந்தப்பட்டவர்கள் மீது தக்க கடும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் அரசு ஆணையிட்டது.

இதற்கிடையில் 'பௌலாத் லைன்ஸ்' என்ற நிறுவனம் போலந்து கப்பல்களை சராசரி 12.77 மில்லியன் யு.எஸ் டாலர் என்ற விலைக்குக் கொடுக்க முன்வந்தது. மேலும் இந்த விலையை ரூபாய் நாணயங்களாகவும் பெற்றுக்கொள்ள முன் வந்தது. இந்த ஆஃபர் ஆனது பல்கேரியக் கப்பல்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட முடிவான விலையான 13.00 மில்லியன் யு.எஸ். டாலரை விடக் குறைவாக இருந்த காரணத்தாலும் இந்தக் கப்பல்களின் விலையை ரூபாய் நாணயங்களாகப் பெற்றுக்கொள்ள இந்த நிறுவனம் அறிவித்திருந்ததாலும், விவரத்தை பரிசீலனை செய்யுமாறு பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தை அரசு கேட்டுக்கொண்டது. இதைப் பரிசீலனை செய்யும் வரை பல்கேரியக் கப்பல்களை வாங்குவதற்கு அனுமதி தருவதை நிறுத்தி வைக்குமாறு டெல்லியிலுள்ள கப்பல் வளர்ச்சி நிறுவனம் கேட்டுக் கொள்ளப்பட்டது. 'பௌலாத் லைன்ஸ்' கொடுத்த விவரங்களின்படி நிலக்கரியை ஹால்டியா துறைமுகத்திலிருந்து தூத்துக்குடிக்குக் கொண்டு வர சராசரி டன் ஒன்றுக்கு ரூ. 6.71 அதிகமாகுமென்றும், அதனால் மின்வாரியத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1.50 கோடி அதிகம் செலவாகுமென்றும் கணக்கிடப்பட்டது. இந்தத் தொடர் செலவினைக் கணக்கில் கொண்டு, போலந்து நாட்டுக் கப்பல்களை வாங்குவது பற்றிய குறிப்பு நிராகரிக்கப்பட்டது. மூன்று பல்கேரியக் கப்பல்களை சராசரி 13.00 மில்லியன் யு.எஸ் டாலர் என்ற விலையில் நேரடியாக வாங்க முடிவு எடுக்கப்பட்டு மத்திய அரசின் அனுமதி கோரப்பட்டது. மத்திய அரசு இந்த விலையை அங்கீகரிக்குமுன்பு, மத்திய அரசின் கப்பல் இலாகா சம்பந்தப்பட்ட ஒரு உயர் அதிகாரியை பல்கேரியாவின் 'வார்ணாவிற்கு' அனுப்பி கப்பல்களின் உத்தேச விலையை நிர்ணயிக்கக் கோரியது. மேலும் மத்திய அரசினர் லண்டனில் உள்ள இரண்டு மதிப்பீட்டாளர்களின் மதிப்பீடுகளையும் கேட்டிருந்தார்கள். இதன் அடிப்படையில் மத்திய அரசு தனது கடிதத்தின் மூலம் (எண்: SW - MPS (12)/79 Miny.of Shipping & Tpt. dt.17-9-79). மூன்று கப்பல்களை சராசரி 13.00 மில்லியன் யு. எஸ். டாலருக்கு வாங்க அனுமதி அளித்தது. மேலும் மத்திய அரசின் டைரக்டர் ஜெனரல் ஆஃப் ஷிப்பிங் தனது கடிதத்தின்மூலம் (எண்.6.SDB. (10/79 dt. 22-9-1979) பல்கேரியக் கப்பல்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் விலை நியாயமானது என்று தெரிவித்துள்ளார்.

இந்தக் கப்பல்களின் மதிப்பீடு பற்றி, லண்டனிலுள்ள மூன்று தரமுள்ள மதிப்

பிட்டாளர்கள் கொடுத்துள்ள மதிப்பீடு களின் விவரங்களும், தமிழக அரசு ஒப்பு தல் அளித்த சராசரி விலையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| மதிப்பீட்டு நிறுவனத்தின் பெயர் | அரசு ஒப்புதலளித்த சராசரி விலை | கப்பல் 1 | கப்பல் 2 | கப்பல் 3 |
|---|---|---|---|---|
| | (மில்லியன் யு.எஸ்.டாலரில்) | | | |
| சி.எச்.ரக் அண் கோ, லண்டன் | 13.00 | 15.20 | 15.40 | 15.70 |
| டேவிஸ் புரூஸ் அண் கோ, லண்டன் | 13.00 | 15.40 | 15.50 | 15.75 |
| டேம்ப்ளின் அண் கோ, லண்டன் | 13.00 | 15.00 | 15.00 | 15.00 |

மேலே குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டு விலைகளுடன் ஒப்பந்த விலையை ஒப் பிட்டுப் பார்த்தால் பல்கேரியக் கப்பல் வாங்குவதுபற்றி அரசு அனுமதித்து உள்ள விலை மிகவும் லாபகரமானது என்பதில் துளியளவும் ஐயமில்லை. ஒப்பந்த சராசரி விலையான 13.00மில்லியன் யு.எஸ்.டாலர் என்பது முதலில் பல்கேரியக் கப்பல் விற் கும் நிறுவனத்தால் முதல் விலையாகக் குறிப்பிட்டிருந்த 15.50 மில்லியன் யு.எஸ் டாலர் என்ற தொகைக்கு எதிரானதாகும். ஒவ்வொரு கப்பலுக்கும் 2.50 மில்லியன் யு.எஸ். டாலர் அளவு விலை அதாவது ரூபாய் 2 கோடி வரை குறைக்கப்பட் டுள்ளது. மூன்று கப்பல்களுக்கும் சேர்த்து குறைக்கப்பட்டுள்ள தொகை சுமார் 7.5 மில்லியன் யு.எஸ். டாலர் அதாவது சுமார் ரூபாய் 6 கோடி ஆகும்.

## மருத்துவக் கல்லூரிகளில் அனுமதி


தமிழ்நாட்டில் உள்ள எட்டு மருத்துவக் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப்படுகின்ற 1015 எம்.பி.பி.எஸ்., வகுப்பு இடங்களில் 30 இடங்கள் வேறு மாநிலத்தைச் சார்ந்தோருக் காகவும், மூன்று இடங்கள் உடல் ஊனமுற்றவர் களுக்காகவும், பத்து இடங்கள் விதவைகளுக்கும், ஆறு இடங்கள் படையில் முன்னாள் / மாண்ட / பணியாற்றும் வீரர்களின் குழந்தைகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

பல்கேரியக் கப்பல் வாங்குவதில் விலையை நிர்ணயிப்பது குறித்த உண்மை நிலை இது தான். பல்கேரியக் கப்பல் வாங்குவதற்கு நடத்திய பேச்சு வார்த்தை கள் இரண்டு அரசு நிறுவனங்களுக்கு மிடையே நடந்துள்ள அதிகார பூர்வமான பேச்சு வார்த்தையாகும். கப்பல்களை வாங்கவிருக்கும் நிறுவனமும், விற்கவிருக் கும் நிறுவனமும் அரசு நிறுவனங்கள் என்ற நிலையில் முறைகேடு நடக்கவிருந் தது என்ற பேச்சுக்கே இதில் இடமில்லை.

இதுகுறித்து பல்கேரிய நாட்டு வர்த் தக அதிகாரி திரு ஆர்.வி. சார்கோப் அவர்கள் "பல்கேரிய அரசு லஞ்சம் கொடுத்ததாகக் கூறப்படும் புகார் ஆதார மற்றது, அவதூறானது. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்கு 3 கப்பல்கள் விற்க நடந்த பேரம் அதிகாரபூர்வமானது. இதில் சந்தேகப்படும்படி எதுவும் நடந் திருக்கும் என்று நினைப்பதற்கு இடமே யில்லை, ஒரு அரசுக்கும் இன்னொரு அர சுக்கும் இடையே நடந்த பேரத்தைப் பற்றி அப்படி சந்தேகிக்கப்படுவது வருந்தத் தக்கது" என்று டெல்லியில் பத்திரிகை யாளர்களிடையே தெளிவாகக் குறிப்பிட் டுள்ளார்கள்.

மத்திய அமைச்சராக இருந்த திரு மோகன்தாரியா அவர்கள் கடைசியாக பல்கேரியா வந்தபோது, குறிப்பிட்ட அந்த வகைக் கப்பல்களை நேரில் பார்வையிட்டு அவற்றை வாங்க அங்கீகாரம் அளித்திருந் தார். மேலும் அந்தக் கப்பல்கள் இன்னும் தமிழக அரசிடம் ஒப்படைக்கப்படவில்லை யென்றும் தெரிவித்துள்ளார்.

பல்கேரியக் கப்பல்களின் விலையை நிர்ணயிப்பதில் நடந்தவை என்ன என்பது பற்றிப் பொதுமக்கள் தெளிவுறத் தெரிந்து கொள்ளவேண்டுமென்ற கருத்தில் தான் இந்த விவரங்கள் இங்கு எடுத்துச் சொல் லப்பட்டிருக்கின்றன.



# அறநிலையத்துறை அலுவலர்களுக்கு சலுகைகள்

இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையின் நிர்வாகத்தில் சுமார் 25,000 அறநிலையங்கள் உள்ளன. இந்த அறநிலையங்களில் சுமார் 80,000 பணியாளர்கள் (அர்ச்சகர்கள் உட்பட) உள்ளனர். இவர்களுக்கு கடந்த இரண்டரை ஆண்டுக் காலத்தில் அரசு பல சலுகைகளை அளித்துள்ளது.

இந்த ஆலயப் பணியாளர்களில், பட்டியலில் சேர்ந்த ஆலய ஊழியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 10-ம் பட்டியலில் சேராத ஆலய ஊழியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 5-ம் 1-12-77 முதல் ஊதிய உயர்வு அளிக்கப்பட்டது.

துணைஆணையர் [உதவி ஆணையர் அந்தஸ்தில் செயல் அலுவலர்கள் உள்ள ஆலயங்களிலுள்ள பணியாளர்களின் ஊதிய உயர்வு கோரிக்கைகளைப் பரிசீலித்து, அவர்களின் பணி நிலை, பணியின் தன்மை, பணி விதிகள், கல்வித் தகுதி இவைகளைக் கருத்திற்கொண்டு சிப்பந்திகளுக்கு மாதம் ரூ. 10 முதல் ரூ. 40 வரை ஊதிய உயர்வு 1-7-79 முதல் அளிக்கப்பட்டுள்ளது.

இதர ஆலயங்களில் பணிபுரியும் பணியாளர்களை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து கீழ் நிலை ஊழியர்களுக்கு ( Lower Staff ) மாதம் ரூ. 5-ம் அதற்கு மேற்படாமலும் மேல் நிலை ஊழியர்களுக்கு ( Higher Staff ) ரூ. 10-ம் அதற்கு மேற்படாமலும் 1-7-79 முதல் சம்பள உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத தேவஸ்வங்களில்பணிபுரியும் ''கண்டிஜன்சி'' பணியாளர்களுக்கு 1-7-77 முதல் நபர் 1-க்கு ரூ. 5 பஞ்சப்படி உயர்வு அளிக்கப்பட்டது. மேலும் இவர்களில் 690 பேருக்கு ரூ. 10 வீதமும், 356 பேருக்கு ரூ. 5 வீதமும், 1-7-78 முதல் பஞ்சப்படி உயர்வு அளிக்கப்பட்டது. அதே போல் 1-7-79 முதல் 690 பேருக்கு ரூ. 20 வீதமும், 356 பேருக்கு ரூ. 10 வீதமும் பஞ்சப்படி உயர்வு அளிக்கப்பட்டது.

மேலும் ஆலயப் பணியாளர்களுக்கு இந்த ஆண்டு முதல் கீழ்க்கண்ட சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளன :—

வங்கியில் செலுத்தப்படும் ஆலயப் பணியாளர்களின் வருங்கால சேம நல நிதித் தொகைகளுக்கு வங்கியினால் கொடுக்கப்படும் வட்டி முழுவதையும் பணிக்கணக்கில் சேர்க்க வேண்டும் எனவும் இதில் எந்த ஒரு பாகத்தையும் நிர்வாகச் செலவிற்கு ஆலயக் கணக்கில் சேர்க்கக் கூடாது எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆலயப் பணியாளர் விபத்தில் இறந்தாலும் அல்லது ஊனமடைந்தாலும் அவரது குடும்பத்தைச் சார்ந்த ஒருவருக்கு அவர் விதிகளின்படி தகுதி வாய்ந்தவராக இருப்பின் அவருக்கு ஆலயத்தில் வேலைவாய்ப்பு அளிக்க முன்னுரிமை கொடுக்கலாம் என அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மனையிருந்து வீடு இல்லாத ஆலய ஊழியர்களுக்கு வீடு கட்டுவதற்கு முன்பணம் கொடுக்க வழிவகை செய்ய சட்ட விதிகளைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது,

ஈட்டிய விடுப்பு 120 நாட்கள் 1/11 என்ற விதிதப்படி சேர்த்துக் கொள்ளவும் மருத்துவ விடுப்பு 120 நாட்கள் எடுத்துக் கொள்ளவும் வழிவகை செய்ய சட்ட விதிகளை மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆலய ஊழியர்களுக்கு அவருடைய புதல்வி, புதல்வர்களுக்கும் திருமணத்திற்காக முன்பணம் கொடுக்க வகை செய்ய சட்ட விதிகளை திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆலயப் பணியாளர்களுக்கான குடும்ப நலத் திட்டத்தின் விவரங்கள் முடிவு செய்யப்பட உள்ளன.

# செழித்து வளரும் தொழில் துறை

தமிழக அரசின் தொழில்துறை கடந்த இரண்டரை ஆண்டுக் காலத்தில் குடிசைத் தொழில், சிறு தொழில், கிராமத் தொழில் வளர்ச்சிக்கான திட்டங்களை வகுத்து அவற்றைச் செயல்படுத்தும் தலையாய பொறுப்பை ஏற்று கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்ற கொள்கையை வெற்றிகரமாக நிறைவேற்றி வருகிறது. சிறுதொழில், கிராமத் தொழில் துறைகள் வளர்ச்சி, மிகுந்த முக்கியத்துவம் பெற்று வருகையில் பெரிய தொழில்கள் வளர்ச்சியும் புறக்கணிக்கப்படவில்லை. சிறுதொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும் நடுத்தர மற்றும் இதர தொழில்களின் வளர்ச்சிக்கும் மாநில அரசு ஊக்கம் அளித்து வருகிறது.

தொழிற்சாலையை உருவாக்குவது, மேம்படுத்துவது, அதற்கு வேண்டிய நிதிக்கு வகை செய்வது, அடிப்படைத் தேவைகளை மேம்படுத்துவது ஆகிய பணிகளையும் தொழில் துறை ஆற்றி வருகிறது. அரசு நிறைவேற்றும் பல்வேறு தொழில் திட்டங்களின் பயனாக 1978-79-ஆம் ஆண்டில் 1½ இலட்சம் புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன. நடப்பு ஆண்டில் 2 இலட்சத்திற்கும் மேலாக புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**டாக்டர் நாயுடம்மா அறிக்கை:**

கடந்த ஆண்டில் டாக்டர் நாயுடம்மா தலைமையில் நிறுவப்பட்ட கிராமக் கைத் தொழில் வல்லுநர் ஆய்வுக் குழு தனது அறிக்கையை அரசுக்குச் சமீபத்தில்சமர்ப்பித்துள்ளது. 300-க்கும் மேற்பட்ட திட்டங்களை அந்தக் குழு பரிந்துரைத்துள்ளது. இந்தத் திட்டங்கள் ஒவ்வொன்றையும் செயல்படுத்தக் கூடிய சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து, தனித்தனியாக உருவாக்கி அவைகளைப் பொதுமக்களிடையே பரவலாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**தீ குச்சித் தொழில்:**

2,000 தீப்பெட்டித் தொழிற்சாலைகளை குடிசைத் தொழிலாகத் துவங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டத்தினால் சுமார் 40,000 பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

**பட்டுத் தொழில் வளர்ச்சி**


1—4—1977 அன்று முசுக்கட்டை பயிரிடப்பட்ட நிலப் பரப்பு 11,500 ஏக்கராக இருந்தது. இன்று இந்நிலப்பரப்பு 21,500 ஏக்கராக அதிகரித்துள்ளது. இந்த ஈராண்டுகளில் பட்டுப் புழு வளர்ப்புத் தொழிற்பயிற்சித் திட்டங்களின் கீழ் ஏறத்தாழ 4,000 விவசாயிகள் பயிற்சி பெற்றுள்ளார்கள்.


நடப்பு ஆண்டு முடிவில் 1,50,000 பேர்கள் பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலில் ஈடுபடுவார்கள்.

**தேயிலைத் தொழில்**

நலிந்த மலைவாசிகள் சுமார் 5,500 பேருக்குத் தேயிலைத் தோட்டங்களிலும் தேயிலைத் தொழிற்சாலைகளிலும் வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு ரூபாய் 10 கோடி செலவில் 5

**அரியலூரில் அமைக்கப்பட்டுள்ள சிமெண்ட் ஆலை**





தேயிலைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படும். இதில் ஒரு தொழிற்சாலை 1979-80-இல் நிறுவப்படும். இது 1000 பேருக்குவேலை அளிக்கும்.

**தோல் தொழில்:**

நிறைவு செய்யப்பட்ட தோல்களைத் தயாரிக்கும் இரண்டு தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இராணிப்பேட்டை மற்றும் திண்டுக்கல்லில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், ஒன்று, வட ஆர்க்காடு மாவட்டம் பேரணாம்பட்டில் விரைவில் அமைக்கப்படும்.

**தென்னை நார்த் தொழில்**

ஆண்டு முழுவதற்கும் தமிழ்நாட்டில் கிராமப் பகுதிகளில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்களில் சுமார் 3,000 பேருக்கு வேலையளிக்கின்றன. இரப்பர் கலந்த தென்னங்கயிறு தயாரிக்கும் நிலையங்கள், பாய்கள் மற்றும் தூசு மிதியடிகள் போன்றவற்றைத் தயாரிக்கும் நிலையங்களைத் தோற்றுவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**மின்சாரம் மற்றும் மின் அணுத் தொழில்கள்**

சிறு தொழில் துறையில் தயாராகும் மின்னணுப் பொருட்களின் அளவு படிப்படியாக உயர்ந்து கொண்டே வருகிறது. 1970-71ல் 10 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பொருட்கள் தயாரிக்கப்பட்டன. இப்பொழுது அது ரூ. 900 இலட்சத்துக்கும் அதிகமாகும்.

**குறிப்பிடும்படியான சிறு தொழில்களின் வளர்ச்சி:**

**ஊதுவத்தி:** ஊதுவத்தித் தொழிலை அபிவிருத்தி செய்ய அரசு எடுத்துக்கொண்ட தனி முயற்சிகளின் காரணமாக இப்பொழுது மாநிலத்தில் 20 ஊதுவத்தித் தொழில் நிலையங்கள் உள்ளன.

**சவ்வரிசி:** நாட்டிலேயே சவ்வரிசி ''ஸ்டார்ச்சு'' மாவு தயாரிக்கும் பெருமை பெரும்பாலும் தமிழ்நாட்டிற்கே உரியதாகும். புரதச்சத்துடன் சவ்வரிசி தயாரிக்கும் திட்டம் ஒன்றை, இந்திய அரசின் உதவியோடு தமிழ்நாடு அரசு நிறைவேற்றி வருகிறது.

**கைத்தறித் துறையின் வளர்ச்சி:**

கைத்தறித் துணிகளின் உற்பத்தியைப் பெருக்குவதுடன் துணித்தேக்கத்தைத் தவிர்க்கும் வகையிலும், புது வண்ணம், புது வடிவமைப்பு மற்றும் புது ரகங்களில் கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டன. பாலிஸ்டர், அச்சிட்ட வாயில் சேலைகள் அச்சிட்ட பட்டுச் சேலைகள், போன்றவை முதன் முறையாகக் கைத்தறித் துணிகளில் அறிமுகப்படுத்தப்பட்டன.

கடந்த இரண்டு ஆண்டுகளில் 44,720 நெசவாளர்கள் தனியார் துறையில் இருந்து கூட்டுறவுத் துறையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். மேலும், தமிழ்நாட்டில் 118 கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் 1977-79 ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கூட்டுறவுத் துறையில் 1976-77-ல் ரூபாய் 36 கோடியாக இருந்த துணி உற்பத்தி 1978-79-ல் ரூ. 45 கோடி அளவிற்கு உயர்த்தப்பட்டது. இதற்கேற்ப 1976-77-ல் ரூ. 42 கோடியாக இருந்த கைத்தறித் துணிகளின் விற்பனை 1978-79ல் ரூ. 54 கோடியாக உயர்ந்தது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலப்பொருளான நூல் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டுத் தமிழக அரசு 12 கூட்டுறவு நூற்பு ஆலைகளை நிறுவி இயக்கி வருகிறது. இந்த நூற்பு ஆலைகளின் மொத்தத் திறன் 2.30 இலட்சம் கதிர்களிலிருந்து 1978-79-ல் 3.05 இலட்சம் கதிர்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. தவிர இரண்டாண்டுகளுக்கு முன்பு மாதந்தோறும் 4,500 பேல்களாக இருந்த உற்பத்தி, தற்போது 8,500 பேல் அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

குறைந்த விலையில் மக்களுக்குக் கைத்தறித் துணிகள் வழங்க மொத்தம் 15,000 தறிகள் ஜனதா ரக உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டு, ஜனதா துணிகள் இத்தறிகளின் மூலம் உற்பத்தி செய்து விற்பனைக்கு அனுப்பப்பட்டது. இவை தவிர, சொந்தத் தறியில்லாத சுமார் 40,000 நெசவாளர்களுக்கென, அடுத்த ஐந்தாண்டுகளில் 200 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

**சர்க்கரை ஆலைகள்**

1977-78-ஆம் ஆண்டு சர்க்கரை ஆலைகளில் பிழியப்பட்ட கரும்பின் மொத்த அளவு 54.65 இலட்சம் டன்கள். உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு 4.68 இலட்சம் டன்கள். 1978-79-ஆம் ஆண்டு சர்க்கரை ஆலைகளில் பிழியப்பட்ட கரும்பின் மொத்த அளவு 57.80 இலட்சம் டன்கள். உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு 4.95 இலட்சம் டன்கள்.

தென்னார்க்காடு மாவட்டம், உளுந்தூர்ப்பேட்டை வட்டத்தில் பெரிய செவலை கிராமத்தில் புதிய சர்க்கரை ஆலையொன்றைக் கூட்டுறவுத்துறையில் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 1980-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களுக்குள் இந்த ஆலை உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**டிட்கோ**

கடந்த இரண்டு ஆண்டுகளில் டிட்கோ ரூ. 10 கோடி அளவில் முதலீடு செய்து ரூ. 84 கோடி திட்ட முதலீடு உள்ள பல்வேறு பொதுத்துறை மற்றும் கூட்டுத்

துறை நிறுவனங்களைத் துவக்கியுள்ளது. இது ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும். தற்போது பொதுத்துறையில் நிறுவப்பட்டு வரும் 5 இலட்சம் டன்கள் உற்பத்தித் திறன் கொண்ட அரியலூர் சிமிண்ட் ஆலை இவ்வாண்டு ஆகஸ்டு மாதத்தில் உற்பத்தியைத் தொடங்கி இருக்கிறது.

**தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்)**

சிப்காட்டின் முக்கிய நோக்கம், நடுத்தர, பெரிய தொழில்களுக்குத் திட்டமிடுதலும், முன்னேற்றம் செய்வதும், விரிவாக்குதலும் ஆகும்.

இராணிப்பேட்டை,ஒசூர் ஆகிய பகுதிகளில் இரண்டு தொழில் இணையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. புதுக்கோட்டை இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 1979-80-ஆம் ஆண்டில் புதிய தொழில் இணையங்கள் தொடங்க சிப்காட் உத்தேசித்துள்ளது.

**தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்:**


1978-79-ஆம் ஆண்டில் 453 தொழில் பிரிவுகளுக்கு ரூ.904.25 இலட்சம் கடன் வழங்கியுள்ளது. இதனால் 13,670 பேர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாகியுள்ளது.

**தமிழ்நாடு உப்பு நிறுவனம்**

தஞ்சை மாவட்டம் மரவக்காடு, வடக்காடு பகுதியில் சுமார் 5,400 ஏக்கர் சதுப்புநிலப் பரப்பளவில் உப்பு உற்பத்தி செய்யும் திட்டத்தை உப்பு நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

## புதுக்கோட்டை மாவட்டத்தில் புது இரசாயனத் தொழிற்சாலை

மதுச் சாரத்தை (Alcohol) மூலப் பொருளாக வைத்து, அசிட்டிக் அமிலம், அசிட்டிக் அள்ஹைட்ரைட் போன்ற இரசாயனப் பொருள்களை உற்பத்தி செய்வதற்காக ரூ. 2.25 கோடி திட்டச் செலவில், பின்தங்கிய மாவட்டமான புதுக்கோட்டையில் உள்ள லட்சுமணன் பட்டி கிராமத்தில் ஒரு தொழிற்சாலை ''டிட்கோ'' கூட்டுத் துறையில் நிறுவப்பட்டுள்ளது. டிசம்பர் திங்கள் இறுதிக்குள் உற்பத்தியை இது துவங்கும். இதனால் வேலை வாய்ப்புப் பெறுவோர் 250 பேர்.



**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி)**

இந்த நிறுவனத்தின் பிரிவுகளில் உற்பத்தி மதிப்பு 1965-66-ல் ரூ. 389 இலட்சமாக இருந்தது. படிப்படியாக உயர்ந்து 1976-77-ல் ரூ. 1,062 இலட்சமாகவும் 1977-78-ல் 1187 இலட்சமாகவும் அதிகரித்துள்ளது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 1978-79 முதல் டான்சியால் எடுத்துக் கொள்ளப்படும் புதிய திட்டங்களில் கீழ்க்கண்ட திட்டங்கள் நிறைவேற்றப்பட அனுமதியளிக்கப்பட்டுள்ளன.



# சைனிக் பள்ளி, அமராவதி நகர்

## கோவை மாவட்டம்

### 6-வது வகுப்புக்கு மட்டும் 1980-ம் ஆண்டு ஜூலை வகுப்புத் தொடருக்கான நுழைவுத் தேர்வு

மேற்கண்ட தேர்வு 1980 பிப்ரவரி மாதம் 23, 24 தேதிகளில் நடைபெறும். (விடைகளை தமிழ், ஆங்கிலம், இந்தி, மற்றும் இந்தியப்பிரதேச மொழிகளில் எழுதலாம்.) இந்தத் தேர்வில் தேர்ச்சி பெற்ற சிறுவர்கள் நிர்ணயிக்கப்படும் தேதியன்று நேர்முகப்பேட்டி மற்றும் மருத்துவ தேர்வுக்கு, தேர்வு போர்டு முன் ஆஜராகவேண்டும். பள்ளியில் ஏற்படும் காலியிடங்களின் அளவுக்கேற்றவாறு தேவையான சிறுவர்கள் மட்டும்தான் இத்தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள், வெற்றிபெற்ற சிறுவர்கள் அவர்களது உயர்ந்த மதிப்பெண் வரிசையில் பள்ளியில் சேர்த்துக்கொள் ளப்படுவார்கள். ஆனால் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த சிறுவர்களுக்கு 15 சதவிகிதமும், பழங் குடி வகுப்பைச் சார்ந்த சிறுவர்களுக்கு 7½ சதவிகிதமும் இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அவர்களது தேர்ச்சிக்கான மதிப்பெண்களும் ஓரளவு குறைக்கப்பட்டுள்ளன. ஒருமுறை இந்த தேர்வு எழுதிய மாணவர்கள் மறுமுறை எழுத அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**வயது**

*1968 ஜூலை 2 மற்றும் 1970 ஜூலை 1-ந்தேதிக்கு இடையே பிறந்திருக்க வேண்டும். (இரண்டு நாட்களும் உள்பட).*

**தமிழ்நாட்டில் தேர்வு நிகழும் இடங்கள்**

| | |
|---|---|
| சென்னை | மதுரை |
| கடலூர் (புதுநகர்) | திருநெல்வேலி |
| தஞ்சாவூர் | வேலூர் (வ.ஆ. மாவட்டம்) |
| திருச்சிராப்பள்ளி | சேலம் |
| அமராவதிநகர் | |

**பள்ளி பாடத்திட்டம்**

திறமையான கல்வி, உணவு, வசதி மற்றும் விளையாட்டுப் பயிற்சிகள் அளிக்கப்படும். நல் ஒழுக்கமும், உடற்பயிற்சிகளும் விசேஷ முக்கியத்துவத்துடன் கவனிக்கப்படும். தேசிய பாதுகாப்பு அகாடமி நுழைவுத் தேர்வுக்கும், மத்திய செகண்டரி கல்வி போர்டாரால் 10+2 பாடத்திட்டத்தின் படி நடத்தப்படும். அகில இந்திய செகண்டரி தேர்வுகளுக்கும் சிறுவர்களைத் தயார் செய்யும்.போதனை மொழி ஆங்கிலம். தவிர உயர்-கீழ் மட்டத்தில் மாணவர்கள் தமிழ் அல்லது இந்தியைக் கட்டாயப் பாடமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

**பள்ளிக் கட்டணம்**

ஆண்டுக்கு ரூ. 3,500- (உணவு, இருப்பிடம், போதனை, பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் ஆகிய செலவுகள் உள்பட). உடை வகைகள் கட்டணம் (Outfit charge) ரூ. 500 முதல் ஆண்டும், மற்றும் ரூ. 250 பின்வரும் ஆண்டுகளிலும் செலுத்த வேண்டும். காப்புத் தொகை ரூ. 150 (இது பள்ளியைவிட்டுச் செல்லும்போது திருப்பித்தரப்படும்), கைச்செல வுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 250 செலுத்த வேண்டும்.

**தகுதி மற்றும் வருமான அடிப்படையில் அரசாங்க உதவித் தொகைத் திட்டங்கள்**

**தமிழ்நாடு**

தமிழ்நாட்டில் நிலைத்து வாழ்ந்துவரும் சிறுவர்களுக்கும் மற்றும் பள்ளியில் சேர்த்துக்கொள்ளும் வருடத்தின் ஜனவரி 1-ஆம் தேதியன்று குறைந்த பட்சம் மூன்று வருடங்களுக்குத் தமிழ்நாட்டில் தொடர்ந்து உத்தியோ கத்தில் இருந்து வந்திருக்கும் மற்ற மாநிலங்களைச் சேர்ந்த பெற்றோர் களின் பிள்ளைகளுக்கும் தாராளமாக உபகாரச் சம்பளம் கிடைக்கும்.

கூட்டாக பெற்றோர்களின் மாத வருமானம் ரூ. 500, ரூ. 600, ரூ. 800, ரூ. 1,000 வரையில் இருக்குமானால் அப்பொழுது அளிக்கப்படக்கூடிய உப காரச் சம்பளத்தின் மதிப்பு முறையே, ரூ. 3,000, ரூ. 2,250, ரூ. 1,500, ரூ. 750-

**பாதுகாப்பு அமைச்சகம்**

பணிபுரிந்து வரும் முன்னாள் JCOSக்கள், Other Rankகள் மற்றும் அவர் களுக்குச் சமமான கடற்படை விமானப்படைகளில் பதவிகளை வகித்தவர் களின் பிள்ளைகளுக்கு அளவான எண்ணிக்கையுள்ள பாதுகாப்பு அமைச்ச கத்தின் உபகாரச் சம்பளங்கள் கிடைக்கும்.

**மத்திய அரசு நேரடி ஆட்சிப் பகுதிகள்**

மத்திய அரசு நேரடி ஆட்சியில் உள்ள பாண்டிச்சேரி, காரைக்கால் பகுதி களைச் சேர்ந்த சிறுவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள் கிடைக்கும்.


**விண்ணப்பம் மற்றும் தகவல் தொகுப்பு**

விண்ணப்பப் படிவம், பள்ளித் தகவல் தொகுப்பு, மாதிரி வினாத்தாள் ஆகியவைகள் வேண்டு வோர் 50 பைசா தபால் தலை ஒட்டிய 25 செ.மீ X 20 செ.மீ அளவுள்ள சுயவிலாசமிட்ட உறை யுடன் "முதல்வர், சைனிக் பள்ளி, அமராவதிநகர் (அமராவதிநகர் தபால் அலுவலகத்தில் பெறு மாறு) அவர்கள் பெயருக்கு ரூ. 5க்கான கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டருடன் முதல்வர் அவர்களுக்கு மனுச்செய்து பெறலாம். பதிவுத் தபால் மூலம் பெறவிரும்புவோர் ரூ. 2.55க்குத் தபால் தலை ஒட்டிய சுயவிலாசமிட்ட உறை அனுப்ப வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பள்ளி முதல் வருக்கு வந்து சேர இறுதி நாள் 31.1.1980.

## மாவட்டத் தொழில் மையங்கள்

சிறு தொழில் மற்றும் குடிசைத்தொழில்கள் பெருகி வளர்வதற்கும் சிறு தொழில் முனைவோருக்குத் தேவைப் படும் எல்லா உதவிகளையும் ஒரே இடத்தில் கிடைப்பதற் கும், மாவட்டத் தொழில் மையங்கள் சென்னையைத் தவிர மற்ற எல்லா மாவட் டங்களிலும் அமைக்கப்பட் டுள்ளன.

தொழில் முனைவோர் அனுமதிகோரிப் பல்வேறு அலுவலகங்களுக்குச் செல் லாமல் சுலபமாக அனுமதி பெறும் வகையில் அரசு விதி களைத் தளர்த்தியும் பரவ லாக்கியும் உள்ளது. மாவட் டத் தொழில் மையங்கள் அமைத்ததன் விளைவாக 1979ஆம் ஆண்டு அக்டோ பர் திங்கள் வரை 3235 சிறு தொழில்கள் துவக்கப்பட்டு, 37,475 பேர்களுக்குவேலை வாய்ப்புக் கிடைத்துள்ளது. 3,471 கைவினைஞர்கள் வங்கிகளிலிருந்து ரூ. 22.33 இலட்சம் கடனாகப் பெற் றுள்ளனர். 210 சிறு தொழில் களுக்கு ரூ. 13.06 இலட்சம் கிராமத் தொழில் திட்டக் கடன் வழங்கப்பட்டுள்ளது. 1,134 சிறு தொழில்கள் ரூ. 282.59 இலட்சம், வங்கி களிலிருந்து கடனாகப் பெற் றுள்ளன.



(1) ஆடைக்குரிய தோல் உற் பத்தித் தொழிற்சாலை.

2. சந்தன எண்ணெய் தயா ரிப்புத் தொழிற்சாலை.

வேறு பல திட்டங்களும் ஆய் விலுள்ளன. இந்தப் புதிய திட் டங்கள் எல்லாம் முழுமையாக நிறைவேற்றப்படும் போது மேலும் சுமார் 500 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க ஏதுவா கும்.

**தமிழ்நாடு கனிம நிறுவனம்:**

இதுவரை இந்நிறுவனம் சுமார் 1,000 டன் கரும்பாறைகளை வெட்டியெடுத்து 3 ஜப்பானிய நிறுவனங்களுக்கு ஏற்றுமதி செய் துள்ளது. இதன் மூலம் ரூ. 7.78 இலட்சங்கள் அந்நியச் செலா வணியை டாமின் ஈட்டியுள்ளது. இந்த நிதியாண்டில் சுமார் 7,500 டன் கரும்பாறைகளையும் (மதிப்பு சுமார் ரூ. 44 இலட்சம்) சுமார் 15,000 டன் பிற கனிமங்களை யும் (சுமார் ரூ. 44 இலட்சம்) சுமார் 15,000 டன்கள் பிற கனிமங்களையும் (மதிப்பு ரூ. 5 இலட்சம்) வெட்டியெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு மேகனசைட் நிறுவனம்:**

இந்நிறுவனம் 6-2-79 முதல் சுரங்க வேலையைத் தொடங்கி யுள்ளது. பணிபுரியத் தொடங்கிய குறுகிய காலத்தில் இதுவரை 70,509 டன் மேகனசைட் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது. தனியார் துறையில் இந்நிறுவனம் இயங்கி வந்தபொழுது 2,000 ஏழைத் தொழிலாளர்களுக்கு இந்நிறுவனத்திலேயே வேலை வாய்ப்பு அளித்து மறு வாழ்வு கொடுக்கப்பட்டுள்ளது.

**கதர் கிராமத் தொழில் வாரியம்**

கடந்த இரண்டாண்டில் கதர் கிராமத் தொழில்கள் மூலம் 32,799 பேர்களுக்கு நிலையான வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்பட்டது. இவ்வாண்டில் 34,775 பேர்களுக்கு நிலையான வேலை வாய்ப்பை அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

1976-77-ல் ரூ. 381.51 இலட்ச மாக இருந்த கதர் உற்பத்தி, மேற்கொண்டு கடந்த இரண் டாண்டுகளில் ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ ரூ. 128 இலட்ச கூடுதலாக உற்பத்தியாயிற்று. இவ்வரசு அளித்த ஊக்கத்தினா லும், தள்ளுபடித் தொகைகளினா லும், 1976-77-ல் ரூ. 405.55 இலட்சமாக இருந்த கதர் விற் பனை, 1977-78-ல் ரூ. 607.64 இலட்சமாகவும், 1978-79-ல் ரூ. 613.88 ஆக உயர்ந்தது. நடப் பாண்டில் கதர் விற்பனை ரூ. 650 இலட்சமாகவும் உயரும்.

இவ்வண்ணமே, 1976-77-ல், ரூ. 1,502.26 இலட்சமாக இருந்த கிராமப் பொருள் உற்பத்தி, 1977-78-ல் ரூ. 1,925 இலட்ச மாகவும், 1978-79-ல் ரூ. 2463 இலட்சமாகவும் உயர்ந்தது. 1976-77-ல் ரூ. 1678 இலட்ச மாக இருந்த கிராமத் தொழில் பொருட்களின் விற்பனை, 1977-78-ல் ரூ. 2179 இலட்சமாகவும் 1978-79-ல் ரூ. 2594 இலட்ச மாகவும் உயர்ந்தது. நடப் பாண்டில் கிராமத் தொழில் பொருட்களின் விற்பனை ரூ. 3183 இலட்சமாக உயரும்.




# போக்குவரத்துத் துறையில் புதிய வளர்ச்சி




மக்களுக்குப் பணிபுரிவது என்ற நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட அரசு போக்குவரத்துக் கழகங்கள் இழப்பினைக் கருதாது, பொது நல நோக்கத்தோடு இதுவரை போக்குவரத்து வசதி இல்லாத கிராமங்களுக்கு போக்குவரத்து வசதி செய்து கொடுக்க வேண்டும் என்ற அரசின் கொள்கைக்கு இணங்க செயல்பட்டு வருகின்றன.

பெரும்பாலான பயணிகளுக்கு நன்மை ஏற்படும் வகையில் விரைவுப் பேருந்துகளின் கட்டணம் 976 மார்ச் மாதத்தில் கிலோ ீட்டருக்கு 6 காசு என்றிருந் து முதல் தடவையாக 1977 செப்டம்பர் திங்களில் $5\frac{1}{2}$ காசாகக் குறைக்கப்பட்டு, மேலும் 1978 ஏப்ரல் மாதத்திலிருந்து 5 காசாகக் குறைக்கப்பட்டுள்ளது.

நகரப் பேருந்துகளில் தற்போது மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் கட்டணச் சலுகைகள் போன்று, கிராமப்புற மாணவர்களும் பயனடையும்



வகையில் 33 1/3 சதவிகிதம் கட்டணச் சலுகை இக்கல்வியாண்டிலிருந்து அளித்து வருகிறது.

சர்வதேசக் குழந்தைகள் ஆண்டை முன்னிட்டு, இதுவரை 3 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு அளிக்கப்பட்ட இலவசப் பயணச் சலுகை 5 வயதுக் குழந்தைகளுக்கும் அளிக்கப்பட்டு வருகின்றது.

தொழிலாளர் நலம் கருதி, அரசுப் போக்குவரத்துக் கழக ஊழியர்கள் 5 குடும்ப அங்கத்தினர்களுடன் ஆண்டிற்கொரு முறை தமிழகத்தில் எந்த இடத்திற்கு வேண்டுமானாலும் இலவசமாகச் சென்று வர அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சலுகை போக்குவரத்துக் கழகங்களின் சரித்திரத்திலேயே இப்போதுதான் முதல் முறையாக அளிக்கப்பட்டுள்ளது.


ஊழியர்கள் சொந்தத்தில் வீடு கட்டிக்கொள்ள வசதியளிக்கும் வகையில் தனிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஊழியர்கள் கூட்டுறவுச் சங்க மூலமாக வீடு கட்டிக் கொள்ள கடன் வசதி தாராளமாக அளிக்கப்பட்டு வருகிறது.

இரவு நேரங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்குத் தற்போது சிற்றுண்டி வசதி அளிக்கப்பட்டு வருகிறது. இத்தகைய வசதி இதற்கு முன்பாக இருந்ததில்லை.

போக்குவரத்துக் கழகங்களில் சிறப்புப் பணி மூலமாகக் கிடைக்கும் பலன் ஊழியர்களுடன் பகிர்ந்துகொள்ளப்படுகிறது. இவ்வாண்டு, தந்தை பெரியார் கழகம், பல்லவன் கழகம் தவிர மற்ற எல்லாப் போக்குவரத்துக் கழகங்களும் ஊழியர்களுக்குச் சுமார் 20 சதவீதம் வரை ஊதியக் கொடை-கருணைத் தொகையாக கொடுக்கத் தீர்மானித்துள்ளது. இது தவிர வேலை நிறுத்தம் இல்லாமல் ஒத்துழைப்பு கொடுத்த ஊழியர்களுக்கு எவர்சில்வர் பாத்திரங்கள் சிறப்பு வெகுமதியாக அளித்து வருகின்றனர்.

போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு ஓய்வு பெறும் வயது 55 லிருந்து 58 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

விபத்து இல்லாமல் பேருந்துகளை நல்லமுறையில் ஓட்ட வேண்டுமென்ற உணர்வை ஓட்டுநரின் மனத்தில் தோற்றுவிக்கும் பொருட்டு, 'விபத்தின்றி ஓட்டுவதற்காக ஓட்டுநர்களுக்குப்பரிசு



அளிக்கும் திட்டம்' மேலும் கவர்ச்சிகரமாக்கப்பட்டுள்ளது.

அரசு போக்குவரத்துக் கழகங்களின் செயல் திறன் கடந்த 2½ ஆண்டுகளில் மிகவும் முன்னேற்றமடைந்துள்ளது. பேருந்து உபயோகத்திறன் 1977 முன்பகுதியில் 85 சதவிகிதமாக இருந்தது, தற்போது 90 சதவிகிதமாக அதிகரித்துள்ளது.

கடந்த இரண்டாண்டுகளாக அதிகமான இலாபம் ஈட்டியது, பேருந்துகளை ஓட்டியதில் ஏற்பட்ட முன்னேற்றம்தான் முக்கிய காரணமாகும். இந்தப் போக்குவரத்துக் கழகங்கள், சென்ற ஆண்டு தனிச் சட்டப்படி தாங்கள் செலுத்த வேண்டிய மோட்டார் வாகன வரிகளை விட, சிறப்பு மோட்டார் வாகன வரியாக ரூ. 687 இலட்சம் செலுத்தின. தமிழகத்திலுள்ள அரசு போக்குவரத்துக் கழகங்கள் நம் நாட்டிலேயே மிகச் சிறந்த முறையில் இயங்கிவரும் நிறுவனங்களில் ஒன்றாகும் என்ற நற்பெயர் ஈட்டியுள்ளன.




நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்துத்துறையில் கடந்த 2½ ஆண்டுகளில் அடைந்த முன்னேற்றம்

| | பல்லவன் (பெருநகர்) | பல்லவன் (விரைவு) | பல்லவன் (மாவட்டம்) | பாண்டியன் | சேரன் | சோழன் | அண்ணா | கட்டபொம்மன் | தந்தை பெரியார் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 புதிதாக விடப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை | 472 | 287 | 196 | 452 | 391 | 148 | 233 | 300 | 146 | 2625 |
| 2 புதிதாக ஆரம்பிக்கப்பட்ட வழித்தடங்கள் | 48 | 51 | 61 | 159 | 79 | 188 | 36 | 179 | 92 | 893 |
| 3 புதிதாக வசதிபெற்ற கிராமங்கள் | 29 | — | 177 | 757 | 205 | 393 | 395 | 63 | 120 | 2139 |
| 4 பேருந்து வசதிபெற்ற மக்கள் தொகை (இலட்சங்களில்) | 0.93 | — | 1.38 | 14.75 | 2.78 | 4.98 | 3.74 | 3.78 | 1.92 | 34.26 |
| 5 மோட்டார் வாகன வரிகளைவிட சிறப்பு மோட்டார் வாகன வரிகள் செலுத்துவதற்கு முன்பு அடைந்த இலாபம் (ரூ.இலட்சத்தில்) | 10 | 111 | 30 | 571 | 328 | 205 | 166 | 358 | 26 | 1805 |
| 1977-78, 1978-79 ஆண்டுகளுக்கான வழங்கிய ஊதியக் கொடை (ரூ.இலட்சத்தில்) | 79 | 19 | 22 | 88 | 59 | 44 | 18 | 68 | 10 | 407 |

# கல்வி வளர்ச்சியில் புதிய வரலாறு

கல்வியைக் கண்போலக் கருதி வருகிறது நமது தமிழகம்; கல்வியைச் செல்வமாகவும் நாம் கருதி வருகிறோம். கல்விப்பணி புரிவதில் நமது அரசு முனைப்பாகச் செயலாற்றி வருகிறது.

தமிழ்நாட்டில் தற்போது 36,000 பள்ளிகள் உள்ளன. ஆசிரியர்கள் எண்ணிக்கை 2½ லட்சமாகும். பயிலும் மாணவர்கள் எண்ணிக்கை 85 லட்சம் ஆகும்.


இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் தான் கல்விச் செலவு 25 விழுக்காட்டை எட்டியது. 1979-80ஆம் ஆண்டு பட்ஜெட்டில் மொத்தம் ரூ. 849 கோடியில், கல்விக்கு மட்டும் ரூ. 209 கோடி செலவாகும்.

**பள்ளிக்கல்வி**

பள்ளிகளுக்காக கூடுதல் ஆசிரியர் பதவிகள் 1977-78ல் சுமார் 1500 ஏற்படுத்தப்பட்டன. 1978-79ல் பள்ளிகளுக்காக 1500 பதவிகளும், மேல்நிலை பள்ளிகளுக்காக 1400 பதவிகளும் ஏற்படுத்தப்பட்டன. 1979-80ல் பள்ளிகளுக்கு 4000 பதவிகளும், மேல்நிலைப் பள்ளிகளுக்கு 2500 பதவிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தொடக்கப் பள்ளிகளில் மாணவர்கள் இடையில் நின்றுவிடாமல் படிக்க வகை செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் 1977-78 முதல் 1-3 வகுப்புகளில் மாணவர்கள் எவரும் தோல்வியுறச் செய்யப்படாமல் அனைவரும் மேல் வகுப்பிற்கு அனுப்பப்படுகின்றனர். ஒவ்வொரு உயர்நிலைப்பள்ளியிலும் மேல்நிலைப் பள்ளியிலும் கல்விக்குழு, விளையாட்டுக் குழு, பண்பாட்டுக் குழு, இளைஞர் நலப் பணிக்குழு என்று நான்கு குழுக்கள் அமைத்துக் கல்வித் தரத்தை உயர்த்த வகை செய்யப்பட்டுள்ளது.

அறிவியல் கல்வி போதனையின் தரத்தை உயர்த்த ஆண்டுதோறும் சில உயர்நிலைப்பள்ளிகளுக்கு ,பள்ளிக்கு ரூ. 55 ஆயிரம் வீதம் அறிவியல் ஆய்வுக் கூட மானியம் வழங்கும் திட்டம் செயல்படுகிறது. கடந்த இரண்டரை ஆண்டுகளில் 100 பள்ளிகள் பயன்பெற்றுள்ளன. 1977-78ல் வலம் வரும் அறிவியல் ஆய்வுக் கூட உந்து வண்டிகள் 6 வாங்கப்பட்டன. உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு அறிவியல் தளவாடங்கள் வழங்கவும் மானியம் தரப்படுகிறது. பள்ளிகளுக்குக் கட்டட வசதி செய்யவும் கூடுதலாக நிதி ஒதுக்கம் செய்யப்படுகிறது.



எஸ்.எஸ்.எல்.சி. பயிலும் மாணவர்கள் கம்பார்ட்மெண்டல் முறையின் கீழ், பாடம் பாடமாக எஸ்.எஸ்.எல்.சியில் தேர்வு பெறுபவர்களும் மேற்படிப்புக்குச் செல்லலாம் என்ற சலுகை தரப்பட்டது. முறையாகப் பள்ளிக்குச் சென்று படிக்காத இளைஞர்களின் நன்மைக்காக எஸ்.எஸ்.எல்.சி தேர்வு 1979 டிசம்பர் முதல் மீண்டும் நடத்தப்படுகிறது. 14 வயது முடிந்தவர்கள் இத் தேர்வை எழுதலாம்.

கிராமப்புற மாணவர்களுக்கான படிப்புதவித் திட்டத்தின் கீழ் இதுவரை தமிழ் நாட்டிலுள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒன்றியத்துக்கு ஆண்டுக்கு 2 மாணவர்களுக்கு மட்டுமே புதியதாகப் படிப்புதவித் தொகைகள் வழங்கப்பட்டு வந்தன. 1978-79லிருந்து ஒவ்வொரு ஒன்றியத்திலும் இப் படிப்புதவித் தொகையைப் புதிதாகப் பெறும் மாணவர் எண்ணிக்கை இரட்டிக்கப்பட்டது அதாவது 2 லிருந்து 4 ஆக உயர்த்தப்பட்டது.

ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் பயிலும் ஆங்கிலோ இந்திய மாணவர்களிடமிருந்து 1978-79ஆம் ஆண்டு முதல், கற்பிப்புக் கட்டணம் எதுவும் வசூலிக்க வேண்டாம் என்ற புதிய சலுகை தரப்பட்டுள்ளது.

**பள்ளியாசிரியர்கள் நலன்**

மூன்றாவது சம்பளக் குழு ஊதிய விகிதங்கள் அனைத்து நிருவாகங்களின் கீழும் உள்ள பள்ளி ஆசிரியர்களுக்கும் பொருந்துவனவாகும். அவ்வப்பொழுது தரப்படும் அகவிலைப்படி உயர்வுகள், 1.10.79 முதல் தரப்படும் கிராமப்புறப் பணிக்கான ஊக்குவிப்புப்படி ஆகியவையும் அனைத்து வகை நிருவாகங்களின் கீழ் உள்ள ஆசிரியர்களுக்கும் பொருந்துவனவாகும்.

செகண்டரி கிரேட் (இடைநிலை) தகுதி பெற்றிருந்தும் ஹையர் கிரேடு (இளநிலை) ஆசிரியர் பதவிகளில் பணி செய்து வந்த ஆசிரியர்களுக்கு அளிப்பதற்காகக் கடந்த இரண்டு ஆண்டுகளில் 3,000 ஹையர் கிரேடு பதவிகள் செகண்டரி கிரேடு பதவிகளாக உயர்த்தப்பட்டுள்ளன. இனி இவ்வாறு இத்தகைய பதவிகளை செகண்டரி கிரேடு பதவிகளாக உயர்த்தும் சலுகையை ஆண்டு தோறும் செப்டம்பர் முதல் தேதி முதல் வழங்கிட நிலையான ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இளநிலை ஆசிரியர்கள் இடைநிலைத் தகுதி பெற உதவுவதற்காக தமிழ்நாட்டுக் கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனத்தின் மூலம் 1980-81ஆம் ஆண்டு முதல் அஞ்சல் வழி நேரடித் தொடர்பு வகுப்பு ஒன்று ஆண்டு தோறும் 5000 பேர் பயன் பெறும் விதத்தில் நடத்தப் பெறும்.

நடுநிலைப் பள்ளிகளில் உள்ள தலைமை ஆசிரியர் பணியிடம் நிரந்தரமாகக் காலி ஏற்படும்போது அந்தந்த நிருவாகத்தின் கீழ் உள்ள செகண்டரி கிரேடு ஆசிரியர்களுள் யார் யார் பி.டி அல்லது தமிழ்ப்புலவர் தேர்ச்சி பெற்றுள்ளனரோ அவர்களுள் பணி மூப்புடையவரையே தலைமை ஆசிரியராக நியமிக்க வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது.

உயர்நிலைப் பள்ளிகளிலும் மேல்நிலைப் பள்ளிகளிலும், பள்ளிக்கு 750ம் அதற்கு மேலும் மாணவர் எண்ணிக்கை உள்ள பள்ளிகள் அனைத்திலும் அந்தந்தப் பள்ளியிலுள்ள ஆசிரியர்களில் பி.டி. சம்பளம் பெறும் ஆசிரியர்களுள் பணி மூப்பு மிகுதியாக உடையவர் உதவித் தலைமை ஆசிரியர் என அறிவிக்கப்பட்டு அவருக்கு மாதம் ரூ. 25 சிறப்பூதியம் வழங்கப்படும்.

அரசு ஊழியர்களைப் போல இனி அரசல்லாத பிற நிருவாகங்களின் கீழ் உள்ள கல்வி நிலையங்களின் ஆசிரியர்களும் பிற அலுவலர்களும் தங்களுடைய பணிப் பதிவேட்டின் மறுபிரதி ஒன்றைத் தாங்களே வைத்து வர அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆசிரியர்களுக்குக் காலத் தாழ்வின்றி ஒய்வு ஊதியம் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 20 ஆண்டு பணி முடித்தவர்கள் தாங்கள் விரும்பினால் ஓய்வூதியத்துடன் பணியிலிருந்து ஓய்வு பெற்றுக் கொள்ளலாம் என்று அரசு ஊழியர்களுக்குத் தரப்பட்ட சலுகை தனியார் மற்றும் உள்ளாட்சி மன்றப் பள்ளிகள், கல்லூரிகள் போன்றவற்றில் பணி ஆற்றும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கும் பொருந்துமெனத் தெளிவாக்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

பள்ளிக் கல்வித் துறையில் 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு என இரண்டு பிரிவுகள் பல ஆண்டுகளாக இருந்து வந்தன. அவற்றை ஒருங்கிணைக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை நன்கு ஆராய்ந்து இரண்டு பிரிவுகளையும் நியாயமான முறையில் ஒருங்கிணைக்க முடிவு செய்து அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

அரசுப் பள்ளிகளில் முன்னர் பல ஆண்டுகளாகத் தற்காலிகமாகப் பணிசெய்து வந்த பி.டி. ஆசிரியர்கள், தமிழ் ஆசிரியர்கள் ஆகியோர் பணியை வரன் முறை செய்வதற்காகத் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் குழு மூலம் தனியாக ஒரு சிறப்புத் தேர்வு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் 1.4.70க்குப் பின் நியமிக்கப்பெற்ற செகண்டரி கிரேடு ஆசிரியர்களுள் முழுத் தகுதி பெற்றவர்கள் அனைவருடைய நியமனங்களும் அவரவர் நியமன நாள் முதல் வரன் முறைப்படுத்தப் பட்டு, ஊதிய உயர்வு நிலுவைத் தொகைகளும் வழங்கப்பட்டுள்ளன.

சிறுபான்மையினர் அல்லாத பிற தனியார் பள்ளிகள் எல்லாம் தங்கள் பணியாளர்களை வேலை வாய்ப்பகங்கள் மூலமாகத்தான் தேர்ந்து எடுத்து நியமனம் செய்ய வேண்டும் என்றும், அப்பள்ளிகளில் உள்ள ஆசிரியர் பதவிகளில் 18 விழுக்காடு பதவிகளைத் தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைச் சாதியினருக்கு ஒதுக்கி ஆக வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.


தனியார் பள்ளி நிர்வாகங்கள் சிலவற்றில் முறை கேடான வகையில் பதவி நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள், பிற பணியாளர்கள் ஆகியோரை மீண்டும் பணியில் சேர்க்குமாறு பள்ளிக் கல்வித் துறை ஆணையிடும் பொழுது அவ்வாணைகளைச் சில நிர்வாகங்கள் செயல் படுத்த மறுத்தால் அத்தகைய பள்ளிகளில் உள்ள பணியாளர்களுக்கு அரசே நேரடியாகச் சம்பளம் வழங்க வேண்டுமென்றும், பாதிக்கப்பட்ட ஆசிரியரை அல்லது பிற பணியாளரை கூடுதல் ஆசிரியர் தேவையாக உள்ள பிறப் பள்ளிகளுக்கு அவர் பதவியோடு சேர்த்து மாற்றிவிடவும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

சென்னையில் ரூ. 10 லட்சம் செலவில் ஆசிரியர் இல்லம் கட்ட அனுமதி தரப்பட்டுள்ளது. ஆசிரியர்களின் குழந்தைகளுக்குத் தொழில் படிப்பு படிக்க ஆண்டுக்கு 80 படிப்புதவித் தொகைகளை வழங்கும் திட்டம் ஏற்பளிக்கப் பட்டுள்ளது. அத்தொகையின் மதிப்பு ஒரு மாணவருக்கு ஆண்டுக்கு ரூ. 500 ஆகும்.

தொடக்கப் பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்குப் பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி தரப்படும் என்றும் 1979 அக்டோபரில் அரசு அறிவித்துள்ளது.

### மேல்நிலைப் பள்ளிக் கல்வி

கிராமப்புற வளர்ச்சியை மனத்தில் கொண்டு, கல்வித் துறை நிபுணர்களைக் கலந்து ஆலோசித்து - 10+2+3 முறைக் கல்வியின் 2வது நிலை, பள்ளிகளிலேயே இருக்க வேண்டும் என இவ்வரசு ஆணை



இட்டது. 1978-79ல் 912 உயர்நிலைப் பள்ளிகளில் மேல்நிலைப் பள்ளி வகுப்புகள் தொடங்கப்பட்டன. (அவ் வகுப்புகளில் 1,14,000 மாணவ மாணவியர் 1978-79ல் பயின்றனர்). 1979-80ல் மேலும் 160 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டுள்ளன.

மேல்நிலைப் பள்ளிகளில் தமிழிலோ சிறுபான்மை மொழிகளிலோ பயிலும் மாணவர்கள் கற்பிப்புக் கட்டணம் செலுத்த வேண்டியது இல்லை என்ற சலுகையையும் இவ்வரசு தந்துள்ளது.

மேல்நிலைப் பள்ளிகளுக்கான பல்வேறு வசதிகளைச் செய்ய இவ்வரசு மிகத் தாராளமாக நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது. மேல்நிலைப் பள்ளிகளுக்காக 78-79ல் சுமார் 1,400 கூடுதல் ஆசிரியர் பதவிகளும் 78-79ல் 2500 பதவிகளும் ஏற்படுத்தப்பட்டன. அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறைகளும் ஆய்வுக் கூடங்களும் மொத்தம் சுமார் ரூ. 6.40 கோடி செலவில் கட்டித் தரப்படுகின்றன. அப்பள்ளிகளுக்கு அறிவியல் தளவாடங்களுக்காக ரூ. 4 கோடி அளவில் செலவிடப்படுகிறது. தனியார் மற்றும் நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறை, ஆய்வுக் கூடம் ஆகியவற்றிற்கு 40 விழுக்காடு அரசு மானியம் வழங்கும் செலவிற்காக 1978-80ல் ரூ. 1.75 கோடி ஏற்பளிக்கப்பட்டுள்ளது. மேலும் எல்லா மேல்நிலைப் பள்ளிகளுக்கும் நூலகப் புத்தகங்கள், ரூ. 37 லட்சம் செலவில் அளிக்கப்படுகின்றன.


மேல்நிலைப் பள்ளிகளில் பல்வேறு தொழிற்பாடங்கள் கற்றுத்தரப்படுகிறன. 709 பள்ளிகளில் தொழிற்பாட வகுப்புகள் உள்ளன. மேல்நிலைப் பள்ளி வகுப்பு மாணவர்களுள் சுமார் கால் பகுதியினர் தொழில் பாடங்களைப் பயிலுகின்றனர். அனைத்திந்தியாவிலுமே மேல்நிலைப் பள்ளி நிலையில் தொழிற் பாடங்களைக் கற்றுத் தருவதில் தமிழ்நாடு முதன்மை பெற்றுள்ளது.

### முதியோர் கல்வியும் பள்ளி சாராக் கல்வியும்

பள்ளி சாராக் கல்வித் துறைக்கு முதன்மை அளிக்கப்பட்டு இதற்குத் தேவை

யான கூடுதல் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அத் துறை 76-77ல் 374 ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒன்றியத்துக்கு ஒன்றுவீதம் முதலில் 374 பள்ளிச் சாராக் கல்வி மையங்களைத் தொடங்கியது. இம்மையங்களின் எண்ணிக்கை 77-78ல் 2 ஆகவும், 78-79ல் 4ஆகவும் உயர்த்தப்பட்டது. தற்பொழுது 1496 மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இம் மையம் ஒவ்வொன்றும் 3 ஆண்டு வேலை செய்யும் 10 மாத வகுப்புகள் மூன்று நடத்துகின்றன. ஒவ்வொரு 10 மாத வகுப்பிலும் ஒரு புதிய தொகுதி மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கின்றன. இம்மையங்கள் அனைத்திலும் இப்பொழுது பயில்வோர் சுமார் 45,000 பேர் ஆவர்.

மேற் சொன்னவாறு அரசு நடத்தும் பள்ளி சாராக் கல்வி மையங்கள் தவிர, ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் சொந்தப் பணத்திலிருந்து சுமார் 780 பிற ஊர்களில் பள்ளி சாராக் கல்வி மையங்களை நடத்தி வருகின்றன.



முதியோர்களுக்கு எழுத்தறிவிப்பதற்காக 1979-80 முதல் கிராமப் புறங்களில் சுமார் 6600 முதியோர் கல்வி மையங்கள் பல்வேறு திட்டங்கள் மற்றும் அமைப்புகளின் கீழ் தொடங்கி நடத்தப்படுகின்றன. இவற்றுக்கும் மேலாக மாநில அரசுத் திட்டத்தின் கீழ் 6100 மையங்களைத் தொடங்கி நடத்த 1979 நவம்பரில் ஏற்பளிக்கப்பட்டுள்ளது. அரசுக்கு முதியோர் கல்வி பற்றி ஆலோசனை கூற முதியோர் கல்விக்கான மாநில வாரியம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

### கல்லூரிக் கல்வி

இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் கல்லூரிக் கல்விக்குச் செலவிடும் தொகை இருமடங்காகியுள்ளது. கல்லூரிக் கல்விக்குச் செலவான தொகை 75-76ல் ரூ 10 கோடி, 76-77ல் ரூ. 12 கோடி, 77-78ல் ரூ. 19கோடி 78-79ல் ரூ. 24 கோடி, 79-80ல் ஒதுக்கியுள்ள தொகை ரூ. 22 கோடி.

கல்லூரிக் கல்வி நிருவாகத்தை மேம்படுத்துவதற்காக இயக்ககத்தின் வட்டார அலுவலகங்கள் 5 ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பல்கலைக் கழக மானியக் குழு 1974ஆம் ஆண்டிலேயே கல்லூரி ஆசிரியர் சம்பளங்களை உயர்த்த அப்போதைய அரசை அணுகியிருந்த போதிலும் இவ்வரசு பொறுப்பேற்ற பின்னர்தான் பல்கலைக் கழக மானியக் குழு ஊதிய விகிதங்களை 1.4.74 முதல் அமல் படுத்தியும் 1.1.77 முதல் பணப்பயன் வழங்கியும் ஆணைகளை வெளியிட்டு அமல் படுத்தியுள்ளது.

1979-80 முதல் கோயம்புத்தூரில் ஒன்றும் திருச்சிராப்பள்ளியில் ஒன்றும் ஆக இரண்டு புதிய சட்டக் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன.

## கல்லூரிகளுக்குச் சுய ஆட்சி உரிமை தரப்பட்டுள்ள முதல் மாநிலம் தமிழ்நாடு தான்!

சென்னைப் பல்கலைக் கழகத்தின் கீழ் உள்ள 6 கல்லூரிகளும் மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தின் கீழ் உள்ள 4 கல்லூரிகளும் ஆக மொத்தம் 10 கல்லூரிகளுக்கு இவ்வுரிமை தரப்பட்டுள்ளது. இதன் மூலம் அக்கல்லூரிகள் கல்வித் தரத்தை உயர்த்தப் பாடுபட வகை செய்யப்பட்டுள்ளது.



தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மாணவர்களுள் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் 60 சதவீதம் அல்லது அதற்கு மேலாக மதிப்பெண் பெறுபவர்களுக்கும் புகுமுக வகுப்பில் முதல் வகுப்பில் தேர்வு பெறுபவர்களுக்கும் ரூ. 300 உதவிப் பணம் வழங்கப்படுகிறது.

1977-78ஆம் ஆண்டிலிருந்து பட்ட வகுப்புகளில் பயிலும் ஷெட்யூல்டு வகுப்பினர், மலைச் சாதியினர் ஆகியோருக்கு (அவர்களுடைய பெற்றோர் ஆண்டு வருமானம் பற்றிக் கருதாமல்) முழுச் சம்பளச் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது. முன்னர் இருந்த வருமான வரம்பாகிய ஆண்டுக்கு ரூ. 2500 என்பது நீக்கப்பட்டு விட்டது.

1.12.77 அன்று மூன்றாண்டு அல்லது அதற்கு மேலும் பணி செய்திருந்த விளக்குநர்கள், பயிற்றுநர்கள் ஆகியோருள் அவரவர் துறையில் பட்ட மேற்படிப்புத் (எம்.ஏ., எம்.எஸ்சி., எம்.காம். போன்றவை) தகுதி பெற்றிருந்தவர்களுக்கெல்லாம் 1.12.77 முதல் துணைப் பேராசிரியர்கள் பதவி அளிக்கப்பட்டு அப்பதவிக்கான பல்கலைக் கழக மானியக் குழு சம்பள விகிதம் தரப்பட்டுள்ளது. இனிமேல் இந்தத் தகுதிகளைப் (3 அல்லது அதற்கும் அதிகமான ஆண்டுகள் பணியும் பட்ட மேற்படிப்புத் தகுதியும்) பெறுபவர்களுக்கும் இந்தச் சலுகை அவரவர் அத்தகுதியை அடையும் நாள் முதல் கிடைத்து வரும்.

பட்ட மேற் படிப்புக் கல்லூரி முதல்வருக்கு ரூ. 1200-1900 என்ற உயர் சம்பள விகிதம் அளிக்கப்பட்டுள்ளது.

கலைக் கல்லூரிப் பேராசிரியர்களுக்கும் பொறியியற் கல்லூரி விரிவுரையாளர்களுக்கும் ரூ. 700- 40-1100-50-1300-இ.பி.-50-1600 என்ற சம்பள விகிதத்தில் ரூ. 1100 தொடக்க அடிப்படைச் சம்பளமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தனியார் கல்லூரி ஆசிரியர்கள் முழுமையாகவும் காலத்தாழ்வின்றியும் சம்பளம் பெற்று வர வகை செய்யும் நோக்கத்துடன் தனியார் கல்லூரிகளுக்கு மானியம் வழங்கும் புதிய முறையை 1.6.77 முதல் அரசு செயல் படுத்தி வருகிறது. சம்பளம் வழங்கும் வகையில் அக்கல்லூரிகளுக்கு ஏற்படும் செலவில் நிகரப்பற்றாக்குறை முழுவதையும் அரசே ஏற்று வருகிறது.

பணியிலிருக்கும் பொழுது ஒருவர் இறந்துவிட்டால் அவர் குடும்பத்திற்கு ரூ. 10,000

தர வகை செய்யும் குழு ஈட்டுறுதித் திட்டம் தனியார் கல்லூரிகளுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது.

10+2+3 கல்வி முறையினால் கல்லூரி ஆசிரியர்கள் எவரும் பணி இழக்காத படி அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

தனியார் கல்லூரிகளில் முறையின்றி வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை நிர்வாகம் கல்வித் துறையின் ஆணைக்கு ஏற்பத் திரும்பப் பணியில் அமர்த்தாவிட்டால், சம்பந்தப்பட்டவர்களின் இசைவுடன் அந்த ஆசிரியரை அவருடைய பதவியோடு, வேறு ஒரு கல்லூரிக்கு மாற்ற கல்வி இயக்குநருக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

## தொழில் நுட்பக் கல்வி

சென்னையில் பேரறிஞர் அண்ணா தொழிற் நுட்பப் பல்கலைக் கழகத்தை இவ்வரசு தொடங்கியுள்ளது. கிண்டியிலுள்ள பொறியியல் கல்லூரியில் இந்தப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட நிறுவனங்களும் அந்தப் பல்கலைக் கழகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன;

1. சென்னைப் பொறியியற் கல்லூரி நிறுவனம், குரோம்பேட்டை


2. கட்டிடக் கலை - நகர அமைப்புப் பள்ளி, செங்கை

3. சென்னையிலுள்ள அழகப்பச் செட்டியார் பொறியியற் கல்லூரியைச் சேர்ந்த நெசவுத் தொழில் நுட்பம், தோல் தொழில் நுட்பம், இரசாயனம், பொறியியல் ஆகிய துறைகள்.

1979-80ல் தருமபுரி மாவட்டம் கிருஷ்ணகிரியில் பல் தொழில் நுட்பப் பயிலகம் (பாலிடெக்னிக்) புதியதாக நிறுவப்பட்டுள்ளது. சேலம் மாவட்டம் குமாரபாளையத்தில் நெசவுப் பொறியியல் டிப்ளமா படிப்பு நிறுவனம் ஒன்றும் 1979-80ல் தொடங்கிட ஏற்பளிக்கப்பட்டுள்ளது. தூத்துக்குடியிலும், நாகப்பட்டினத்திலும் உள்ள பாலிடெக்னிக்குகளில் 1979-80 முதல் மாணவியர் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன.

## விளையாட்டு

''விளையாட்டுக்கள் - இளைஞர் நலப் பணியைக்'' கவனிக்க இவ்வரசு தனித் துறை ஒன்றை அமைத்துள்ளது. 1978-79லிருந்து உயர்நிலைப் பள்ளி உடற் பயிற்சி ஆசிரியர் ஒவ்வொருவருக்கும் அந்தந்தப் பள்ளி விளையாட்டுக் கட்டண நிதியிலிருந்து ஆண்டு தோறும் சீருடைப் படியாக ரூ. 50- வழங்கப் படுகிறது.



60 வயதிற்கு மேற்பட்டவர்களும் வறுமையில் வாடுபவர்களுமான விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வு ஊதியம் வழங்குவதற்கான திட்டத்தை இவ்வரசு முதல் முதலாக ஏற்படுத்தியுள்ளது. அத்திட்டத்தின் கீழ் மாதம் ரூ. 75- வீதம் 1.4.1979 முதல் ஓய்வூதியம் பெறுவதற்குரிய 25 விளையாட்டு வீரர்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

# கலைப் பணிகள்

### நூலகங்கள்

தகுந்த நூலகக் கட்டிடங்கள் உள்ள இடங்கள் போகச் சென்னை நகரிலுள்ள 150 வட்டங்களிலும் நூலகக் கட்டிடங்கள் நல்ல முறையில் அதற்கெனத் தனியாகக் கட்ட ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

சேலம் நகரில் மாவட்ட மைய நூலகத்திற்கு நவீன வசதிகள் கொண்ட ரூ. 5-லட்சம் மதிப்புள்ள கட்டிடம் கட்ட ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

மாநில அரசு அலுவலர்கள் பெற்று வரும் ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்காலச் சலு



கைகள் போன்றவற்றை மாவட்ட நூலகக் குழுக்களின் கீழ் பணி செய்பவர்களுக்கும் விரிவாக்குவதுபற்றி ஆய்வு செய்யப்படுகிறது.

## தொல் பொருள் ஆய்வு

வரலாற்றுச் சிறப்புமிக்க நினைவுச் சின்னங்களைத் தொல் பொருள் ஆய்வுத் துறை பேணிப் பாதுகாத்து வருகிறது.

ஆங்காங்கு பல ஊர்களிலும் சிதறிக் கிடக்கும் சிற்பங்களையும் மதிப்புமிக்க பழைய ஓலைச் சுவடிகளையும் சேகரித்துப் பாதுகாப்பதற்கான திட்டம் ஒன்றை 9 மாவட்டங்களில் மேற்கொள்ள ஏற்பளிக்கப்பட்டுள்ளது. 1979-80ம் ஆண்டில் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள அத்தகைய சிற்பங்கள் முதலியவற்றைச் சேகரித்துத் தர்மபுரியில் ஒரு நிலையான அருங்காட்சியகத்தில் வைத்துப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## அருங்காட்சியகங்கள்

மாவட்டத் தலைமை இடங்கள் ஒவ்வொன்றிலும் அருங்காட்சியகம் ஒன்று நிறுவிட அரசு முடிவு செய்துள்ளது. இவ்வாண்டு சேலத்தில் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. சென்னை அருங்காட்சியகத்திலுள்ள வசதிகளும் மேம்படுத்தப்படும்.

அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டாகிய 1979ஐ ஒட்டிச் சென்னையில் ரூ 29 லட்சம் செலவில் குழந்தைகள் அருங்காட்சியகம் ஒன்றை அமைக்க ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

## இசை, நடனம், நாடகம்:


1979 சனவரியில் மதுரையில் இசைக் கல்லூரி என்று தொடங்கப்பட்டுள்ளது. (இது வரை சென்னையில் மட்டுமே இசைக் கல்லூரி இருந்து வந்தது).

அரசு அறிவித்துள்ள ஒரு புதிய திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் தொழில் மரபுக் கேற்பத் தமிழில் புதிய இசைப் பாடல்கள் எழுதும் கவிஞர் ஒருவருக்கு ரூ. 5 ஆயிரம் ரொக்கமாக வழங்கப்படும். தமிழ்ப் பண் பாட்டுக்கு இசைந்த வகையிலும் இசை நுணுக்கங்களுக்கேற்ற வகையிலும் புதிய மெட்டுக்களைப் புகுத்தும் இசைவாணர் ஒருவருக்கும் இத்தகைய ரொக்கப் பரிசு ஒன்று வழங்கப்படும்.

1979ஆம் ஆண்டு திருவள்ளுவர் நாளன்று சிறந்த கலைஞர்கள் 8 பேருக்கு 'அரசவைக் கலைஞர்' என்ற விருது வழங்கப் பட்டது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 1,000 வீதம் 5 ஆண்டுகளுக்கு மதிப்பூதியம் வழங்கப் பெறும்.

இளம் மாணவர்களுக்கு நாடகக் கலையில் தனிப் பயிற்சி அளிக்கவும் அதனுடன் பொதுக் கல்வி கற்பிக்கவும் வழிவகை செய்து நாடகத்தில் ஆர்வமுள்ள மாணவர்களை ஊக்குவித்து நாடகப் பள்ளி தொடங்கப்பட இருக்கிறது. இதற்கான பாடத் திட்டங்களை வல்லுநர் குழு ஒன்று வகுத்து வருகிறது.

வறுமையால் வாடும் கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் மேலும் மேலும் கலைஞர்களுக்கு ஓய்வூதியம்தரப்பட்டு வருகிறது. 79-80ல் கூடுதலாக 175 கலைஞர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கப்படும்.



## தமிழ் வளர்ச்சி

மாநில அரசுத் துறைகள், அலுவலகங்கள் எல்லாவற்றிலும் முழுதும் தமிழிலேயே செயல்படும் நிலையை வெகு விரைவில் கொண்டுவர வேண்டும் என்பது இவ்வரசின் கொள்கை. விதிவிலக்களித்த இனங்களைத் தவிர மற்ற இனங்களுக்கு அரசு அலுவலகங்களில் தமிழையே கையாளவேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். இதனைச் செயல் படுத்தச் சுணக்கம் காட்டும் அதிகாரிகள் மது தக்க ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது.

வறுமையில் உழலும் தமிழ் அறிஞர்களுக்கு மாதந்தோறும் உதவித் தொகை வழங்கும் திட்டம் இவ்வரசால் தொடங்கப் பட்டது. உதவித் தொகையாக மாதம் ரூ. 250- தரப்படுகிறது.

தமிழில் பகுதி நேர வகுப்புக்களைத் தொடங்கும் பிற மாநிலப் பல்கலைக் கழகங்கள், பிற கல்வி நிலையங்கள் ஆகியவற்றில் சுமார் 20க்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 15,000 வீதம் மானியம் அளிக்கப்பட்டுள்ளது.

தந்தை பெரியார் அவர்களுடைய எழுத்துச் சீர்திருத்தத்தை இவ்வரசு செயல்படுத்தியுள்ளது.

தமிழ் நூல்களைப் பிற மொழிகளில் பெயர்த்து வெளியிடவும் பிறமொழி நூல்களைத் தமிழாக்கம் செய்து வெளியிடவும் திட்டம் வகுத்துச் செயல்படுத்த வல்லுநர் குழுவின் உதவியுடன் நடவடிக்கை எடுக்கப் படுகிறது.

கம்பன், வள்ளலார் போன்ற தமிழ்ச் சான்றோர்கள் நினைவாகச் சென்னையில் தமிழ்க் கலை மையம், ஒன்று, நூலகம், படிப்பகம், கருத்தரங்கு மன்றம் போன்ற வசதிகளுடன் அமைக்க நடவடிக்கை எடுக்கப் படுகிறது. இதற்கான தனித் துறை ஒன்று ''தமிழ்ப் பண்பாட்டு மைய இயக்குநரின்'' கீழ் செயல்பட்டுவருகிறது.

உமறுப்புலவர் பெயரில் இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆராய்ச்சிக்கான மதுரை-காமராஜ் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சிப் பணியிடம் ஒன்று தொடங்க ரூ. 2 லட்சத்தை அறக்கட்டளைத் தொகையாக இவ்வரசு கொடுத்துள்ளது.

பாவேந்தர் பாரதிதாசன் நினைவாகச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் ரூ. 25,000 அறக்கட்டளை ஒன்றை அரசு நிறுவியுள்ளது. அத்தொகையின் வட்டியைக் கொண்டு ஆண்டு தோறும் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பெறும்.

'பாவேந்தர் பாரதிதாசன் 'விருது' ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. ஆண்டு தோறும் தமிழ்க் கவிஞர் ஒருவருக்கு இவ் விருது வழங்கப்பட்டு, அவருக்குப் பதக்கம் ஒன்றும் ரூ. 10,000 ரொக்கப் பரிசும் அளிக் கப்படும். 1978-க்கான விருது கவிஞர் சுரதாவுக்கு அளிக்கப்பட்டது. 1979க்கான விருது மறைந்த கவிஞர்கள் வாணிதாசன், எஸ். டி. சுந்தரம் ஆகியோரின் குடும்பத்தவர்களுக்கு வழங்கப்பட்டது.

'தமிழ்த் தென்றல் திரு வி. கல்யாண சுந்தரனார் விருது' என ஒன்றும் புதிதாக ஏற்படுத்தப்பட்டுச் சிறந்த தமிழ் எழுத்தாளருககு ஆணடுக்கு ரூ. 10,000 வழங்கப்படுகிறது. 1979-80க்கான விருது, மறைந்த திரு ஜெகசிற்பியனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தமிழறிஞர்களையும் தமிழ்ச் சான்றோர்களையும் போற்றும் அரசுக் கொள்கையின் அடிப்படையில் திருவாளர்கள் கா. அப்பாத்துரை, தி.சு. அவினாசிலிங்கம், ஞா. தேவநேயப் பாவாணர், ம. ப. பெரியசாமித் தூரன், வ. சுப்பையா ஆகியோருக்கு 79ல் நடைபெற்ற திருவள்ளுவர் நாளன்று 'செந்தமிழ்ச் செல்வர்' என்னும் விருது வழங்கப்பட்டது.

ஐந்தாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு- கருத்தரங்கு 1980 ஜூன் திங்களில் மதுரை நகரில் நடைபெறும். '68-ல் இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்கு அறிஞர் அண்ணா அவர்களுடைய அரசு செய்தது போல இந்த ஐந்தாவது மாநாட்டுக்கும் விரிவான ஏற்பாடுகளை அரசு செய்யும். இதையொட்டி மதுரை திருமலை நாயக்கர் மகாலில் ரூ. 28 லட்சம் செலவில் ஒலி-ஒளிக் காட்சி ஒன்றும் அமைக்கப்பட இருக்கிறது.






# உணவுத்துறையில் ஒப்பற்ற சாதனை!

தமிழக மக்களின் தலையாய உணவுப் பொருளான அரிசி, தாராளமாகவும் நயமான விலைகளிலும் கிடைத்து வருகிறது. அரசிடமும் கணிசமான அளவில் கையிருப்பு உள்ளது. இப்போது உணவு நிலைமையைப் பொறுத்தவரை பிரச்சினையே இல்லாத அளவுக்கு நிலைமை சுமுகமாக இருப்பது மிகுந்த மனநிறைவு அளிக்கக் கூடியதாகும். தமிழகத்தில் உணவு நிலைமை வசதியாகவும் சுமுகமாகவும் இந்த இரண்டு ஆண்டுகளில் இருப்பதைப்போல் சென்ற பத்துப் பதினைந்து ஆண்டுகளில் இருந்ததில்லை என்று துணிந்து கூறலாம். உணவு உற்பத்தியைப் பெருக்க விவசாயப் பெருமக்கள் எடுத்துக் கொண்டுள்ள பெரு முயற்சியின் காரணமாகவும், அரசின் விழிப்பான நடவடிக்கைகளின் காரணமாகவும், இந்த நிலைமை தமிழகத்தில் நிலவி வருகிறது. இது அனைவருக்கும் பெருமை அளிக்கும் ஒரு சாதனையாகும்.

1977-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் நாளிலிருந்து, நாடு முழுவதும், அரிசியைப் பொறுத்தவரையில் ஒரே உணவு மண்டலமாக அமையும் என்று மத்திய அரசு அறிவிப்பு செய்தது. அதன் விளைவுகளை அறுதியிட்டுக் கூற முடியாத நிலையில் அதனால் தமிழகத்தின் நலன்கள் பாதிக்கப்படகூடாது என்ற கவலையில், நிலைமையைச் சமாளிக்கத் தமிழக அரசு முன்னெச்சரிக்கையாகச் சில நடவடிக்கைகளை மேற்கொண்டது. அந்த முன்னேற்பாடுகளின் பலனாக இன்று நிலைமை சீராக உள்ளது என்பது தமிழக அரசின் துணிவான நடவடிக்கைகளுக்கும், தெளிவான கொள்கைகளுக்கும் சிறந்த சான்றாக அமைந்துள்ளது.

**விவசாயிகளின் நலனுக்கு உகந்த வகையில் கொள்முதல்:**


கடந்த காலத்தில் செய்யப்பட்டதுபோல் விவசாயிகளிடம் நேரடிக் கட்டாயக் கொள்முதல் செய்யப்படவில்லை. விவசாயிகள் தங்கள் உபரி நெல்லை எந்த வணிகர் அதிக விலை கொடுக்க முன் வருகிறாரோ அவருக்கு சுதந்திரமாக விற்றுக் கொள்ளுகின்றனர். வணிகர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த லெவியும் 1.6.79 முதல் விவசாயிகளுக்கு நலம் பயக்கும் வகையில் நீக்கப்பட்டது. மேலும், அரசு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் வாயிலாக நேரடிக் கொள்முதல் நிலையங்களைத் திறந்து விவசாயிகள் தாமாக முன் வந்து அளிக்கும் நெல்லை கீழ்க்கண்ட விலைகளில் வாங்கி வருகிறது.

| | | |
|---|---|---|
| சாதாரண ரகம் | குவிண்டால் | ரூ.105 |
| சன்ன ரகம் | குவிண்டால் | ரூ.109 |

மத்திய அரசு நிர்ணயித்துள்ள கொள் முதல் விலைகளோ, ரூ.95, 99 ஆகும். மாநில அரசு கூடுதல் விலை கொடுத்து வாங்குவனால் வெளிச்சந்தையிலும் அந்த அளவில் விலைகள் உறுதிப்பட்டுள்ளன.

**விநியோகம் செய்ய கடைகள்:**

ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு நியாய விலைக் கடை திறக்கப்படுமென்று இந்த அரசு பொறுப்பேற்றவுடன் அறிவிப்பு செய்தது. இவ்வாறு கிராமங்கள் அனைவற்றிலும் பல்லாயிரக்கணக்கான கடைகளைத் திறந்து இயக்குவதில் செலவு ஏராளமாக ஆகும். என்று உணர்ந்திருந்தபோதிலும்,. கிராம மக்களுக்கு இந்த வசதி கிடைக்கவேண்டுமென்ற கவலையில் அரசு இக்கொள்கை முடிவைச் செய்தது. கிராமங்களில் பொது விநியோக முறையை விரிவாக்க வேண்டுமென்று அனைத்திந்திய அடிப்படையில் மத்திய அரசு மாநில அரசுகளுக்கு அறிவுரை கூறுவதற்கு முன்னதாகவே தமிழகத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டு இத் திட்டம் செயல்படுத்தப்





பட்டு வருகிறது. இத்திட்டத்தில் நாடு முழுவதற்கும் முன்னோடியாகத் தமிழகம் விளங்குகிறது.

தமிழ்நாட்டில் உள்ள 16,660 வருவாய் கிராமங்களில் குடியிருப்புகள் இல்லாத கிராமங்கள் 925 நீங்கலாக, 15,735 குடியிருப்புகள் உள்ள வருவாய்க் கிராமங்கள் ஆகும். இவற்றில் ஏற்கெனவே ஏறக்குறைய 5200 கடைகள் இயங்கி வந்தன. இக்கடைகளில் அரிசி, கோதுமை, சர்க்கரை போன்ற உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வந்தன. மக்களின் அன்றாடத் தேவைகளுக்கு இன்றியமையாத மற்ற பொருள்களையும் இக்கடைகளில் விற்பதற்கு ஏற்பாடு செய்து அவற்றைப் பல்பொருள் நியாயவிலைக் கடைகளாக மாற்றும் நடவடிக்கையை அரசு மேற்கொண்டது.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் இரண்டு அணுகு முறைகளை அரசு பின்பற்றியது. ஏற்கெனவே இயங்கிவந்த உணவுப் பங்கீட்டுக் கடைகளைப் பல்பொருள் நியாய விலைக் கடைகளாக மாற்றுவது ஓர் அம்சம். கடைகள் இல்லாத கிராமங்களில் புதிதாகக் கடைகளைத் திறப்பது மற்றோர் அம்சம். இந்த இரண்டு அம்சங்களையும் ஒருங்கிணைத்து இத்திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பு தஞ்சை, தென்னார்க்காடு, திருநெல்வேலி, தர்மபுரி ஆகிய நான்கு மாவட்டங்களில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திடமும், எஞ்சிய மாவட்டங்களில் கூட்டுறவு அமைப்புகளிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஏற்கெனவே இயங்கி வந்த ஏறக்குறைய 5200க்கும் மேற்பட்ட உணவுப் பங்கீட்டுக் கடைகள், பல்பொருள் நியாயவிலைக் கடைகளாக முதல் கட்டமாக மாற்றப்பட்டன. புதிதாக 10718 கடைகள் திறக்கப்பட்டுவிட்டன. மாவட்டவாரியாகப் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள கடைகளின் விவரம் கீழே உள்ள பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளன:

| தொடர் எண். (1) | மாவட்டம் (2) | திறக்கப் பட்ட கடைகள் (3) |
|---|---|---|
| 1. | செங்கல்பட்டு | 1628 |
| 2. | வடார்க்காடு | 1481 |
| 3. | திருச்சிராப்பள்ளி | 571 |
| 4. | புதுக்கோட்டை | 558 |
| 5. | மதுரை | 605 |
| 6. | முகவை | 968 |
| 7. | கோவை | 436 |
| 8. | நீலகிரி | 3 |
| 9. | சேலம் | 569 |
| 10. | குமரி | (எல்லாக் கிராமங்களிலும் கடைகள் உள்ளன) |
| 11. | நெல்லை | 442 |
| 12. | தஞ்சை | 1,040 |
| 13. | தர்மபுரி | 613 |
| 14. | தென்னார்க்காடு | 1,804 |
| | | 10,718 |

அறுவடைக் காலத்தில் உற்பத்தியாகும் பொருட்களை உற்பத்தி செய்யும் இடங்களிலேயே வாங்கி தரமான பொருள்களை நயமான விலைகளில் விற்க இத்திட்டத்தின் கீழ் கூட்டுறவு அமைப்புகளும், நுகர்பொருள் வாணிபக் கழகமும் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன. குறிப்பாகத் தமிழகத்தில் பற்றாக்குறையாக உள்ள பயறு வகைகள்போன்றவற்றை உபரியாக உற்பத்தியாகும் வெளி மாநிலங்களிலிருந்து வாங்கி நம் மாநிலத்தில் விற்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பொருள்களின் விலைகள் அவ்வப்போது பரிசீலிக்கப்பட்டு ஒத்த தரமுள்ள பொருள்களின் வெளிச்சந்தை விலைகளுக்குக் குறைவாகவே நிர்ணயிக்கப்படுகின்றன.

**விலைவாசிகளின் நிலைமை:**

அரசின் விழிப்பான நடவடிக்கைகள் மூலம் பெரும்பாலான அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்த முடிந்தது. கடந்த ஓராண்டுக்கு முன் கடலை எண்ணெய்யின் விலை அதிகமாக உயர்ந்து கவலைதருவதாக இருந்தது. இப்போது அது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கடலை எண்ணெய் தற்போது கிலோ ஒன்றுக்கு ரூ. 10 என்ற அளவில் எளிதாகக் கிடைக்கிறது. பொது விநியோக முறையின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பாமோலின் எண்ணெய் விநியோகித்ததன் மூலம் இவ்வாறு கட்டுப்படுத்த முடிந்தது.

சென்ற சில மாதங்களுக்கு முன் நிலவி வந்த விலைகளைவிட இப்போது சர்க்கரை விலையும் குறைந்துள்ளது. பருப்பு வகைகளைப் பொறுத்தவரை தமிழ்நாடு பற்றாக்குறை மாநிலம் என்பதால் பருப்புகளின் விலை உயர்ந்துள்ளது. நியாயமான விலையில் பருப்புகள் கிடைக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் உபரி மாநிலங்களில் உற்பத்தியாகும் இடங்களிலிருந்து மொத்தமாக வாங்கி பொது விநியோக முறையின் கீழ் விநியோகிப்பதற்குத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், கூட்டுறவுச் சங்கங்கள் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன.

**வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகள் :**

மக்களின் அன்றாடத் தேவைகளுக்கான இன்றியமையாப் பண்டங்களின் வணிகத்தை ஒழுங்குபடுத்தும் நோக்கத்துடன், வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகள், 1955-ஆம் ஆண்டு அத்தியாவசியப் பண்டங்களின் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ளன. நெல், அரிசி, சிறுதானியங்கள், கோதுமை, கோதுமைப் பொருள்கள், கடலை எண்ணெய், வனஸ்பதி, சர்க்கரை போன்ற பண்டங்களின் வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துவதற்கு தற்போது நடைமுறையில் உள்ள ஆணைகளில் முக்கியமானவை:

1. தமிழ்நாடு நெல் அரிசி (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை 1974.
2. தமிழ்நாடு கோதுமை, கோதுமைப் பொருள்கள் (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை 1974.
3. தமிழ்நாடு உணவு தானிய வர்த்தகர்கள் (உரிமம் வழங்கும்) ஆணை, 1968
4. தமிழ்நாடு நிலக்கடலை, நிலக்கடலைப் பொருள்கள் (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை 1974.
5. தமிழ்நாடு வனஸ்பதி (வர்த்தகக் கட்டுப்பாடு ஆணை 1974.
6. தமிழ்நாடு சர்க்கரை வர்த்தகர்களின் (உரிமம் வழங்கும்) ஆணை, 1962.
7. தமிழ்நாடு மண்ணெண்ணெய் (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை 1973.

இக்கட்டுப்பாடு ஆணைகளின் கீழ் மொத்த வணிகர்களுக்கு உரிமங்களும், சில்லறை வணிகர்களுக்கு பதிவுச் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. மேலும், பொது நலனுக்குக் குந்தகம் ஏற்படாதவண்ணம் செயல்படத் தேவையான ஆணைகள் பிறப்பிப்பதற்கும் இக்கட்டுப்பாடு ஆணைகளில் வகை செய்யப்பட்டுள்ளது. இந்தக் கட்டுப்பாடு ஆணைகளின்படி வர்த்தகர்கள், தங்களின் கொள்முதல் விற்பனைக் கையிருப்பு ஆகியவற்றின் விவரங்களை உரிமம் வழங்கும் அலுவலருக்கு மாதம் இருமுறை தெரிவிக்க வேண்டும். மேலும், வணிகர்கள் ஒரே சமயத்தில் வைத்துக் கொள்ளக் கூடியவற்றிற்கு உச்ச வரம்பும் இக்கட்டுப்பாடு ஆணைகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள், வர்த்தகர்கள், நுகர்வோர் ஆகிய பல்வேறு சாரார்களின் நலன்களையும் பாதுகாக்கும் முறையில் ஒருங்கிணைந்த உணவுக் கொள்கையைத் தமிழக அரசு பின்பற்றி வருகிறது. உணவு முறையில் நிறைவும் நிம்மதியும், ஆக்கமும், ஊக்கமும், நிலவும் சூழ்நிலையை எல்லாருடைய ஒத்துழைப்பால் இந்த இரண்டரை ஆண்டுக் காலத்தில் உருவாக்கக் முடிந்தது பற்றி தமிழக அரசும், மக்களும் பெருமிதம் கொள்ளலாம்.

# வணிகவரித் துறையின் அரும் பணிகள்

இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட உடன், விற்பனை வரி செலுத்துபவர்களின் குறைகளை நீக்கும் நோக்குடனும், துறை அதிகாரிகளின் ஊழல்களைக் குறைக்கும் பொருட்டும் அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை ஆராய்ந்து பரிந்துரை செய்யும்பொருட்டு ஓய்வுபெற்ற ஐ.சி.எஸ். அதிகாரியான திரு கெய்வார் அவர்களின் தலைமையின்கீழ் ஒரு குழுவை அமைத்தது. அக்குழு தனது பரிந்துரைகளை அரசுக்குத் தற்போது சமர்ப்பித்துள்ளது. அவைகளை அரசு பரிசீலித்துப் படிப்படியாகச் செயல்படுத்தி வருகிறது. இக்குழுவின் பரிந்துரையின் பேரில் விற்பனை வரிச் சட்டம் திருத்தப்பட்டு இணைக்க வரி விகிதமும் ஓரளவு குறைக்கப்பட்டுள்ளன.

**வரிச்சலுகைகள்:**

ஏழை மக்களால் பெரிதும் பயன்படுத்தப்படுகிற பன்ரொட்டி, பொறை போன்ற பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. மேலும் தயிர், வெண்ணெய், கோழிகள் போன்றவைகளுக்கும் வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. காதி கிராம கைத்தொழில் வாரியம் போன்ற நிறுவனங்களின் உதவியுடன் இயங்கி வரும் விசைச் செக்குகளால் தயார் செய்யப்படும் பொருள்களுக்கும், ஆதிவாசிகளின் கூட்டுறவுக் கழகங்கள் விற்பனை செய்யும் கறிவேப்பிலை முதலானவைகளுக்கு வரிவிலக்கு அளித்துள்ளது. ஒரு முனை வரி விதிப்பின்கீழ். மேலும் சில பொருள்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

**சிறு வியாபாரிகளுக்கு சலுகைகள்:**

ரூபாய் ஐம்பதாயிரத்துக்கும் மேற்படாத அளவிலான மொத்த விற்பனைத் தொகைக்குள் வியாபாரம் செய்துவரும் சிறு வியாபாரிகளுக்கு ஏற்கெனவே பலமுனை வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறது. இப்போது ரூ. 50,000-க்கும் ரூ. 1,00,000-க்கும் இடையே விற்பனைத்தொகை உடைய வணிகர்கள் இணக்க முறையில் வரி செலுத்த அரசு வழி செய்ததோடு, இணக்கமுறையில் இதுவரை ஒவ்வொரு ஐந்தாயிரத்துக்கும் செலுத்த வேண்டியிருந்த வரி விகிதத்தை மாற்றி, ஒவ்வொரு பத்தாயிரத்துக்கும் புது மாதிரியான விகிதத்தில் செலுத்த வழி செய்துள்ளது.

இதன் முன்னர் இம்மாநிலம் நான்கு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வந்தது. நிர்வாகம் திறம்பட நடைபெறும் பொருட்டு முன்பிருந்த கோட்டங்களைப் பிரித்துப் புதிதாக மூன்று கோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்போது இம்மாநிலம் வணிகவரியைப் பொறுத்தமட்டில் ஏழு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றது.

# சிறந்தோங்கும் சமூக நலம்



**1978-79**-ஆம் ஆண்டு ஊனமுற்றவருக்கு 500 மூன்று சக்கரச் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. நடப்பு ஆண்டு ரூ. 10,00,000 செலவில் 1000 மூன்று சக்கரச் சைக்கிள்கள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1978-79ஆம் ஆண்டு பள்ளி செல்லும் ஏழைக் குழந்தைகளில் காது கேளாதவருக்கு ரூ. 1.20 இலட்சம் செலவில் 300 காது கேட்கும் கருவிகள் வழங்கப்பட்டன. இந்த ஆண்டு குழந்தைகள் ஆண்டாக இருப்பதால் மேலும் 700 சேர்த்து 1000 காது கேட்கும் கருவிகள் வழங்கப்பட இருக்கின்றன.

1978-79ஆம் ஆண்டில் முதல் முறையாக ரூ. 12,500 செலவில் 50 ஊன்றுகோல்கள் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டன. நடப்பு ஆண்டில் ரூ. 2.50 இலட்சம் செலவில் 1000 குழந்தைகளுக்கு ஊன்றுகோல்கள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் உடல் ஊனமுற்றவருக்கு (ஒரு சில விதவைகளுக்கும் கூட)1000 பெட்டிக் கடைகள் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் உதவியோடு அமைத்துக் கொடுக்கப்படும்.

நடப்பு ஆண்டில் 100 மனநிலை சரியில்லாத குழந்தைகளுக்கு (60 பேர் தங்கும் வசதியுடனும், 40 பேர் வெளியில் இருந்து வந்து பயிற்சி பெறவும்) கல்வி, வாய்மொழிப் பயிற்சி, சமூகப் பணிகளில் பயிற்சி முதலியன அளிக்க ஒரு நிலையம் துவக்கப்பட இருக்கின்றது.



நடப்பு ஆண்டில் ஆதரவற்ற ஏழைப் பெண்களுக்கு 1000 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட இருக்கின்றன.

பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் முதல்வராக இருந்தபோது 1.4.1962 முதல் வயதானவர்களுக்கு ரூ. 20 ஒய்வு ஊதியமாக வழங்கப்பட்டது. ஏறக்குறைய 17 ஆண்டுகளுக்கு பின் தற்பொழுது இந்தத் தொகை ரூ. 25 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இது தவிர பொங்கல் மற்றும் சுதந்திரத் திருநாளில் இவர்களுக்குச் சேலைகள், வேட்டிகள் ஆகியவை வழங்கப்படுகின்றன. இந்த வயது 1978-79-ஆம் ஆண்டு 45ல் இருந்து 40 ஆகக் குறைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதுவரை ஊனமுற்றவருக்கு ரூ. 20 ஒய்வு ஊதியமாக வழங்கப்பட்டு வந்தது. நடப்பு ஆண்டிலிருந்து இந்தத் தொகை ரூ. 25 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இது தவிர பொங்கல் மற்றும் சுதந்திரத் திருநாளின் போது இவர்களுக்குச் சேலைகள், வேட்டிகள் ஆகியவை வழங்கப்படுகின்றன.


நடப்பு ஆண்டு முதல் ஆதரவற்ற விழி இழந்த நபர்களுக்கு, அவர் எந்த வயதானவராக இருந்தாலும், வயதானவர் பெறும் ஒய்வு ஊதியம் அவர்களுக்கும் வழங்கப்பெறுவது இத்திட்டத்தில் முக்கியமானதொரு அம்சசமாகும்.

1978-79ஆம் ஆண்டில் 40 பார்வை இழந்த மகளிர் தங்கும் வசதியுடன் கூடிய பார்வையிழந்தோர் மறுவாழ்வு இல்லத்தை தமிழ்நாடு அரசு நிறுவியுள்ளது. இந்த இல்லம் நடப்பு ஆண்டும் தொடர்ந்து நடத்தப்படும்.

ரூ. 25,00,000 செலவில் 20,000 பெண்கள் வீட்டில் இருந்தவாறு கைத் தொழில்களில் ஈடுபட்டு வறுமையைப் போக்கும் திட்டம் தற்பொழுது செயல்பட்டு வரு

கின்றது. இந்தத் திட்டத்தின்கீழ் கிழ்க்கண்ட கைத்தொழில்கள் அவர்களுக்குக் கற்றுத் தரப் படுகிறது:

1. சாக்குத் துண்டு தயாரித்தல்.
2. காகித உறைகள் செய்தல்
3. நூல் நூற்றல்.
4. தீப்பெட்டி செய்தல்
5. பாய் பின்னுதல்.
6. மூங்கில் கூடை செய்தல்.
7. பனை ஓலைக் பொருட்கள் தயாரித்தல்.
8. பருப்பு வகைகளில் பொடிகள் தயாரித்தல்.
9. பாட நோட்டுப் புத்தகங்கள் தைத்தல்.
10. ஜெம் கிளிப்புகள் தயாரித்தல்.



கிராமப்புறங்களில் கூட்டுறவு முறையில் தீப்பெட்டி மற்றும் காகித உறை தயாரிக்கவும், நகரங்களில் பாட நோட்டுப் புத்தகங்கள் தயாரிக்கவும் பெண்களுக்கான நிலையங்கள் நிறுவப்படும்.

திருமங்கலம் தொகுதியில் 500 பெண்களுக்கு ரூ. 80,500 செலவில் தீப்பெட்டி செய்யும் தொழிலுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தி இவர்கள் செய்யும் பொருட்களை விற்பதற்கு வகை செய்ய வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

ஆண்டு வருமானம் ரூ. 3000-க்குக் குறைவாக உள்ள விதவைகளின் குழந்தைகளில் ஒன்றுக்கு இலவச பாடப் புத்தகங்களும் நோட்டுப் புத்தகங்களும் வழங்கப்பட்டு வருகின்றன. இதனால் 1978-79ஆம் ஆண்டில் 3000 குழந்தைகள் பயன் அடைந்துள்ளனர். 1979-80 கல்வியாண்டிலும் இத்திட்டம் அமலாக்கப்பட இருக்கின்றது.

நடப்பு ஆண்டில் 50 விதவைகளின் குழந்தைகளுக்கு, ஒரு குழந்தைக்கு மாதம் ரூ. 36 வீதம் தொண்டுபுரியும் நிறுவனங்களின் மூலமாக அவர்களின் கல்வி மற்றும் பராமரிப்புக்காக ரூ. 22,000 செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் 250 ஆரம்பப் பள்ளிகள் துவக்கப்பட இருக்கின்றன. ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒரு குழந்தைகள் நல நிலையம் அமையவேண்டும் என்பதே நோக்கமாகக் கொண்டு, 9,000 குழந்தைகள் நல நிலையங்கள் உலகக் குழந்தைகள் ஆண்டான 1979ல் தொடங்கி 5 ஆண்டுக்குள்ளாகத் திறக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சென்னை, மதுரை மற்றும் வேலூர் ஆகிய நகரங்களில் பணிபுரியும் பெண்களுக்காக விடுதிகள் நிறுவப்படும். இதற்காகும் செலவில் 75 சதவிகிதத்தை மத்திய அரசும், 15 சதவிகிதத்தை மாநில அரசும், மீதி 10 சதவிகிதத்தை சம்பந்தப்பட்ட மாநகராட்சி-நகராட்சியும் ஏற்கும்.

உலக வங்கியின் உதவியுடன் 1980 முதல் ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. செழுமைகுன்றி பின்தங்கிய நிலையிலுள்ள 6 மாவட்டங்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறும். இதன் மூலம் 20,000 கிராமப் பெண்களும், 1,000 மேற்பார்வையாளர்களும் வேலைவாய்ப்புப் பெறுவர். 10,000 புதிய பாலப் பள்ளிகள் தொடங்கப்பட்டு அதன் மூலம் ஊட்டச் சத்துக் குறைவுள்ள குழந்தைகள் அனைவரும் பயனடைவர் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை 5 ஆண்டுகள் அமல்படுத்தும் வகையில் ரூ. 70 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய அரசின் மூலம் உடல் ஊனமுற்றவர்களுக்கு வழங்கப்படும் படிப்பு உதவி ஒன்பதாம் வகுப்பும் அதற்குமேலும் படிப்பவர்களுக்கு மட்டுமே முன்னர் வழங்கப்பட்டது. நடப்பாண்டு முதல் ஒன்று முதல் எட்டு வகுப்பு வரை படிப்பவர்களுக்கும் மாநில அரசு நிதியிலிருந்து படிப்பு உதவி வழங்கப்படும்.

இவ்வாண்டு முதல் உடல் ஊனமுற்ற குழந்தைகள் அனைவரும் பஸ்களில் இலவசமாகப் பயணம் செய்ய சலுகை அளிக்கப்படுகிறது.

1000 குழந்தைகள் பயனடையத்தக்க அளவில் அனாதை விடுதி நான்கு தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

எல்லா மாவட்டங்களிலுமுள்ள விதவைகளுக்கு உதவுவதற்காக சென்னை, தஞ்சாவூர், மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் 4 வழிகாட்டி நிலையங்கள் அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த வழிகாட்டி நிலையங்களின் மூலம் விதவைகளின் குழந்தைகளுக்குக் கல்வி வசதி செய்தல், விடுதிகளில் சேர்த்தல் சம்பந்தமான ஆலோசனையும், அவர்களுக்குச் சேர வேண்டிய இன்சூரன்ஸ் தொகை வருங்காலச் சேமநலநிதி போன்றவற்றினைப் பெற உதவியும் செய்யப்படுகிறது.

ரூ. 3000-க்குக் குறையாக ஆண்டு வருமானமுடைய குடும்பத்தைச் சேர்ந்த 16 முதல் 30 வயது வரையுள்ள பெண்கள் தட்டெழுத்து, சுருக்கெழுத்து போன்ற வேலைவாய்ப்புத் தொழில்களில் பயிற்சிபெற, பயிற்சியாளர் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு ரூ.150 வீதம் 1000 ஏழைப் பெண்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்திற்கு 1977-78ல் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டம் 1978-79லும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது.

# வளர்ந்து வரும் சுற்றுலாத் துறை




முதன் முறையாக, தமிழ்நாட்டில் சுற்றுலா எந்த அளவுக்குப் படிப்படியாக வளம் பெற்றுப் பெருகியுள்ளது என்பது பற்றி ஆய்வு நடத்தப்பட்டது. இந்த ஆய்வை ஒட்டி ரூபாய் 20 கோடி மூலதனச் செலவு கொண்ட நீண்டகாலத் திட்டம் வகுக்கப்பட்டது. மத்திய அரசு ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தை முடிவு செய்யும்போது, இந்த நீண்ட காலத் திட்டம் பற்றியும் பரிசீலிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. மாமல்லபுரம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் உள்ள சுற்றுலா மையங்களில் மேம்பாட்டுப் பணிகளை மத்திய அரசுத் துறையின் கீழ் எடுத்துக் கொள்ளப்படுமென்று மத்திய அரசு குறிப்பிட்டுள்ளது. மாமல்லபுரம், உதகமண்டலம், கோடைக்கானல் முதலிய இடங்களுக்காகவும் பெருந்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

1975-76ல் திட்ட மூலதனச் செலவு 22.70 இலட்சம் ரூபாய் மட்டுமேயாகும். இது 1977-78ல் ரூ. 46.10 இலட்சமாகவும், 1978-79ல் ரூ. 92.55 இலட்சமாக உயர்ந்துள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக கோயம்புத்தூர் இரயில் நிலையத்தில் சுற்றுலாத் தகவல் நிலையம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி இரயில் சந்திப்பு, புதுடில்லி, சென்னை விமான நிலையம் ஆகிய இடங்களிலும் இதுபோன்ற சுற்றுலாத் தகவல் நிலையங்கள் திறக்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவை விரைவிலேயே திறக்கப்படவிருக்கின்றன. சிதம்பரத்தில் புதிய சுற்றுலா அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. பிச்சாவரம் பகுதி சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளை இந்த அலுவலகம் கவனித்துக் கொள்ளும். சுற்றுலாப் பயணிகளின் நலனுக்காக மாமல்லபுரத்தில் சுற்றுலாமுகாம் கட்டுவதற்கு 3.5 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. பிச்சாவரத்தில் குடில்கள், சிற்றுணவகம், படகுத் துறை இன்ன பிற வசதிகள் செய்து கொடுப்பதற்காக 1979-80ல் ரூபாய் 3 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இராமேஸ்வரத்தில் துயிலிடக் கூடம், உடை மாற்றிக் கொள்வதற்கான அறைகள், தகவல் நிலையம், குளிக்குமிட மேம்பாடு, அணுகுசாலை, புல்தரை, தோட்டங்கள் முதலியவற்றிற்கு 1979-80ல் ரூபாய் 3 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஒகேனக்கல்லில் உணவு -உறங்கும் வசதியுடைய கூடம் கட்டுவதற்கு 3 இலட்சம் ரூபாய் செலவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

உதகமண்டலம், கோடைக்கானல், குற்றாலம் ஆகிய இடங்களில் ரூபாய் 25 இலட்சம் செலவில் குறைந்தவருமானத்தொகுதி சுற்றுலாப் பயணிகளுக்குத் துயில் கூட வசதிகளுக்கான பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இந்தப் பணிகள் விரைவிலேயே தொடங்க இருக்கின்றன.

ஏலகிரியில் ஒவ்வொரு குடிலிலும் தனி வசதியுடைய இரு அறைகள் கொண்ட குடில்கள் இரண்டு முடிக்கப்பட்டுள்ளன. மண்டபத்தில் துயிலகக் கூடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. ஆவுடையார் கோவில், விராலிமலை ஆகிய இடங்களில் ஓய்வுக் கொட்டகைகள், ஒதுக்கிடங்கள் (Toilets) ஏனைய அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவிருக்கின்றன.


ஏர்க்காட்டில் சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகள் பெருகியுள்ளன. சிற்றுண்டி வசதிகளுடன், படகு குழாம் கட்டும் பணி முடிவடையும் நிலையிலுள்ளது. இத்துடன் ஏர்க்காட்டில் 1979-80ல் ரூ. 3 இலட்சம் செலவில் துயில் மனையகம் கட்டுவதற்கும் திட்டம் உள்ளது.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மொத்தம் ரூபாய் 15 இலட்சம் செலவில் உதகை ஏரி சுற்றுப்புறங்கள் மேம்படுத்தப்பட்டு பாங்குற விளங்குகின்றன. இங்கு சுற்றுலாப் பயணிகளுக்குச் சிறந்த வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. ஏரிக்கருகாமையில் பூத்துக்குலுங்கும் மலர்த் தோட்டம் அழகுற அமைக்கப்பட்டுள்ளது.

கோடைக்கானலில் தொலை நோக்காடி நிலையங்கள் இரண்டு திறக்கப்பட்டுள்ளன. இவற்றைச் சுற்றுலாப் பயணிகள் மிகவும் ரசித்துப் போற்றுகின்றனர். இது போன்ற தொலை நோக்காடி நிலையங்கள் உதகமண்டலம், குன்னூர், ஏர்க்காடு ஆகிய இடங்களில் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

சென்னையில், ஜனதா ஓட்டல் ஒன்றைக் கட்டுவதற்கு இந்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது. இதற்கு ரூபாய் 3 கோடி மூலதனம் செலவாகும். இத்திட்டத்திற்காக நமது அரசு பெயரளவு விலையில் இந்திய அரசுக்கு மிகுந்த விலைமதிப்புடைய நிலம் வழங்கியுள்ளது.

இத்துறை நடத்தும் இளைஞர் இல்லம் (Youth Hostel) எப்போதும் போலவே பிரசித்திப் பெற்றுள்ளது. இளைஞர் இல்லத்திலிருந்து வருவாய் பெருகியுள்ளது. நாட்டிலேயே சிறந்த இல்லங்களில் ஒன்று மத்திய அரசு நியமித்த ஆய்வுக்குழு கருத்து தெரிவித்துள்ளது.



தென்னிந்தியாவிலுள்ள சுற்றுலா இடங்கள் அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டில் சுற்றுலா முக்கியத்துவம் பெற்ற இடங்கள் வெளிநாடுகளில் பலருக்கும் தெரியாதிருந்தது. இதனாலேயே இந்தியாவுக்கு வந்த அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளில் வெகு சிலரே தென்னிந்தியாவுக்கு வந்தனர். இந்தக் குறையைப் போக்குவதற்காகவே, 'ஏர் இந்தியா' நிறுவனம், இந்திய அரசு சுற்றுலாத் துறை ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் 1977 செப்டம்பரில் ''தென்னகம் நோக்கி'' (Desti nation South India) என்னும் திட்டத்தை நாம் செயல் படுத்தினோம். இத்திட்டத்தின் கீழ் உலகெங்கிலுமிருந்து பயணக் கட்டுரை எழுத்தாளர்கள், புகழ் பெற்ற புகைப்படக்காரர்கள் அறுபது பேர் நமது விருந்தினராக அழைக்கப் பெற்றிருந்தனர். அவர்கள் தமிழ்நாட்டில் முக்கியமான சுற்றுலா இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். வெளிநாட்டுப் பத்திரிகைகளில் இந்தப் பயணக் கட்டுரை எழுத்தாளர்கள் எழுதிய கட்டுரைகளின் பயனாக தமிழ்நாட்டுக்கு வெளி நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வரவு சுமார் 30 சதவீதம் அதிகரித்துள்ளது. இந்த வெற்றியினை அடிப்படையாகக்கொண்டு தென்னிந்தியாவை நோக்கி 1979 திட்டம் 1979 அக்டோபரில் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது. அவ்வமயம் தமிழ்நாட்டுக்கு வருகை தந்த பயணக் கட்டுரை எழுத்தாளர்கள் தமிழ்நாட்டை வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.



பெங்களூரில் நடைபெற்ற TAAI மாநாட்டிலும், ''பாட்டா (Pata) 1977இல் டில்லியில் நடத்திய மாநாட்டிலும் நமது சுற்றுலாத் துறை பயனுள்ள முறையில் சிறப்பாகக் கலந்து கொண்டது. இந்த மாநாட்டுக்கு வருகை தந்த பிரதிநிதிகள் நமது விருந்தாளிகளாக நமது மாநிலத்துக்கு வருகை தந்தனர். இவ்வாறெல்லாம் சுற்றுலா வளர்ச்சிக்காக நாம் மேற்கொண்ட முயற்சிகள் தமிழ்நாட்டுக்குச் சுற்றுலாப் பயணிகள் வருகையைப் பெருக்குவதற்குப் பெரிதும் துணைபுரிந்துள்ளன.

சுற்றுலாப் பயணிகளின் வருகையைப் பெருக்குவதற்காக, சென்னை விமான நிலையம் மூலமாக அனைத்து நாட்டு விமானங்கள் மேலும் பல செல்வதற்கும், சென்னை விமான நிலையத்தில் தற்போதுள்ள வசதிகளை மேலும் பெருக்குவதற்கும் துணைபுரியுமாறு இந்திய அரசையும் ஏர்-இந்திய நிறுவனத்தையும் நாம் வற்புறுத்தி வருகிறோம்.

பூம்புகார், பாஞ்சாலங் குறிச்சி ஆகிய இடங்களிலுள்ள சிலப்பதிகாரக் கலைக்கூடம், கட்டபொம்மன் கோட்டை, சுற்றுலாத் துறையின் பொறுப்புக்கு மாற்றப் பட்டுள்ளன. இந்த இடங்களில் சுற்றுலா வசதிகளை மேம்படுத்துவதற்கான வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

உள்நாட்டுச் சுற்றுலாவை ஊக்குவிப்பதற்காக எல்லா மாவட்டங்களிலும் மாவட்டச் சுற்றுலா நிலையங்கள் (Excursion Centres) அமைக்கத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. பிற துறைகளின் துணைகொண்டு பல்வேறு கட்டங்களில் இவை நிறைவேற்றப்படும்.

**சுற்றுலா வளர்ச்சிக்கழகம்:**

சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக அமைப்பு பலப்படுத்தப்பட்டு சீரமைப்பு நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப் பட்டுள்ளன. இதனால், இக்கழகத்துக்கு 1978-79ல் முதன்முறையாக நிகர இலாபம் கிட்டியது. 1976—77ல் இக்கழகத்தின் மொத்த வியாபாரத் தொகை சுமார் ரூபாய் 67 இலட்சமாக இருந்தது, 1978-79இல் ரூபாய் ஒரு கோடியைக் கடந்துள்ளது.

நெடுஞ்சாலைச் சுற்றுலாவைப் பெருக்கவும், சுற்றுலாப் பயணிகளுக்கு வழிப்பயண வசதிகளைச் செய்து கொடுக்கவும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், முக்கியமான தேசிய நெடுஞ்சாலைகளில் விடுதிகளைக் ( Motels ) கட்டியுள்ளது. 1978- செப்டம்பரில் இராணிப்பேட்டையில் ஒரு நெடுஞ்சாலை விடுதி திறக்கப்பட்டது. 1979 ஆகஸ்டில் உளுந்தூர்ப்பேட்டையில் இரண்டாவது நெடுஞ்சாலை விடுதி திறக்கப்பட்டது. இந்த விடுதிகள் வர்த்தகத்திலும்கூட வெற்றி கண்டுள்ளன.

தெரிந்தெடுக்கப்பட்ட, குறிப்பிட்ட சுற்றுலா இடங்களிலெல்லாம் சுற்றுலாப் பயணி மாளிகைகள் பல கட்டங்களில் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டில் கோடைக்கானல், மதுரை, ஏர்க்காடு ஆகிய இடங்களில் புதிய வசதிகள் கூடியுள்ளன. ஏனைய சுற்றுலா மாளிகைகளை விரிவுபடுத்தும் திட்டம் பல கட்டங்களில் செயல்படுத்தப் பட்டு வருகின்றது.

மதுரையில் ரூபாய் 35 இலட்சம் செலவில் பெரிய அளவில் சுற்றுலா மாளிகை ஒன்றும், ரூபாய் 22 இலட்சம் செலவில் கோயம்புத்தூரில் மற்றொரு சுற்றுலா மாளிகையும் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இவ்விரு திட்டம் சம்பந்தப்பட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

போக்குவரத்துப் பிரிவைச் சேர்ந்த பேருந்துகள் கூடுதலாகியுள்ளன. குளுமை வசதி செய்யப்பட்ட சொகுசுப் பேருந்துகள் இதில் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும்,இரண்டு சிறு பேருந்துகள் சேர்க்கவும் திட்டமுள்ளது.



# தமிழ்நாட்டில் வன வளர்ச்சி

வனக் கொள்கைக்கிணங்க தமிழ்நாட்டில் குறைந்த வருவாய் உள்ள காடுகளை அழித்து அவ்விடங்களில் அதிக வருவாய் தரும் மர இனங்களைத் தமிழக அரசு நட்டுப் பாது காத்து வருகிறது. அதே சமயத்தில் கரை யோரங்களில் வளர்ந்து முதிர்ந்த காடுகளைப் பாதுகாத்தும் வளர்க்கப்படுகின்றன.

1977-78 மற்றும் 1978-79 ஆகிய ஆண்டுகளில் வனங்களிலிருந்து சுமார் 1127 மற்றும் 1052 இலட்ச ரூபாய் வருவாயாக முறையே கிடைத்துள்ளது.

ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் அதிக நிலங்களில் காடுகளை உண்டாக்குவதை மைய மாகக் கொண்டு விலை உயர்ந்த மரங்களையும், தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் பயன் மரங்களையும்,தோல் பதனிடத் தேவையான மர வகைகளையும் நட்டுப் பாதுகாக்க முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது.


வன வளர்ச்சி மட்டுமின்றி சென்னைப் புகை வண்டி நிலையத்தை வளரச் செய்யும் பொருட்டும்,பேசின்பிரிட்ஜ் அருகிலுள்ள மின் சக்தி நிலையத்தில் புகையின் காரணமாக விலங்குக் காட்சிச் சாலையைச் சென்னைக்கு அருகாமையிலுள்ள வண்டலூர் என்னும் இடத்திற்கு மாற்றும் பணி சுமார் 105 இலட்ச ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விலையுயர்ந்த மரக் கடத்தலைத் தவிர்க்கவும்,வன ஆக்கிரமிப்பைத் தடுக்கவும், வனத் துறைத் தலைவரின் நேர்முகக் கண்காணிப்பில் குற்றப்பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட குற்றம் புரிபவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த தண்டனை அதிகரித்து மூன்று ஆண்டுக் கடுங்காவல் தண்டனையும், பத்தாயிரம் ரூபாய் வரை அபராதம் விதிக்கவும் தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

தீவிர மர உற்பத்தித் திட்டத்தின் கீழ் அரசாங்கம் மற்றும் பொதுப் பணியாளர்கள் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டு, சுமார் ஒரு கோடியே அறுபத்து ஐந்து இலட்ச செடிகளைக் கடந்த நடப்பாண்டில் நட திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட மற்றும் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைகளில் மலைவாழ் மக்களின் வளர்ச்சிக்காக அவர்களைப் பணியில் அமர்த்தி வேலை வாய்ப்பு அளித்து அவர்களின் நலன் பாது காக்கப்படுகிறது. மலை வாழ் மக்களின் மறு வாழ்விற்காக அவர்களுக்குக் குடியிருப்பு இல்லங்களும், பள்ளிகளும், இலவசப் புத்தகங்களும், உடைகளும் அளிக்கப்பட்டு வருகின்றன.

# தரமான பொருட்களைத் தயாரித்தளிக்கும் பணியில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம்

# டான்சி



மக்கள் நலனையே மனதில் கொண்டு அக்கறையுடன் செயலாற்றும் நிறுவனம் டான்சி!

டான்சி தொழிற்கூடங்களில் தயராகும் ஒவ்வொரு பொருளும் தீவிர தரக்கட்டுப் பாடுகளுக்கு உட்பட்டவை. டான்சி என்றாலே தரமான பொருட்கள். ஆம்! வாடிக்கையாளர்கள் இதனை நன்கு அறிவர்.

உங்கள் இல்லத்துக்கும் அலுவலகத் துக்கும் ஏற்ற பொருட்கள் மட்டுமல்ல— தொழிற்துறைக்கும் டான்சி தயாரித் தளிக்கும் பல்வேறு பொருட்களின் பட்டியல் இதோ!

கட்டுமானங்கள் மற்றும் கோபுரங்கள், இயந்திரக் கருவிகள், எஃகு மற்றும் மர மேசை நாற்காலிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், செம்புக் கம்பிகள், உறுப்புகள் (Forged, Pressed, and Diecast) பாதுகாப்பு காலணிகள் மற்றும் கை உறைகள், பிரஞ்ச் பாலிஷ் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

எடுத்துச் சொல்ல இத்தனைதான்... ஆனால் இன்னும் எத்துணை பொருட்கள்?

*தரத்துக்கோர் சின்னம் டான்சி!*

## டான்சி

## தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்

(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

# கூட்டுறவுத் துறை குவிக்கும் வெற்றிகள்

தமிழ்நாட்டில் அரசின் அனைத்து வளர்ச்சிப் பணிகளிலும் கூட்டுறவு இயக்கம் பெரும் பங்கு வகிக்கின்றது. இந்த வகையில், தீப்பெட்டி தயாரிக்கும் சிறிய தொழிற்சாலையிலிருந்து கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் சர்க்கரை ஆலைகள் போன்ற பெரிய கூட்டுறவுத் தொழிற்சாலைகள் வரையிலான கூட்டுறவுத் தொழில் நிறுவனங்களை நாம் பெற்றிருக்கிறோம்.

அதைப் போலவே விவசாயிகளுக்கு வாடகைக்கு டிராக்டர் வழங்குதல் போன்ற வசதிகள் அளிப்பதற்கும் கூட்டுறவுப் பணிச் சங்கங்கள் உள்ளன. கடலை எண்ணெய் தயாரித்தல் போன்ற வேளாண்மைப் பொருள்களுக்கான பெரிய பதனிடும் தொழிற்சாலைகளை நாம் பெற்றிருக்கிறோம். சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர் கூட்டுறவுச் சங்கங்கள், தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள், சலவைத் தொழிலாளர் சங்கங்கள், முடிதிருத்துவோர் கூட்டுறவுச் சங்கங்கள், மலைசாதியினருக்கான கூட்டுறவுச்சங்கங்கள் ஆகிய பல கூட்டுறவுச் சங்கங்கள் தற்பொழுது சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்காக உள்ளன.

கூட்டுறவு அமைப்புகள் மனித சமுதாயத்தின் வாழ்க்கை மற்றும் அதன் நடவடிக்கைகளின் முழுத் தேவைகளை நிறைவு செய்கிறது.

தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு கூட்டுறவுத்துறையில் எடுக்கப்பட்ட முக்கியமான திட்டங்களில் ஒன்று, கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு இன்றியமையாத நுகர்பொருட்கள் கிடைக்க வழிவகை செய்யும் திட்டமாகும். ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திலும் திறக்கப்படும் சில்லறைக் கடை மூலம் விநியோகம்செய்து, கிராமப்புறப் பகுதிகளில் அத்தியாவசியப் பண்டங்கள் நியாயமான விலையில் தாராளமாகக் கிடைக்க மாநிலம் முழுவதிலும் பொது விநியோக முறையை அரசு கொண்டு வந்துள்ளது.

செங்கல்பட்டு, வட ஆர்க்காடு மதுரை, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, சேலம், கோயம்புத்தூர், நீலகிரி, கன்னியாகுமரி, பெரியார் ஆகிய 11 மாவட்டங்களில் கிராமக் கடைகள் திறக்கும் பொறுப்பு கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இக்கடைகள் திறக்கும் பொறுப்பு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தவிர அரிசி, கோதுமை மற்றும் சர்க்கரை போன்ற இன்றியமையாத பொருட்களை இதற்கு முன்பு விநியோகித்த கூட்டுறவுச் சில்லறைக் கடைகள் பொதுமக்களுக்கு அதிக அளவில் நுகர் பொருட்களை வழங்குவதற்காக முழு அளவு நுகர்பொருள் விற்பனைக் கடைகளாக மாற்றப்பட்டு, எல்லா அத்தியாவசியப் பண்டங்களையும் கிராமப்புற மக்களுக்கு வழங்கி வருகின்றன.

இரண்டு மூன்று மாதக் குறுகிய காலத்திற்குள் கிட்டத்தட்ட 6000 புதிய நியாய விலைக்கடைகள் திறக்கப்பட்டதும், 4500 நியாய விலைக்கடைகள் முழு அளவு நுகர்பொருள் விற்பனைக் கடைகளாக மாற்றப்பட்டதும், அரசின் அரிய சாதனைகளாகும்.

இவ்விதமாக இம்மாநிலத்தில் உள்ள 16,000 ரெவின்யூ கிராமங்களில் சுமார் 11,000 கிராமங்களில் அத்தியாவசியமான பொருக்களைக் கூட்டுறவுச் சங்கங்கள் விநியோகம் செய்து வருகின்றன. அரிசி, கோதுமை, சர்க்கரை, மிளகாய், புளி, கொத்தமல்லி, சமையல் எண்ணெய் போன்ற இன்றியமையாத பொருட்கள் தவிர, மேலும் 42 வகைப் பொருட்கள் இந்த நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்தஓர் ஆண்டுக்காலத்திற்குள் இந்த நியாய விலைக் கடைகள் பொது மக்களின் எதிர்பார்ப்புகளுக்கேற்ப செயல்பட்டு, கிட்டதட்ட ரூ. 7½ கோடி அளவிற்கான பொருட்களை விற்பனை செய்துள்ளது.

மாநில அரசு மற்றும் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ஆகிய இரண்டும் அளித்த நிதி உதவியைக் கொண்டுதான் இதனைச் செயல்படுத்த முடிந்தது. இந்தக் கிராம நுகர்பொருள் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகமானது இதுவரை கிட்டத்தட்ட ரூ. 2.4 கோடி வழங்கியுள்ளது. மற்றும் மாநில அரசானது ரூ. 2.2 கோடி முன்பணமாக அளித்துள்ளது. இந்தக் கணிசமான நிதியுதவி திட்டத்தைத் துரிதமாக நிறைவேற்றுவதற்குப் பெருமளவில் பயன்பட்டது.

கிராமக் கடைகள் மாவட்ட அளவிலான மொத்த விற்பனை பண்டகசாலைகளுடன் இணைக்கப்பட்டன. அவற்றுக்குத்தேவையான இடம், கடன் உதவி மற்றும் இருவாரங்களுக்கு ஒருமுறை தேவைப்படும் பொருட்கள் முதலியவற்றை மாவட்ட அளவிலான மொத்த விற்பனைப் பண்டகசாலைகளிடமிருந்து பெற்றுக் கொண்டன.

கோயம்புத்தூரிலும், சென்னையிலும் உள்ள மண்டல நுகர்பொருள் நிலையங்கள் நுகர்வோர் கூட்டுறவுத்துறையில் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும் உள்ள புதிய திட்டமாகும்.

கோயம்புத்தூரில் மண்டல நுகர் பொருள் விநியோக நிலையம் கடந்த ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர், நீலகிரி மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களின் நுகர்வோர் பண்டகச் சாலைகளின் மொத்தத் தேவைக்கேற்ப பொருட்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன. பொருட்களை மொத்தமாகக் கொள்முதல் செய்வதன் மூலம் கொள்முதல் விலையைக் கட்டுப்படுத்த முடிகிறது. மேலும் கூட்டுறவுப் பண்டகச் சாலைகள் மூலம் பொருட்களைக் கூடுமான வரை சகாய விலையில் விற்கவும் முடிகிறது.

சென்னையிலுள்ள மண்டல நுகர்பொருள் வளர்ச்சி நிலையம் சென்னை, செங்கல்பட்டு மற்றும் வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாகும். மண்டல விநியோக நிலைய திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு அதிக அளவில் கொள்முதல் செய்யப்படும்பொருட்களைச்சேமித்து வைக்கவும், அவ்வாறு சேமித்து வைத்த பொருட்களைக் கிராமக் கடைகளுக்குத் தேவைப்படும் போது வழங்கவும் பெரிய கிடங்குகள் கட்டப்படுகின்றன.

கிராமப் பகுதிகளில் மின்சாரம் பரவலாக வழங்குவதற்கும் மின் இணைப்புக் கொடுப்பதைவிரைவுபடுத்தவும், ஒருங்கிணைந்த பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த உதவும் பொருட்டும் தமிழ்நாட்டில் முதன் முதலாக கும்பகோணத்தில் ஒரு கிராமப்புற மின்சாரக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இந்திய அரசு கிராம மின்சாரக் கழகத்திடமிருந்து கணிசமான உதவியை கிராம மின்சாரக் கூட்டுறவுச் சங்கம் பெற்றுள்ளது. நாடு முழுவதும் 12 கிராம மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன.

மலை சாதி மக்களின் பொருளாதார வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக இந்தப் பெரிய அளவிலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மலை சாதி மக்கள் தமிழ்நாட்டில் இரண்டு அல்லது மூன்று மாவட்டங்களில் தான் வாழ்கிறார்கள். இவர்களுக்கு உதவ ஒன்பது பெரிய அளவிலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மலைப்பகுதிகளில் காடுபடு பொருட்கள் அதிக அளவில் கிடைக்கின்றன.

மலை சாதி மக்கள் இடைத்தரகர்களால் சுரண்டப்பட்டார்கள். மலை சாதி கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டதன் மூலம் அந்த கூட்டுறவுச் சங்கங்களில் மலை சாதி மக்களை இயக்குநர்களாகப் பங்கு ஏற்கச் செய்யும் வாய்ப்பு உண்டாகிறது. வன, வருவாய் மற்றும் கூட்டுறவுத்துறை அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் மலை சாதிக் கூட்டுறவுச் சங்கங்கள் மலைவாழ் மக்களிடமுள்ள காடுபடுபொருட்களை வாங்கி, இடைத்தரகர்கள் மூலம் அதற்குமுன்பு அவர்கள் பெற்ற தொகையை விட அதிக இலாப விலைக்கு விற்கின்றனர். தங்களுடைய பண்டைக்கால வாழ்க்கை முறையைப் படிப்படியாக மாற்றிக்கொள்வதற்கும், விவசாய நிலங்களை விஞ்ஞான நவீன முறைகள் மூலம் விவசாயம் செய்வதற்காகவும், மலை வாழ் மக்களுக்கு விவசாயக் கடன்கள் வழங்கப்படுகின்றன. மலை சாதி மக்களுக்கு மிகக் குறைந்த வட்டி அதாவது நான்கு சதவீதம் வட்டிக்குக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன.

இவ்வகைச் சங்கங்கள் வழங்கிய கடன்களில் அளவு 1976-77-ஆம் ஆண்டில் 9.10 இலட்சரூபாய் ஆனது. 1978-79-ஆம் ஆண்டில் 39.44 இலட்சம் ரூபாயாக உயர்ந்துள்ளது. இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மலைவாழ் மக்களுக்கு விநியோகித்த நுகர் பொருட்களின் மதிப்புகூட 1976-77ல் ஆண்டிலிருந்த ரூபாய் 38 ஆயிரத்திலிருந்து 1978-79-ஆம் ஆண்டில் ரூபாய் 17 இலட்சமாக அதிகரித்துள்ளது.


இம்மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள இவ்வாறான பல்முனைக் கூட்டுறவு ஒழுங்கியல் மற்றும் நுட்பங்கள் ஆகியவற்றின் வளர்ச்சி நம் நாட்டின் வளர்ச்சிக்கோர் எடுத்துக்காட்டாகும்.

## கன்னியாகுமரிதேவஸ்வம் ஊழியர் அரசு ஊழியர் ஆகினர்!

முன்பொரு காலத்தில் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் அரசு ஊழியர்களாக இருந்து இப்பொழுது கன்னியாகுமாரிதேவஸ்வங்களில் பணியாற்றும் 131 நிர்வாக அலுவலக ஊழியர்களின் நெடு நாளைய கோரிக்கையை அரசு ஏற்று, 1.4.1979 முதல் அரசு ஊழியர்கள் ஆக்கப்பட்டு விட்டார்கள். இதனால் இவ்வூழியர்கள் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் பென்ஷன், பிராவிடண்ட் பண்ட், குடும்ப நல நிதி உட்பட்ட எல்லாச் சலுகைகளையும் பெறத் தகுதி உடையவர்கள் ஆகி விட்டார்கள்.

## வல்லுநர் குழு நியமனம்

இந்து சமயத்தைச் சார்ந்த தகுதியுள்ளவர்களிடையேயிருந்து சாதி, இன உட்பிரிவு போன்ற வேறுபாடின்றி அர்ச்சகர்கள், பூசாரிகள் மற்றும் உள்துறை ஊழியர்கள் இந்து சமய நிறுவனங்களில் நியமிக்கப்பட வேண்டுமென்ற அரசின் கருத்தை எவ்வாறு செயல்படுத்துவது எனப் பரிசீலித்து அரசுக்கு அறிக்கை தர வேண்டி, சென்னை உயர்நீதி மன்ற முன்னாள் நீதிபதி திரு எஸ். மகராஜன் அவர்களின் தலைமையில் வேதம், ஆகமம், திருமுறை ஆகிய வழிபாட்டு முறைகளில் வல்லுநர்களாக உள்ள நபர்களை உறுப்பினர்களாகக் கொண்ட வல்லுநர் குழு (Expert Committee) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.



# உள்துறை ஆற்றிவரும் உயரிய பணிகள்

காவல் துறையின் நிர்வாகத்தினை திறமையானதாக்க காவல் துறை மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிற்கும் தலைமையாக ஒரு காவல் பேராய்வாளரும், மூன்று பிரிவிற்கும் தலைமையாகமாநில காவல்துறைத் தலைவராகவும் இருப்பர்.

இந்த மாநிலத்தில் நெடுங்காலமாக இருந்து வந்த காவலர்களை ஏவலர்களாகப் பயன்படுத்தும் பழக்கம் ஒழிக்கப்பட்டுவிட்டது.

வாராந்திர விடுப்பு நாட்களில் பணிபுரியும் காவலர்களுக்கும் தலைமைக் காவலர்களுக்கும் கொடுக்கப்படும் படி ரூ. 2லிருந்து ரூ. 7 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

அரசு, காவல்துறை பணியாளர்கள் சில விதிமுறைகளுக்கும் வரன்முறைகளுக்கும் உட்பட்டு மூன்று தனித்தனி சங்கங்கள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

காவல்துறைக்கு 10,000 காவலர்களை நியமிக்கும் திட்டத்தின் முதல் கட்டமாக 1979-80 ஆம் ஆண்டில் 2,000 காவலர்களை கூடுதலாக நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1977-78 ஆம் ஆண்டில் காவலர்களுக்கு ரூ. 70.87 இலட்ச ரூபாய் செலவில் 384 குடியிருப்புகள் கட்ட அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. 1979-80 ஆம் ஆண்டில் பல மாவட்டங்களில் ரூ. 1,94,17,000 செலவில் 768 குடியிருப்புகள் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

காவல்துறையில் உள்ள இரண்டாம் நிலைக்காவலர் முதல் ஆய்வாளர் உள்ளிட்ட அனைவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.20- இடையூறுப்படியாக வழங்கஅரசு ஆணையிட்டுள்ளது. சேமக் காவல் படையினர், சிறப்பு காவல் படையினர், ரகசியப் போலீசார், சிறப்பு இரகசிய போலீசார் ஆகியோருக்கும்இந்த இடையூறுப்படி வழங்கப்படும்.

## போக்குவரத்து

இம்மாநிலத்தில் சாலைகளில் ஓடும் வண்டிகளின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க மோட்டார் வண்டிகளினால் ஏற்படும் விபத்தால் கொல்லப்படுகின்ற அல்லது ஊனமேற்படுத்தப்படுகின்றவர்களின் எண்ணிக்கையும்பெருகி வருகிறது. இதனால் விபத்துக்குள்ளானவரின் குடும்பம் திடீரென பேரிழப்பிற்கு உள்ளாகிறது. சில வேளைகளில் தனது ஆதரவாளரையே இழக்கவும் நேரிடுகிறது. இப்படிப்பட்ட சமயங்களில் அக்குடும்பத்திற்கு உடனடியாக நிவாரணம் அளிக்கப்பட வேண்டியதைக் கருத்திற்கொண்டு போக்குவரத்து நிறுவனங்கள் அல்லது இம்மாநிலத்தில் பதிவு செய்யப்பட்டு இம்மாநிலத் ஓடிக் கொண்டிருக்கின்ற பேருந்துகளினாலும் இம்மாநிலத்திற்குள் ஏற்பட்ட விபத்துக்களில் காயமடைந்தவர் அல்லது விபத்தில் மரணமடைந்தால் அவர் தம் குடும்பத்தினர் மருத்துவச் செலவையும் பிற உடனடிச் செலவுகளையும் செய்ய ஏதுவான வகையில் ரொக்க உதவித் தொகை வழங்கப்படவேண்டும் என்று அரசு கட்டளை இட்டுள்ளது.

ரொக்க உதவி நிவாரணந் தொகை முற்றிலும் கருணையின் பால்பட்டதே ஆகும். இத் தொகை மோட்டார் விபத்துக்கள் உரிமை நடுவர் மன்றம் அல்லது ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து விபத்துக்குள்ளானவருக்கு அல்லது அவரது குடும்பத்திற்கு கிடைக்கின்ற இழப்பீட்டுத் தொகை எதனையும் பாதிக்காது; மேலும் விபத்துக்குள்ளானவர்களது [illegible] அல்லது [illegible]

போதைய ஈட்டுறுதி அளவுடன் விபத்துக்களுக்கு மாநில உள்ளான பயணிகளுக்கும் பயணிகள் அல்லாதோருக்கும் உதவித் தொகை வழங்கப்படும்.

இதற்காக ''முதலமைச்சர் விபத்து நிவாரண நிதி'' ஒன்று அமைக்கப்பட்டுள்ளது, மோட்டார் வண்டி வரியின் கீழ் கிடைக்கின்ற ஆண்டு மொத்த வருமானதில் 1 சதவீதத் தொகை இதற்காக மேற்படி நிவாரண நிதிக்கு ஆண்டு தோறும் மாற்றப்படுகிறது. இத்திட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் செயற்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் அரசு போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அல்லாத வாகனங்களினால் ஏற்படும் விபத்துக்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் வழங்குமாறு அரசு ஆணை எண். 232 உள்துறை, நாள் 24.1.79ல் உத்திரவிடப்பட்டுள்ளது.

**சிறைத்துறை**

அவசர நிலை பிரகடனத்தின் போது, சென்னை மத்திய சிறையில் சிறைவாசிகள் கொடுமைப் படுத்தப்பட்டதாக கூறிய புகார்களை விசாரித்திட தலைமை நீதிமன்ற நீதிபதி இஸ்மாயில் தலைமையில் ஒரு விசாரணைக் குழுவினை (இஸ்மாயில் கமிஷன்) அரசு நியமித்தது. இக்குழுவின் அறிக்கையினை அரசு பெற்று அவற்றின் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. திரு ஆர். நடராசன், இ.அ.ப. அவர்கள் விசாரணை நடத்தி வருகிறார்கள். சம்பந்தப்பட்ட சிறை அலுவலர்களை அரசு தற்காலிக வேலை நீக்கம் செய்துள்ளது.

சிறை நிர்வாகத்தில் மேம்பாடு கண்டிடவும் சிறைவாசிகளின் தரத்தினை உயர்த்தும் எண்ணம் கொண்டும் அரசு ஓய்வுபெற்ற பாட்னா தலைமை நீதிபதி திரு ஆர்.எல். நரசிம்மன் அவர்கள் தலைமையில் ஒரு சீர்திருத்தக் கமிஷனை அமைத்தது.

இக்குழுவின் அறிக்கை சட்ட மன்றப் பேரவையிலும் மற்றும் மேலவையிலும், மாண்புமிகு உறுப்பினர்கள் பார்வைக்காக வைக்கப்பட்டது. இக்குழுவின் அறிக்கையினை அரசு பொதுப் படையாக ஏற்றுக் கொண்டுள்ளது. பல பரிந்துரைகளின் மீது தக்க ஆணைகளை அரசு பிறப்பித்துள்ளது. ஏனைய பரிந்துரைகளை நடைமுறைப் படுத்திட மாண்புமிகு சட்ட அமைச்சர் அரசு தலைமை செயலர், மற்றும் துறைச் செயலர்கள் அடங்கிய உயர்மட்ட அளவு குழுக்கள் அமைத்து உரிய நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகின்றது.

**வட்டார சீர்திருத்த நிர்வாகப் பள்ளி, வேலூர்:**

நான்கு தென் மாநிலங்களுக்கும் பொதுவாகப் சிறை அலுவலர்களுக்குப் பல்வேறு துறைகளில் பயிற்சி அளித்திட வேலூரில் சீர்திருத்த நிர்வாகப் பள்ளி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இப்பள்ளி 1.10.79 முதல்இயங்கி வருகின்றது. மாநிலத்தில் சிறைத் துறையில் பல்வேறு மட்டங்களில் பணிபுரியும் சிறை அலுவலர்கள் பல்வேறு துறைகளில் பயிற்சி பெற்றிட இப்பள்ளிக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர். இப்பயிற்சி மாநிலத்தின் சிறை நிர்வாகத்தினை மேம்படுத்திடப் பெரிதும் உதவிடும் என நம்பப்படுகிறது.

தமிழகத்திலுள்ள எல்லா கிளைச் சிறைகளிலும் நீரடிக் கழிப்பிடம், மற்றும் தண்ணீர் வசதிகள் ஏற்படுத்துவதற்கான திட்டங்களுக்கு அரசு ஏற்பாணை வழங்கியுள்ளது. இத்திட்டங்களுக்காக மத்திய அரசின் நிதியுதவியுடன் அரசு ரூ. 68 இலட்சம் வழங்கியுள்ளது.

கோவை மத்திய சிறையிலுள்ள நெசவுத் தொழிற்சாலையை மேம்படுத்துவதற்காகவும், 80 புதிய விசைத் தறிகள் வாங்கவும் மற்ற சிறைகளிலுள்ள கைத்தறிகளைப் பழுது பார்க்கவும், மொத்தம் ரூ. 15 இலட்சம் அரசு வழங்கியுள்ளது. சிறைகளில் நடைபெறும் விவசாய முன்னேற்றத்திற்காகக் குறிப்பிட்ட சிறைகளில் ஆழ் கிணறு அமைக்கும் திட்டங்களுக்கும் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

ஏழாவது நிதிக் குழுவின் பரிந்துறையின் அடிப்படையில் தமிழகத்திற்கு ரூ. 1469 லட்சம் மத்திய அரசு மூலம் வழங்கப்பட இருக்கிறது. சிறைச்சாலைகளில் தற்போதுள்ள இட நெருக்கடியைத் தவிர்க்கும் நோக்கத்துடன் சுமார் 5000 கைதிகளுக்கு கூடுதல் இடவசதி அமைக்கவும், கைதிகளுக்கு அளிக்கப்படும் உணவு, உடை, மருத்துவ வசதி சுகாதார வசதி, மின் வசதி ஆகியவற்றின் தரத்தை உயர்த்தவும் இத்தொகை பயன்படுத்தப்பட திட்டங்கள் வகுக்கப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. விரைவில் மத்திய அரசின் நிதி உதவி கிடைக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

சிறைகளில் இட நெருக்கடியைப் பற்றி ஆய்வதற்காகவும், விசாரணைக் கைதிகள் நீண்ட காலம் சிறைகளில் வைத்திருப்பதைத் தவிர்க்க வழிவகை செய்யவும், அனைத்து மாநிலத் தலைமைச்செயலர்களின் மாநாடு டெல்லியில் நடந்தது. இம்மாநாட்டின் பரிந்துரைகளின் மீது அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

**கைதிகளை விடுதலை செய்தல்:**

மறைந்த ராஜாஜி அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தை ஒட்டி 843 கைதிகளுக்கு அரசு சிறப்பு தண்டனை நீக்கம் அளித்தது.

தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தை ஒட்டி பொது இடத்திலோ அல்லது தனி இடத்திலோ ,போதை நிலையில் காணப்பட்டு, தமிழக அரசு மது விலக்கு சட்டம்,1937 பிரிவு 4-ஏன்படி கைது செய்யப்பட்டு தண்டனை அடைந்த கைதிகள் மற்றும் மது அல்லது போதையூட்டும் மருந்து அருந்தி பிரிவு 4 (1) (J)ன் படி கைது செய்யப்பட்டு தண்டனை அனுபவித்து வரும் கைதிகள் 29.10.79ன் நிலவரப்படி, மேற்கூறிய ஆணையின்படி 1619

## திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் துவக்கம்

1980-ஆம் ஆண்டு திருவள்ளுவர் நாள் அன்று "திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம்'' என்ற பெயரில் ஒரு புதிய போக்குவரத்துக் கழகம் துவக்கப்படும். தற்போது பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் எக்ஸ்பிரஸ் பிரிவு இப்புதிய போக்குவரத்துக் கழகமாக மாற்றப்படுகிறது. இது பொதுத்துறை நிறுவனமாக இருக்கும்.

கைதிகள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

**போக்குவரத்து வசதிகள்:**

தமிழ் நாட்டில் தற்போது போக்குவரத்து வசதியற்ற கிராமங்களுக்குப் போக்குவரத்து வசதி செய்வது குறித்து அரசு பரிசீலனை செய்தது. தேசிய நெடுஞ்சாலைகள் அல்லது மாநில நெடுஞ்சாலைகளுடன் இணைப்பு பெறாமலேயே இக்கிராமங்கள் இருந்து வருகின்றன. இக்கிராமப்பகுதிகள் தற்போது மாவட்ட அல்லது கிராமப்புறச் சாலைகளினால் மட்டுமே இணைக்கப்பட்டுள்ளன. இக்கிராமப்புறச்சாலைகளின் நிலைமையும், போதிய பயணிகள் போக்குவரத்து இல்லாமையாலும் இச்சாலைகள் பேருந்து போக்குவரத்துக்குத் தகுதியில்லை என்பதினால் மினி பஸ்கள் என்கிற சிறு ஊந்துகள் மட்டுமே செல்வதற்கு ஏற்றவை என தெரிய வந்தது. இதனைக் கருத்திற் கொண்டு போக்குவரத்து வசதியற்ற கிராமங்களுக்கு வசதி செய்யும்பொருட்டு மினி பஸ்கள் ஓட்டும் திட்டத்தினை அரசு மேற்கொண்டுள்ளது.

சென்ற இரண்டரை ஆண்டுகளில் 788 புதிய வழித்தடங்களிலும், 816 வழித்தடங்களில் சிறு மாறுதல்கள் செய்வதன் மூலமும் 33,77,168 மக்கட் தொகை பயனடையும் வண்ணம் 1934 கிராமங்களுக்கு போக்குவரத்து வசதி அளிக்கப்பட்டுள்ளது.

**திரைப்படங்கள்.**

தமிழ் திரைப்படத்துறை, ஆங்கிலம், இந்தி, மலையாளம் தெலுங்கு மற்றும் கன்னடப் படங்கள் கடுமையான போட்டியால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரை நலிந்து போனநிலையில் இருந்ததால் அதற்கு வலிஊட்டி வளர்க்க இவ்வரசு துரிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு செயல்படுத்தியுள்ளது. இதன் காரணமாகவே தமிழ்த் திரைப்பட உலகம் புத்துணர்ச்சியும் புது வேகமும் பெற்று வளர்ச்சியடைந்துள்ளது. இதனால், தமிழ்த் திரைப்படங்களுக்குப் போதிய நல்ல திரையரங்குகள் கிடைக்க வழி செய்யும் நோக்குடன் எப்போதும் பிறமொழிப் படங்களையே திரையிட்டு வரும் திரையரங்குகளில், கட்டாயமாக ஆண்டுக்கு 12 வாரங்கள் தமிழ்ப்படங்களைத் திரையிடாக வேண்டுமென்று விதிகள் திருத்தப்பட்டுள்ளன.

தற்போது, தமிழ்த் திரைப்படங்களின் வெளியீட்டு எண்ணிக்கைக்கு ஈடு கொடுக்கப் போதிய அளவு திரையரங்குகள் இல்லாத நிலைமையைப்போக்க, குறைந்த முதலீட்டில் திறந்த வெளித் திரையரங்குகளும், டூரிங் திரையரங்குகளும், செமி பர்மணண்ட் திரையரங்குகளும் அமைக்க சட்டப்படி அனுமதி வழங்குவதில் உள்ள சிக்கல்களை தவிர்த்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாநகரக் காவல் துறை ஆணையர் ஆகியோர் இது போன்ற அனுமதி மனுக்களின் மீது துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளனர். திரையரங்குகளுக்குக் கட்டட உறுதிச் சான்றிதழ் மற்றும் மின் சான்றிதழ் ஆகியவைகளை வழங்குவதில் உள்ள கால தாமதங்களையும் சிரமங்களையும் தவிர்க்க நடவடிக்கை எடுப்பதுடன் நடைமுறை உணர்வுடன் நடந்து கொள்ள வேண்டுமென்று சம்பந்தப்பட்ட துறைகள் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

டூரிங் திரையரங்குகளின் உரிமக் காலத்தை 2½ ஆண்டிலிருந்து 3 ஆண்டுகளாகவும், செமி பர்மனண்ட் திரையரங்குகள் நிரந்தரத் திரையரங்குகளாக மாற்றுவதற்கான கால அளவை 5 ஆண்டிலிருந்து 7 ஆண்டாகவும் கால நீடிப்பு வழங்கியுள்ளதுடன் கிராமப் புறங்களிலுள்ள செமி பர்மனண்ட் திரையரங்குகளுக்கு நிலையாக இயங்க அனுமதி வழங்கவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது. மேலும் குளிர் சாதன வசதியுடைய திரையரங்குகள் மின்சார வெட்டு உள்ள காலங்களில் குளிர் சாதன வசதி செய்யாவிடில் அவை சாதாரணத் திரையரங்குகளைப் போலவே குறைந்த அனுமதி கட்டணங்களைத் தான் வசூலிக்க வேண்டுமென்றும் அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இப்படிப்பட்ட முடிவுகளினால் திரையரங்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதன் மூலம் அரசுக்கு வருவாயும், ஏழைஎளிய மக்களுக்குப் பொழுது போக்கு வசதியும் பெருகியுள்ளது.

திரையரங்குகளின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் வகையில் 1957ஆம் ஆண்டில் தமிழ்நாடு திரைப்பட (ஒழுங்குபடுத்தல்) விதிகள் நடைமுறைத் தேவைக்குத் தக்கவாறு திருத்தப்படுவதுடன், பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு திரைப்பட அரங்குகள் சுத்தமாகவும் விதிகளில் கண்டவாறு வசதிகளைக் கொண்டதாகவும் இருக்க வேண்டுமென அடிக்கடி சோதனைகள் நடத்தப்பட்டு எச்சரிக்கப்பட்டுள்ளன.

வீதிகள் மற்றும் பொது இடங்களில் திரைப்படக் காட்சிகள் நடத்தப்படுவதை தடை செய்யப்பட்டுள்ளது.

திரைப்படங்கள் சட்டத்தின் கீழ் மேல் முறையீட்டு மன்றமான வருவாய் வாரியம் வழங்கும் தீர்ப்புகள் அல்லது ஆணை



களை மறுபரிசீலனை செய்யும் நோக்குடன் அரசுக்கு மறு விசாரணை அதிகாரம், அளிக்கும் வகையில் தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) சட்டம் திருத்தப்பட்டுள்ளது.

சமீபத்தில் தூத்துக்குடிக்கு அருகே ஒரு டூரிங் திரையரங்கில் ஏற்பட்ட தீ விபத்தைத் தொடர்ந்து தமிழ் நாட்டிலுள்ள எல்லா டூரிங் திரையரங்குகளும் பொது மக்களுக்கு பாதுகாப்பானதாகவும், வசதியானதாகவும் இருக்கின்றனவா என்று கண்டறிய சோதனையிடப்பட்டு விதிகளின்படி நடத்தப்படாத டூரிங் திரையரங்குகள் நிறுத்தப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டது. டூரிங் திரையரங்குகளில் மாட்னி காட்சிகள் நடத்த வழங்கப்பட்டிருந்த அனுமதியும் இரத்து செய்யப்பட்டது. மேலும் இனிமேல் எல்லா டூரிங் திரையரங்குகளும் தீப்பிடிக்காத பொருள்களைக் கொண்டுதான் கட்டப்பட வேண்டுமெனவும் விதிகள் திருத்தப்பட்டுள்ளன.

**காவலர் வீட்டு வசதி திட்டம்:**

காவலர் வீட்டு வசதி திட்டத்தின் கீழ், 1977-78ம் ஆண்டில் 602 வீடுகளும், 1978-79ல் சென்னை அண்ணா நகர், திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை ரோடு, மயிலாப்பூர் மற்றும் ஸ்ரீரங்கத்தில் மொத்தம் 270 வீடுகளும், 1979-80ல் தமிழ்நாடு முழுவதும் 27 இடங்களில் 5 ஆய்வாளர்களுக்கும், 33 உதவி ஆய்வாளர்களுக்கும், 47 தலைமைக் காவலர்களுக்கும், 683 காவலர்களுக்கும் வீடுகள் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது.

**வங்கிகளின் மூலம் வரிவசூலிப்பு:**

போக்குவரத்து அல்லாத வாகனங்களுக்கான வரி, சென்னை நகரில் வட்டாரப் போக்குவரத்து அலுவலரின் அலுவலகத்திலும், போக்குவரத்து ஆணையரின் அலுவலகத்திலும் மேலும் வரி வசூலிப்புக் காலங்களில் காவல்நிலையங்களில் ஏற்படுத்தப்படும் கவுண்டர்களிலும் வசூலிக்கப்பட்டு வந்தது.

இம் முறையில் போதுமான வசதியின்மையால் நீண்ட 'க்யூ' வரிசை கவுண்டர்களின் முன் ஏற்படுகின்றன என அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இதன்பேரில் பொது மக்களுக்கும், வரி செலுத்துவோருக்கும் வசதியைச் செய்துதரும் பொருட்டு, நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளின் மூலமும் வரி வசூலிக்கவும், அனுமதிச்




சீட்டுகளை வழங்கலாம் என முடிவெடுக்கப்பட்டது. மேற்கூறிய வண்ணமே சென்னையில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மூலமாகப் போக்குவரத்து அல்லாத வாகனங்களுக்கு வரி வசூலிப்பதற்கான திட்டத்திற்கு 21.6.'78 முதல் அரசு அனுமதித்தது.

இத் திட்டம் 16.3.79 முதல் மாவட்டத் தலைநகரங்களிலும் மற்றும் முக்கிய நகரங்களில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் இந்தியன் வங்கியின் மூலம் போக்குவரத்து அல்லாத வாகனங்களுக்கு வரி வசூலிக்கும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

**மதுவிலக்கு:**

மதுவிலக்குத் திட்டம், ஒரு சமூக நலத் திட்டமாகும். கடின உழைப்பின் மூலம் ஈட்டிய வருமானத்தை மதுவிற்காகச் செலவிட்டுச் சீரழிவதினின்றும் ஏழை எளிய மக்களைக் காத்து அவர்கள் வாழ்க்கையை மேம்படுத்துவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். பாமர மக்களின் நல்வாழ்வைக் கருதி மதுவிலக்கைச் செவ்வனே செயல்படுத்த வேண்டியது அவசியமாகிறது.

மதுவிலக்கைத் திறம்படவும், கண்டிப்பாகவும் அமல்படுத்துவதில் இந்த மாநில அரசு தனிக் கவனம் செலுத்துகிறது. கள்ளத்தனமாக மதுவகைகள் தயாரிக்கப்படுவதற்கு முக்கிய ஆதாரமாக விளங்குகின்ற வாயில்களையே ஒழிப்பதற்குத்தான் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. இதன் விளைவாகக் கள்ளத்தனமாக மதுவிற்போர், கள்ளச் சாராயம் காய்ச்சுவோர், மதுவகைகள் கடத்துவோர் ஆகியோரின் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மதுவிலக்குக் குற்றம் செய்பவர்களுக்கு மிகக் கடுமையான தண்டனை வழங்குவதற்கு வகை செய்யும் தமிழ்நாடு 9.1.1979 சட்டம் அதிகார முறையில் வெளியிடப்பட்டு மதுவிலக்குச் சட்டம் கடுமையாக்கப்பட்டுள்ளது. அது முதற்கொண்டு மதுவிலக்குக் குற்றங்கள் குறிப்பிடத்தக்க வகையில் குறைந்துள்ளன.

கள்ள மதுவை அருந்தியதன் காரணமாக ஏற்பட்ட மரணங்களுக்குப் பொறுப்புடையவர்களுக்கு ஆயுள் சிறைத் தண்டனை வழங்கவும் இந்த சட்டம் வகை செய்கிறது. மேலும் மதுவிலக்கினைச் செவ்வனே நன்மை பயக்கும் வகையில், காவல் துறைத் தலைவரின் (அமலாக்கம்) கீழ் ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டுச் செயல்பட்டுவருகிறது. சமீபத்தில் தந்தை பெரியார் நூற்றாண் விழாவின்போது தமிழக முதல்வர் அறிவிப்பின் படி 1937ம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் பிரிவுகள் 4-ஏ மற்றும் அல்லது 4(1) (ஜே)ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்டு வழக்குத் தொடரப்பட்டுள்ளவர்களின் (போதை நிலையில் இருந்தவர்கள் மற்றும் மது அருந்தியவர்கள் அல்லது போதைப் பொருள்களை உட்கொண்டவர்கள்) வழக்குகளை நீதிமன்றங்களிலிருந்து வாபஸ் பெறவும், மேற்கண்ட குற்றத்திற்காகச் சிறைத்தண்டனை அனுபவித்துக்கொண்டிருப்போரை விடுதலை செய்யவும் 13.10.79 அன்று இவ்வரசு ஆணை பிறப்பித்தது. இவ்விதம் மதுவிலக்கு மக்களுக்கு நலம் பயக்கும் முறையில் தமிழகத்தில் செவ்வனே செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னையில் உள்ள மதுவிலக்கு, ஆயத்தீர்வை ஆய்வுக் கூடம், தமிழ்நாடு குற்றவியல் கூடத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மதுவிலக்கு சம்பந்தப்பட்ட தடையங்களை விரைவாக ஆய்வு செய்யும் பொருட்டு சேலத்தில் இதற்காகவென்று தனியான ஒரு பரிசோதனைக்கூடம் அமைக்கவும், உத்தரவு இடப்பட்டுள்ளது.



# நலம் காக்கும் நல்வாழ்வுத் துறை

**1977-78**-ஆம் ஆண்டில் ரூ. 71 கோடியும் 1978-79ஆம் ஆண்டில் ரூ. 86 கோடியும் (திருத்திய மதிப்பீடு) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுப் பணிக்காகச் செலவிடப்பட்டிருக்கிறது. இதிலிருந்து ஒவ்வோராண்டும் மக்களுடைய மருத்துவத் தேவைகளை நன்குணர்ந்து அதற்காகப் புதிய புதிய மேம்பாட்டுத் திட்டங்களைத் தீட்டி கூடுதல் தொகை வழங்கிவருவது நன்கு புலனாகும்.

### 1979-80-ஆண்டுக்கான 2 புதிய திட்டங்கள்

என்றுமில்லாத வகையில்1979-80ஆம் ஆண்டு 4.70 கோடி ரூபாய் செலவில் 90 புதிய திட்டங்களை நிறைவேற்றித்தரும் வகையில் வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இந்திய மருத்துவத்தை வளர்க்க வேண்டும் என்ற ஆவலில், அத்துறையின் வளர்ச்சிக்காக 96 இலட்சம் ரூபாய் மொத்தச் செலவில் 22 புதிய திட்டங்களுக்கு 1979-80-ஆம் ஆண்டு வழிவகை செய்திருப்பது மற்றொரு சாதனையாகும்.

### கிராமப்புறங்களில் வாழும் ஏழை மக்களுக்கு மருத்துவ வசதி:

மாநிலத்தில் உள்ள கிராமப் பகுதிகளில் உள்ள ஒவ்வொருவரும் நகரப்பகுதியில் உள்ளோர் பெறும் வசதிகளை அடைய வேண்டும் என்பதே இவ்வரசின் இலட்சியமாகும். அதற்காக மாநிலத்தில் உள்ள 383 ஆரம்ப சுகாதார நிலையங்களில், இது வரையில் 124 ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடமாடும் மருத்துவப் பிரிவுகள் அமைத்தும் இவ்வாண்டு 62 இலட்சம் ரூபாய் மொத்தச் செலவில் மேலும் 100 நடமாடும் மருத்துவக் குழுக்களை அமைக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறது.

1977-78ஆம் ஆண்டில் 54 சிறு சுகாதார நிலையங்கள் அமைக்கவும், 78-79ஆம் ஆண்டில் மேலும் 50 நிலையங்கள் அமைக்கவும் 79-80ஆம் ஆண்டில் மேலும்கூடுதலாக்60சிறுசுகாதார நிலையங்கள் அமைக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறது.

இந்த ஆண்டில் ரூ. 43.75 இலட்சம் செலவில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்டுவதற்கும் மருத்துவர்களுக்கான வீடுகள் கட்டுவதற்கும் வழிவகை செய்திருக்கிறது..

ஆரம்ப சுகாதார நிலையங்களை நல்ல முறையில் பாதுகாப்பதற்காக அதைச் சுற்றி ரூ. 30 இலட்சம் மொத்தச் செலவில் சுற்றுச் சுவர் எழுப்ப ஆவன செய்திருக்கிறது.

ஆரம்ப சுகாதார நிலையங்களை யொட்டிய கிளை நிலையங்களில் மருந்துகள் வழங்கப்படுவதற்கு கூடுதலாக 13 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது.

மாநில சுகாதாரத்துறை ஊர்திகள் பராமரிப்பு நிறுவன வளர்ச்சிக்காகவும் மேம்பாட்டுக்காகவும் ரூ. 15.50 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

மூன்று நோய்த் தடுப்பு ஊசித் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தும் நோக்கத்திற்கிணங்க 78-79ஆம் ஆண்டு வரை 110 ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிறைவேற்றப்பட்டு வந்த இத்திட்டம், 79-80ல் மேலும் 20 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நீட்டிக்க ஏற்பாடு செய்துள்ளது.

பள்ளி மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனைத் திட்டம் மொத்தம் 83 சுகாதார நிலையங்களுக்குட்பட்ட பகுதிகளில் வாழும் மாணவர்கள் பயனடையும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

### மருத்துவக் கல்வித்துறை ஆற்றியுள்ள பணிகள்:

சென்னை மருத்துவக் கல்லூரியைச் சார்ந்துள்ள பல்பிரிவினைத் தனக்கெனச் சொந்த நிதி ஒதுக்கீட்டுடன் கூடிய தனிக் கல்லூரியாக மாற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் மருத்துவக் கல்லூரிகளிலும் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும் பணியாற்றும் பல் மருத்துவர்களைக் கொண்டு ஊரகப் பல் சிகிச்சை முகாம்கள் நடத்த ஏற்பாடு செய்திருக்கிறது.

இந்திய மருத்துவ மன்றம் மற்றும் சம்பந்தப்பட்ட பல்கலைக் கழகங்கள் இசைவு பெற்ற பின்னர், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரிகளில் 1979-80ல் சில குறிப்பிட்ட சிறப்புப் பிரிவுகளில் பட்ட மேற்படிப்பு மற்றும் பட்டயத் தகுதி படிப்புகளை துவக்கக்

கருதப்பட்டுள்ளது.

மாநிலத்தில் உள்ள 6 செவிலியர் பயிற்சி நிலையங்களில் பயிற்சிக்காகச் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களின் எண்ணிக்கை 300லிருந்து 350 ஆகவும், வருங்காலத் தேவைகளை நிறைவு செய்ய ஆண்டொன்றுக்கு 120 கூடுதல் செவிலியர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் செவிலியர்களின் தற்காலப் பற்றாக் குறையை நீக்குவதற்காகத் திருச்சிராப்பள்ளியிலும் சேலத்திலும் செவிலியர் பள்ளிகளைத் திறப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

வளர்ந்து வரும் மருத்துவத்துறையில் துணைச் செவிலியர் மற்றும் மகப்பேறு உதவியாளர்களின் இன்றியமையாத் தேவையை உணர்ந்து, பயிற்சி பெற்று வருகின்றவர்களுடைய எண்ணிக்கையைத் தேவைக்கேற்ப பெறுவதற்கான அளவில் எண்ணிக்கையை 120லிருந்து 240க்கு இரட்டிப்பாக்கவும், இராமநாதபுரம், நாகப்பட்டிணம், கடலூர், நாகர்கோவில், ஈரோடு ஆகிய இடங்களில் துணைச் செவிலியர் மற்றும் மகப்பேறு உதவியாளர் பயிற்சி நிலையங்கள் திறக்கவும் ஆவன செய்யப்பட்டுள்ளது.

நீண்டகாலமாகத் தமிழகத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கண் பார்வை வரைவியலாளர் படிப்பினை மீண்டும் சென்னை அரசு கண் மருத்துவ மனையில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மருந்தாக்கியல் சட்டம் 1948 இன் கீழ் 1981ஆம் ஆண்டிற்குள் பதிவு செய்யப்பட்ட மருந்தாளர்களை மட்டுமே வேலைக்கு அமர்த்தும் நிலை அவசியமாக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் 1978-79ல் இப் பயிற்சிக்கான இடங்களின் எண்ணிக்கை 121லிருந்து 150 ஆக உயர்த்தியும், 79-80ஆம் ஆண்டிலிருந்து திருச்சிராப்பள்ளி அரசு தலைமையிட மருத்து மனையில் மருந்தாக்கியல் பட்டயத் தகுதிப் பயிற்சியைத் துவக்கவும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் பொது மருத்துவ மனையைச் சார்ந்த எல்லாத் துறைகளையும் உயர்நிலைத் துறைகளாக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மருத்துவமனைகள்**

1977-78-ல் 13,507 ஆக இருந்த படுக்கைகளின் எண்ணிக்கை 78-79ல் 13,800 ஆக உயர்ந்துள்ளது.

9 மருத்துவ மனைகளில் மருத்துவ ஆவணத்துறையை அமைத்தும், மேலும் 8 மருத்துவ மனைகளில் ஏற்படுத்தவும்ஆவன செய்யப்பட்டுள்ளது.

செயற்கை உறுப்புகள் நிலையத்தை கே. கே.நகர் மருத்துவமனையில் ரூ. 14 இலட்சம் செலவில் தேவையான பணியாளர்களை நியமிக்கவும் கருவிகள் வாங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை பொது மருத்துவமனையிலுள்ள பல மாடிக் கட்டிடத்தைப் பயன்படுத்தும் வகையில் ரூ. 13 இலட்சம் செலவில் பணியாளர்கள் நியமனம் கருவிகள் வாங்குதல் ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.



மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையில் உள்ள பல் மருத்துவ சிகிச்சைப் பிரிவிற்கும் முடநீக்கியல் மருத்துவச் சிகிச்சைப் பிரிவிற்கும் ரூ. 16 இலட்சம் செலவில் கட்டடங்கள் கட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புறநோயாளிப் பகுதிக்கு மேல் ரூ.8 இலட்சம் செலவில் கட்டடம் கட்டவும், ரூ. 2.35 இலட்சம் செலவில் 28 படுக்கைகள் கொண்ட பெண்கள் சிகிச்சைக்கான கட்டடம் கட்டவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சென்னையிலுள்ள அரசு கண்நோய் மருத்துவமனையில் ரூ. 11.63 இலட்சம் செலவில் 146 கூடுதல் படுக்கைகளுக்காகப் பணியாளர் நியமனம் கருவிகள் வாங்குதல் ஆகியவற்றிற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தண்டையார்பேட்டை, அண்ணாநகரில் உள்ள புறநகர் மருத்துவ மனைகளில் ரூ.33.78 இலட்சம் செலவில் பணியாளர் நியமனம் கருவிகள் வாங்குதல் ஆகியவற்றிற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கிராமப்பகுதிகளில் விபத்திற்குள்ளானவர்களுக்கு உடனடியாகவும் பயனுள்ளதாகவும் சிகிச்சையளிப்பதற்காக முதலுதவி மற்றும் புத்துயிர் கொடுக்கும் கருவியுடன் கூடிய அரசு மருத்துவ ஊர்திகள்(ஆம்புலன்ஸ்) முதல் கட்டமாக மதுரை திருநெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி ஆகிய 4 மாவட்டங்களில் ரூ. 118.32 இலட்சம் மொத்த செலவில் ஏற்படுத்த ஆவன செய்யப்பட்டுள்ளது.

**மருத்துவக் கருவிகள்**

ஒவ்வோராண்டும் பல்வேறு மருத்துவமனைகளுக்கு புதிய கருவிகளைத் தொடர்ச்சியாக வாங்கும் இவ்வரசு 1978-79ஆம் ஆண்டில் ரூ. 27.79 இலட்சம் மதிப்பில் நவீன மருத்துவக் கருவிகளை வாங்கியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மருத்துவமனைகளின் இன்றி

யமையாப் பணிகளைப் பராமரிக்க மின் ஆக்கிகள் அத்தியாவசியமானதாகையால் ரூ. 20 இலட்சம் மொத்தச் செலவில் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும், சென்னை குழந்தை நல நிறுவனத்திற்கும், திருச்சிராப்பள்ளி மற்றும் நாகபட்டினத்தில் உள்ள தலைமையிட மருத்துவமனைகளுக்கும் மின் உற்பத்திக் கருவிகள் இவ்வாண்டு வழங்க ஆவன செய்திருக்கிறது.

சென்னை பொது மருத்துவமனையிலுள்ள நரம்பியல் துறையில் ரூ. 40 இலட்சம் செலவில் மனித மூளையிலுள்ள நரம்புகளில் ஏற்படும் கோளாறுகளை உடனுக்குடன் படம் பிடித்துக் காட்டி தகுந்த சிகிச்சை அளிக்க உதவும் நவீன ஊடுருவிக் கருவி ஒன்று வாங்க ஆணை பிறப்பித்திருப்பது அதுவும் ஏழ்மை நிலையிலுள்ள மக்கள் அதிகம் வரும் சென்னை அரசு மருத்துவமனையில் பொருத்த முயற்சித்திருப்பது இந்தியத் துணைக்கண்டத்திலேயே முதன்மையானதாக அமைய இருக்கும் குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

## மருத்துவப் பணிகள் மற்றும் குடும்பநலத்துறை

மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள், வட்டத் தலைமையிட மருத்துவமனைகள், வட்டத் தலைமையிடமில்லாத மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களில் 1977-78ல் 12,713 ஆக இருந்த படுக்கைகளின் எண்ணிக்கை 78-79ல் 13,218 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

சேலம், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, வேலூர் ஆகிய நான்கு மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் மருத்துவ ஆவணத் துறையை ஏற்படுத்த ஆவன செய்யப்பட்டுள்ளது.

பத்து பெரும் மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளிலும் மற்றும் சென்னை நகரிலும் செயல்பட்டு வரும் அரசு ஊழியர்களுக்கான மருந்தகங்களை மேலும் விரிவாக்கும் நோக்குடன் இந்த நிதியாண்டில் ரூ. 6 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, வட்டத்தலைமையிட மருத்துவமனை, வட்டத் தலைமையிடமல்லாத மருத்துவமனைகள், மருந்தகங்கள் ஆகியவைகளில் மருத்துவ மேம்பாட்டினை ஏற்படுத்தக் கருதி இதுவரையில் பல புதிய கட்டடம் மற்றும் மருந்தகம் திறப்பதற்கான திட்டங்களுக்கு ஆணை வழங்கியும், இந்த ஆண்டிற்கு 12 புதிய திட்டங்களுக்கான வழிவகை செய்தும் இருக்கிறது.

மக்கள் உயிர் காக்கத் தேவையான மருத்துவக் கருவிகளை வாங்க ஆணை வழங்கியும் மாநிலத்தின் ஐந்து மருத்துவமனைகளில் எக்ஸ்-கதிர் சாதனங்கள் வாங்க ஆணையும்பிறப்பிக்கப்பட்டுள்ளது.


தற்சமயம் இயங்கிவரும் 43 இரத்த சேமிப்பு வங்கிகளோடு மேலும் 10 இடங்களில் இரத்த சேமிப்பு வங்கிகள் ஏற்படுத்தவும் இருக்கும் 88 பல் மருத்துவப் பிரிவுகளோடு மேலும் 5 இடங்களில் புதிதாகப் பல் மருத்துவ சிகிச்சை பிரிவுகளை ஏற்படுத்தவும் 10 முடநீக்கியல் மருத்துவச் சிகிச்சை பிரிவுகளோடு மேலும் ஓரிடத்தில் புதிதாக முடநீக்கியல் மருத்துவ சிகிச்சை ஏற்படுத்தவும்,12 காது, மூக்கு, தொண்டை மருத்துவ சிகிச்சைப் பிரிவுகளோடு மேலும் இரு இடங்களில் காது, மூக்கு தொண்டை மருத்துவ சிகிச்சை ஏற்படுத்தவும், 18 பால்வினை நோய் மருத்துவ சிகிச்சைப் பிரிவுகளோடு மேலும் 5 இடங்களில் புதிதாக பால்வினை நோய் சிகிச்சை மருத்துவப் பிரிவுகள் ஏற்படுத்தவும், 14 கண் மருத்துவ சிகிச்சைப் பிரிவுகளோடு இரண்டு இடங்களில் புதிதாகக் கண் மருத்துவச் சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்தவும், 14 சிசுநோய் மருத்துவ சிகிச்சைப் பிரிவுகளோடு 5 இடங்களில் புதிதாகச் சிசுநோய் மருத்துவச் சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்தவும் வழிவகை செய்திருப்பது, சிறப்புத் துறைகளை ஏற்படுத்துவதில் அரசின் ஆர்வம் தெளிவாகப் புரியும்.

## குடும்பநலத் திட்டம்

தமிழ்நாட்டில் குடும்பநலத் திட்டம் செயல்படத் தொடங்கிய நாள் முதல் எவ்விதக் கட்டாயமோ அல்லது நிர்பந்தமோ இன்றி செயற்படுத்தப்பட்டு வருகிறது. குடும்பநலத் திட்டம் தாய்சேய் நலத்திட்டத்தோடு இணைக்கப்பட்டு செம்மையாகச் செயல்படுவதை பாராட்டிதேசிய விருதுகளைக் கூட பெற்றுள்ளது.

## 1978-79-ஆம் ஆண்டில் அறுவைச் சிகிச்சைத் திட்டச் சாதனை

குடும்பநலத் திட்டம் செயல்படத் தொடங்கிய நாள் முதல் 31—3—79 ஆம் நாள் வரை 30,05,194 கருத்தடை அறுவைகள் செய்யப்பட்டுள்ளன. அவைகளில் ஆண் அறுவை சிகிச்சை




எண்ணிக்கை 22,17,235. பெண் அறுவை சிகிச்சை எண்ணிக்கை 7,87,959. 1978-79ஆம் ஆண்டில் மட்டும் நிர்ணயிக்கப்பட்ட 2,76,700 கருத்தடை அறுவை சிகிச்சைகளுக்கு 2,22,355 கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டன. அவைகளில் ஆண் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்கள் எண்ணிக்கை 88,936 பேர். பெண் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்கள் எண்ணிக்கை 1,33,419 பேர்கள். இதன் மூலம் இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள மாநிலங்களிலேயே தமிழ்நாடு தான் முதலாவதாக இடம் வகிக்கும் பெருமை அடைகிறது.

## இந்திய முறை மருத்துவம்

சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனையை விரிவாக்கும் நோக்குடன், 9.12 இலட்ச ரூபாய் செலவில் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்த முனைந்திருப்பது தற்போது இயங்கி வருகின்ற 73 சித்தமருத்துவப் பிரிவுகளோடு மேலும் 15 அரசினர் மருத்துவமனைகளில் ரூ. 4.65 இலட்சம் மொத்தச் செலவில் தொடங்க வழிவகை செய்துள்ள ரூ. 6.70 இலட்சம் செலவில் இராமநாதபுரம் தர்மபுரி ஆகிய இடங்களிலுள்ள மருத்துவமனைகளில் சித்த மருத்துவ முறைக்கென்று 15 படுக்கை வசதிகள் கொண்ட தனிக் கட்டடம் கட்டுவதற்கும் சிதம்பரத்தில் நகராட்சி மன்ற பழைய மருத்துவமனைக் கட்டடத்தில் சித்த மருத்துவத்தில் தொக்கன முறையையும் ஆயுர்வேதத்தில் நவரக்கிளி முறையையும் பெருமளவு பயன்படுத்தும் மருத்துவமனை துவக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ரூ 2.99 இலட்சம் மொத்தச் செலவில் புதிதாக 20 கிராம மருந்தகங்கள் தொடங்கப்பட உள்ளன.

# துயர் துடைத்த அரசு



நவம்பர் திங்கள் என்றாலே தமிழகத்தைப் பொறுத்தவரையில் மக்கள் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு இருக்கிற நிலைக்கு இயற்கையின் சீற்றம் ஆளாக்கிவிடுகிறது.

கடந்த 1977-78ஆம் ஆண்டுகளிலும் இதே நவம்பர் திங்களில் தான் வெள்ளமும் புயலும் தமிழக மக்களைச் சோதனைக் கடலில் மூழ்கித் தவிக்க வைத்தது.

இதுபோன்ற இயற்கையின் சீற்றத்தையும் - எதிர் பாராத சோதனைகளையும் - வேதனைகளையும் இடையூறுகளையும் ஏழை - எளிய மக்கள் நல்வாழ்வில் அக்கறை கொண்டுள்ள அரசு திறமையுடனும், உடனடியாகவும் சமாளித்து பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணீரைத் துடைத்தது.

அரசு எடுத்த முன் எச்சரிக்கையின் விளைவாக உயிர்ச்சேதங்கள் பெருமளவுக்கு ஏற்படாத அளவுக்கு, தடுக்க-தவிர்க்க முடிந்தது. மக்கள் பெருத்த பாதிப்பிற்கு ஆளாகாதவர்களாகஇருக்க மிக நெருக்கடியான பல இடர்ப்பாடுகளுக்கு மத்தியில், இந்தப் பிரசனையைத் தமிழக அரசு உரிய நேரத்தில், தலையிட்டு உடனடியாக உதவி நிவாரணங்களைச் செய்து, வெற்றிகரமாகச் சமாளித்து, மக்களை இந்தக் கோரப்பிடியிலிருந்து மீட்டுத்தந்தது.


இந்த ஆண்டு நவம்பர் மாதமும் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பெருமழை பெய்தது.


கடலோரத் தமிழகப் பகுதி மட்டுமின்றி மதுரை, முகவை, நெல்லை, கோவை, நீலகிரி மாவட்டங்களிலும் பலத்தமழை. எங்கும் வெள்ளக்காடு. ஏரிகள்-குளங்கள் கண்மாய்கள் நிரம்பி வழிந்தன. ஆறுகளிலோ கேட்கவே வேண்டாம். அவ்வளவு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

அணைகள் அத்தனையும் நிரம்பின.

எண்ணற்றோர் இன்னலுக்கு ஆளாகினர்.

நிலச்சரிவு, வீடுகள், குடிசைகள் நீரில் மூழ்குதல், வெள்ளத்தால் பயிர்கள் பாதிப்பு, சாலைகள், உடைப்பு, ஏரிக்கரைகளில் சேதம் பல இடங்களில் உயிர்ச்சேதம்.





புயலால் - பெருமழையால் - வெள்ளத்தால் பாதிப்பு ஏற்படலாம் என்று தமிழக அரசின் அதிகாரிகள் முன்னதாகவே வானொலி - தினசரி செய்தித்தாள்கள்-மற்றும் 'தண்டோரா' மூலம் எச்சரிக்கையும் செய்தார்கள்.

துயர் தணிப்புப் பணிகளில் ஈடுபட அனைத்து அரசுத்துறைகளும் தயார்நிலையில் இருந்தன.

பல்வேறு பணிகளையும் ஒதுக்கிவைத்துவிட்டு வெள்ளப் பாதிப்புப் பகுதிகளில் துயர்தணிப்புப் பணிகளை மேற்பார்வையிடவும், முடுக்கிவிடவும், பாதிக்கப்கப்பட்ட மக்களுக்கு நேரில் ஆறுதல் கூறவும் மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர்களும் உடனடியாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விரைந்தனர்.

அரசு இயந்திரம் போர்க்கால அடிப்படையில் பணியாற்றுகிற வகையில் உடனடியாக முடுக்கிவிடப்பட்டது. போர்க்கால முனைப்போடு பணியாற்றிச் சேதங்களைத் தவிர்த்து உதவிகளை வழங்கினர்.

பொதுவாக, மழை பற்றாக்குறைப் பகுதிகளான மதுரை, நெல்லை, முகவை மாவட்டங்களில் கூட வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. கடந்த 50 ஆண்டுகளில் இதுபோன்ற மழை இருந்ததில்லை என்று கூறுமளவிற்கு மழை மிகுதியாகவும் கடுமையாகவும் இருந்தது.

## முதல்வர் விரைந்தார்

வெள்ளச் செய்தி என்பதைத் கேள்விப்பட்ட உடனேயே மாண்புமிகு முதல்வர் அவர்கள் கோவை நகருக்குப்பயணமானார்கள். கோவை நகரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சுற்றிப்பார்த்து நிவாரணப் பணிகள் எப்படி நடக்கின்றன என்பதைப் பார்வையிட்டார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் மாண்புமிகு அமைச்சர்கள் திரு அரங்கநாயகம், திரு. குழந்தைவேலு, திருமதி சுப்புலட்சுமி ஜகதீசன் ஆகியோரும் வெள்ளப் பகுதிகளைப் பார்வையிட்டனர்.

கோவை நகர் மட்டுமல்லாது கோவையைச் சுற்றிலுமுள்ள பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கும் சென்று மக்களுக்கு ஆறுதல் கூறினார்கள். முதல்வர் அவர்கள் சேற்றிலும் சகதியிலும் நடந்து போய் வெள்ளத்தால் தவிப்போருக்கு ஆறுதல் கூறினார்கள். அமைச்சர்களும் ஆறுதல் கூறினார்கள். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேட்டி, சேலைகள் அவர்கள் வழங்கினார்கள். வருவாய்த்துறை வாரிய உறுப்பினர் திருஎஸ்.பி. அம்புரோஸ், கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களும், பொது நிறுவனத்தைச் சேர்ந்தவர்களும் அரசுத் துறை அதிகாரிகளும் வெள்ளச் சேதப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்து நிவாரண நடவடிக்கைகளை எடுத்தனர்.

## நீலகிரியில் நிலச்சரிவு

நீலகிரி மாவட்டத்தில் குன்னூர் பகுதியிலும் மற்ற பகுதிகளிலும் ஏற்பட்ட நிலச்சரிவு சேத விவரங்களை முதல்வர் அவர்கள் அறிந்து துரித நடவடிக்கைகளை எடுக்கச் செய்தார்கள்.

## கூடல்மாநகரில்

மதுரை மாவட்டம் முழுவதும் வைகை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளத்தால் மூழ்கியது போல் காட்சி அளித்தது. மதுரையில் உள்ள எல்லா ஏரிகளிலும் வெள்ளத்தினால் கண்மாய்களில் உடைப்பு ஏற்பட்டு பல கிராமங்கள் தண்ணீரில் மூழ்கின. அந்தக் கிராமங்கள் வெள்ளத்தில் மிதந்தன என்றுகூடச் சொல்லும் அளவுக்கு இயற்கையின் சீற்றம் இருந்தது. சோழவந்தான் பகுதி கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

மழை மிகுதியால் பல்லாயிரக்கணக்கான குடிசைகள் அடியோடு அழிந்துபோயின. இந்தப் பகுதிகளில் எந்தவிதமான போக்குவரத்தும் இல்லாமல் இருந்தன. இதனால் இப்பகுதி மக்கள் தங்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வீடுகளின் கூரை மீது ஏறி நிற்கவேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.



இவர்களை உடனடியாகக் காப்பாற்ற தமிழக அரசு ராணுவத்திடமிருந்து 3 ஹெலிகாப்டர்களைத் தருவித்திருந்தது. அதே போல ராணுவ வீரர்கள்மிதவைப் படகுகள் உயிர்க்காப்புச் சாதனங்களுடன் மதுரையில் மீட்புப் பணிகளில் இறங்கினார்கள். கூரைமீது இருந்தவர்களைத் தூக்கி பாதுகாப்பான இடத்தில் கொண்டு சேர்த்தனர்.

மதுரை மாநகரிலும் முகவை மாவட்டம் திருப்புவனம், பரமக்குடி உள்பட பல்வேறு இடங்களிலும் வெள்ளத்தினால் மூழ்கியுள்ள கிராம மக்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து மற்றும் இரு மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன் ஹெலிகாப்டரில் சென்று உணவுப் பொட்டலங்களை (பன்-பிஸ்கட்-ரொட்டி) களையும் விநியோகித்தனர். பாதிக்கப்பட்ட பகுதிகளில் தாழ்வாக ஹெலிகாப்டரை பறக்கச் செய்து பார்த்தனர்.

**போர்க்கால நடவடிக்கை**

சேதப் பகுதிகளுக்குச் சென்று திரும்பிய மாண்புமிகு முதல்வர் உயர் அதிகாரிகளை அழைத்து நிவாரணப் பணிகளை முடுக்கி விட்டார். தங்குதடை எதுவுமின்றி மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்யுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

மதுரைப் பகுதியில் தொடர்ந்து பெய்த மழையினால் மதுரை-இராமநாதபுரம் மாவட்டங்களிலுள்ள நிலங்கள் எல்லாம் கடல் போல் காட்சி அளித்தன. முன் எச்சரிக்கை மூலமாக உயிர்ச்சேதம் எதுவுமில்லாமல் தடுக்க முடிந்தது. ஏரிகளில் ஏற்பட்ட உடைப்புகள் அடைக்கப்பட்டன. விருதுநகர்-ராஜபாளையம், திருவாடானை வட்டாரங்களிலும் ஏரிகளில் உடைப்பு ஏற்பட்டது. அவைகளும் உடனடியாக அடைக்கப்பட்டன.

**அரசு உடனடி உதவி**

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரிசி, மண்ணெண்ணெய், தங்குமிடவசதி மற்றும் லட்சக்கணக்கான ரூபாயும் அரசுச் சார்பில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

மழையில் முழுவதும் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு 100 ரூபாயும், ஒரு பகுதி சேதம் அடைந்தால் 50 ரூபாயும் மானியமாகக் கொடுக்கப்படுவதற்கான உத்தரவை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பிறப்பித்தார்கள்.

மதுரை மாவட்டம் வைகைக் கரைப் பகுதியில் குடியிருந்து வந்த 6,000 குடும்பங்கள் மிகவும் பத்திரமாக அரசு அறிவித்த வெள்ள அபாயத்தைக் கேட்டு வேறு இடத்திற்கு மாற்றப்பட்டன.

**மீட்புப் பணிகள் தீவிரம்**

மதுரை- இராமநாதபுரம் மாவட்டத்தில் மீட்புப் பணிகளில் பல ராணுவப் படகுகள் இறங்கின. வெள்ளத்தினால் வீடுகளின் கூரைகள்மீது இருந்தவர்களைக் காப்பாற்றுவது மிகவும் சிரமமாக இருந்தது. அப்படியிருந்தும் ஹெலிகாப்டர் விமானங்கள் மூலம் உணவுப் பொட்டலங்கள் போடப்பட்டு அவர்களைக் காப்பாற்ற விமானமும் மீட்புப் படகுகளும் தீவிரமாக வேலை செய்தன.

வீடுவாசல், உடைமைகளை இழந்து தவித்த மக்கள் நிவாரண முகாம்களில் அடைக்கலம் புகுந்தனர். இவர்களுக்குத் தேவையான உதவிகளை அரசு அதிகாரிகள் உடனிருந்து செய்து வந்தனர்.

மதுரைக்கு மேற்கேயுள்ள 'மாடக்குளம்' கண்மாய் உடைப்பு மதுரை மக்களையே பீதியடையச் செய்துவிட்டது. இந்தக் கண்மாய் உடைப்பினால் சேதம் இல்லை என்றாலும் திடீர்நகர், மத்தியப் பேருந்து நிலையம், மதுரைக் கல்லூரி, தமிழ்நாடு பாலிடெக்னிக் கல்லூரி, பழங்காநத்தம், அழகப்பன்நகர், ஜெய்ஹிந்துபுரம் ஆகிய இடங்கள் கண்மாய் உடைப்பினால் தண்ணீரில் மூழ்கின.

இங்குள்ள மக்கள் அருகிலுள்ள மாநகராட்சி - தனியார் பள்ளிகளில் தங்கச் செய்து பாதுகாக்கப்பட்டனர். இவர்கள் அனைவருக்கும் எல்லா வசதிகளும் உடனுக்குடன் செய்து கொடுக்கப்பட்டது.

மாண்புமிகு அமைச்சர் திரு. காளிமுத்து தண்ணீர் நிற்கும் பகுதிக்குச் சென்று பார்த்தார். மதுரை மத்திய பேருந்து நிலையத்திற்குள் சென்று பார்த்து பேருந்துப் போக்குவரத்திற்கு



மாற்று ஏற்பாடுகளைச் செய்தார்.

மாண்புமிகு அமைச்சர் திரு ராஜாமுகமது, மாண்புமிகு அமைச்சர் திரு சவுந்தரராஜன் மற்றும் மதுரை மேயர், மாநகராட்சி அலுவலர்கள் வெள்ளப் பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டனர். மக்களுக்கு ஆறுதல் கூறினர்.

### 40 ஆண்டு வரலாற்றில் இல்லாத வெள்ளம்

40 ஆண்டுக்கால வரலாற்றில் இல்லாத அளவுக்கு மதுரை மாவட்டம் பெரியகுளம் 'வராக நதி'யில் பெருமழை - வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. பல நூற்றுக்கணக்கான குடிசைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு உடனடியாக அனைத்து உதவிகளையும் செய்தது.

மதுரை மாநகரில் மழையால் பாதிக்கப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப்பட்ட மக்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேரில் சந்தித்து, சரியாக உணவு கிடைக்கிறதா என்று, கேட்டறிந்தார். உடனுக்குடன் உணவு கிடைக்கவும் முதல்வர் உத்தரவு போட்டார்.

திருமங்கலம் பகுதியில் பெருமழையால் ஏற்பட்ட பாதிப்பிற்குள்ளான மக்களுக்கு நிவாரண உதவிகள் அளிக்குமாறு அதிகாரிகளுக்கு மாண்புமிகு அமைச்சர் செல்வி பி.டி. சரஸ்வதி உத்தரவிட்டார். பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று அமைச்சர், மக்களிடம் குறைகளைக் கேட்டு அதனைப் போக்கினார். கண்மாய் உடைப்புப் பகுதிகளுக்குச்சென்று பார்வையிட்டுத் தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

### நெல்லைச் சீமையில்

மாண்புமிகு முதல்வர் அவர்கள் நெல்லை மாவட்டத்தில் வெள்ளச் சேதப் பகுதிகளுக்குச் சென்றார்கள். அவர் ஹெலிகாப்டர் மூலம் சென்று, பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டார். பல இடங்களுக்குச் சகதியிலும், முட்டு அளவு தண்ணீரிலும் நடந்துபோய் மக்களிடம் நேரடியாகத் தொடர்புகொண்டு ஆறுதல் கூறினார்.

வங்கக் கடலில் இலங்கை அருகே மையம் கொண்டிருந்த புயல் காற்றுச் சின்னம் மேலும் மேலும் வலுவடைந்து நெல்லை மாவட்டம் தூத்துக்குடி கரையை நெருங்கித் தாக்கியது.

முன் எச்சரிக்கையால் பெரும் சேதங்கள் நிகழா வண்ணம்



தடுப்பு நடவடிக்கையை அரசு மேற்கொண்டது.

நெல்லை மாவட்டத்தில் மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளைக் கவனிப்பதற்காக மாண்புமிகு அமைச்சர்கள் திரு எட்மண்ட், திரு ராகவானந்தம் திரு குழந்தைவேலு நெல்லைப் பகுதிக்கு விரைந்து வந்தனர். பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அதிகாரிகளுடன் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள்.

அப்பகுதிவாழ் மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்குச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கடலோரப்பகுதிகளில் காவல் துறையினரின் பாதுகாப்பும் போடப்பட்டது.

நெல்லை மாவட்டத்திலுள்ள பாபநாசம், மணி முத்தாறு அணைகள் நிரம்பிவிட்டன. மணி முத்தாறு அணை 115 அடி தண்ணீர் நிரம்பிவிட்டதால் அணையைத் திறக்க நேரும்பொழுது அந்த அணைத் தண்ணீர் திறந்து [illegible]தின் மூலம் பல கிராமங்களை மூழ்கிவிடும் நிலை ஏற்படும் என்று மக்களுக்கு அரசு எச்சரிக்கை கொடுத்தது. அதனால் அந்தக் கிராமங்களிலுள்ள மக்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டனர். நெல்லை மாவட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு அவர்கள் மழையால் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு ஆறுதல் கூறி அவர்களுக்கு அரிசியும், உதவித்தொகையும் அரசு சார்பில் அளித்தார்.

### மற்ற மாவட்டங்கள்

திருச்சி, புதுக்கோட்டை மாவட்டத்திலும் தஞ்சை மாவட்டத்திலும் தொடர்ந்து பெய்த மழையினால் இம்மாவட்டங்களில் பல இடங்களில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் பயிர்கள் தண்ணீரில் மூழ்கின. இந்தப் பகுதிகளில் நூற்றுக்கணக்கான குடிசைகள் தண்ணீரில் மூழ்கி அழிந்தன. திருச்சியில்தொடர்ந்து பெய்த மழையினால் காவேரி நதியின் தண்ணீரைக்கொள்ளிடத்திற்குத் திருப்பிவிடப்பட்டது.

மழையின் காரணமாகத் தமிழ்நாட்டில் பல மாவட்டங்களி



னுள்ள ஏரி, குளம், கண்மாய்களில் தண்ணீர் நிரம்பி வந்தது. இவை தண்ணீர் மட்டத்தைத் தாண்டாமல் இருக்க, கரைகளை வலுப்படுத்தி ஆவன செய்யப்பட்டு வருகிறது.

இதனால் உயிர்ச்சேதம் ஏற்படாமல் இருக்க தாழ்வான பகுதிகளில் வாழும் மக்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டு அவர்கள் தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்து இருக்கிற தகவலை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள்.

**சென்னையையும் விட்டு வைக்கவில்லை**

சென்னை நகர மக்களைச் சென்ற ஆண்டு பயமுறுத்திய புயல்-மழை இந்தத் தடவை அவ்வளவு வேகத்தை-சீற்றத்தைக் காட்டவில்லை எனினும் புயல் வருமோ, வெள்ளம் வருமோ என்ற பீதி நகரமக்கள் மத்தியில் பரவலாக இருக்கத்தான் செய்தது. மிகவும் பீதிக்கு ஆளான கோட்டூர் புரம் பகுதி மக்கள் அரசின் முன் எச்சரிக்கை, தடுப்பு நடவடிக்கை காரணமாக எந்த விதப் பாதிப்பிற்கும் ஆளாகாமல் பாதுகாக்கப்பட்டனர்.

தற்போது ஏற்பட்ட வெள்ளத் துயரங்கள் அடுத்த மழைக்காலத்தில் ஏற்படாதிருக்க நிரந்தர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. குடிசைப் பகுதிகளில் வடிகால் வசதி ஏற்படுத்தப்பட்டது. குடிசை மாற்று வாரியம், குடிநீர் வடிகால் வாரியம், வீட்டு வசதி வாரியம் மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் சென்னை மாநகராட்சி தனியான கவனம் எடுத்துக் கொண்டு சென்னையில் மழையால் பாதிக்கப்படக்கூடிய பகுதிவாழ் மக்களுக்கு உதவி செய்ய முழுமூச்சுடன் முன்னெச்சரிக்கையாகவே பணியில் இறங்கின.

**கோட்டூர்புரம்**

அடையாறு, கோட்டூர்புரம் பகுதிகளில் வெள்ளப்பெருக்கு இந்த ஆண்டு தவிர்க்கப்பட்டது. இதேபோல வியாசர்பாடி பகுதியிலும் வெள்ளப்பெருக்கு ஏற்படுவது தவிர்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சென்னை மாநகராட்சி பகுதிகளில் மாண்புமிகு அமைச்சர் திருகாளிமுத்து அவர்களும் மாநகராட்சி அதிகாரிகளும் சென்று அவர்களுக்கு உணவுப் பொட்டலங்களை வழங்கினார்கள்.

வெள்ளக் கொடுமை காரணமாகக் கொடூரமான நோய் எதுவும் மக்களுக்கு வந்துவிடக் கூடாது என்பதில் அரசு அதிக அக்கறைகாட்டி, நோய் தடுக்க தமிழ்நாடு முழுவதும் 5 இலட்சம் பேருக்கு காலரா தடுப்புஊசி போடப்பட்டது.





**வெள்ளச்சேதம் பலகோடியைத் தாண்டும்**

தமிழ்நாட்டில் ஏற்பட்ட வெள்ளச்சேதம் பல கோடி ரூபாயைத் தாண்டும் என்று வெள்ளப் பகுதிகளை நேரில் பார்த்து திரும்பிய மாண்புமிகு முதல்வர் ஒரு பேட்டியில் கூறினார்கள். இதே கருத்தை மாண்புமிகு நிதியமைச்சர் நாஞ்சில் மனோகரன் அவர்களும், இந்தியத் தலைமை அமைச்சர் மாண்புமிகு சரண்சிங் அவர்களிடம் நேரில் டெல்லிக்குச் சென்று தெரிவித்துள்ளார்கள்.

தமிழ்நாட்டில் பெரு மழை வெள்ள கொடூரத்திற்கு ஆளான கோவை, மதுரை, முகவை, நெல்லை மாவட்டங்கள் மட்டுமின்றி தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, தென்னார்க்காடு, செங்கற்பட்டு, வடஆர்க்காடு, நீலகிரி மற்றும் சேலம், தர்மபுரி, சென்னை ஆகிய மாவட்டங்களிலும் மழை மிகுதியால் பலவகையில் பாதிப்பு நடந்திருக்கின்றன. அத்தகைய இடங்களுக்கும் அரசு உரிய நடவடிக்கை எடுத்துள்ளது.

**சேதங்களும் நிவாரணங்களும்**

தமிழ்நாட்டில் வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதங்களும் அதற்குத் தமிழக அரசு எடுத்த துரித நடவடிக்கையின் விவரங்களும் வருமாறு:

1,51,323 குடிசைகள் சேதமடைந்தன. சேதமடைந்த வீடுகளுக்கு 50 சதவிகித மானியமும் 50 சதவிகிதம் கடனாகவும் அரசு கொடுக்கிறது. 15.19.84.000

ரூபாய் குடிசைக்கும் வீடுகளுக்கும் வழங்க அரசு உத்தேசித்துள்ளது.

மீனவர்கள் மீன்பிடிக்கப் பயன்படுத்தப்பட்ட 20,000 ரூபாய் மதிப்புக்கு யந்திர படகுகளும் செங்கல்பட்டு மாவட்டத்திலும் தஞ்சாவூர் மாவட்டத்தில்18,300 ரூபாய் மதிப்புக்கு யந்திரப் படகுகளும் சேதம் அடைந்தன. இதே போலத்தஞ்சாவூர்மாவட்டத்தில் 8,800 ரூபாய் மதிப்புக்கும் புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ. 2,000 மதிப்புக்கும் பெரியார் மாவட்டத்தில் ரூ. 750 மதிப்புக்கும் கட்டு மரங்கள் இழப்பு ஏற்பட்டது. மீனளத் துறைஉடனடியாகஇந்தமாவட்ட மீனவர்களுக்கு ரூ. 29,020 மதிப்புள்ள வலைகள் வழங்க உத்தேசித்துள்ளது.

தமிழ்நாட்டில் 1,161 குளங்கள், 178 அணைக்கட்டுகள். 1610 கால்வாய்கள் சேதம் அடைந்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இவைகளைச் செப்பனிட்டு சீர்படுத்த ரூ. 537.00 இலட்சம் செலவழிக்க வேண்டியுள்ளது.


சேதமடைந்துள்ள அரசுத் துறைக்குச் சொந்தமான சாலைகளுக்காக 1550.50 இலட்ச ரூபாயும், ஊராட்சி - ஊராட்சி ஒன்றியச் சாலைகளுக்காக 1028.00 இலட்சம் ரூபாயும் வனத்துறை சாலைகளுக்காக ரூ. 5.00 இலட்ச ரூபாயும் ஆகமொத்தம் 2583.50 இலட்சம் ரூபாய் செலவிட வேண்டியுள்ளது.மேலும் பொதுப் பணித்துறையின் பராமரிப்பில் உள்ள 1,644 கட்டடங்களும் பாதிக்கப்பட்டன. இவைகளைச் செப்பனிட ரூபாய் 2,34,60,700 தேவைப்படும்.

சேதமடைந்த ஊராட்சி கட்டடங்கள், பள்ளிக் கட்டடங்கள், அரசுக் கட்டடங்களுக்காக81.71 இலட்சம் ரூபாய் செலவிட வேண்டியுள்ளது.

**வெள்ளச் சேதங்களைத் தடுக்க அரசின் நிரந்தர நிவாரணத் திட்டங்கள்**

பெருமழை வெள்ளம் போன்ற இயற்கை உற்பாதங்களால் ஏற்படும் பாதிப்புக்களில் இருந்து நிரந்தர நிவாரணம் அளிக்கும் பல அம்சத் திட்டத்தையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மதுரையில் செய்தியாளர்களிடையே வெளியிட்டார்.

மாண்புமிகு முதல்வர் அறிவித்த நிவாரணத் திட்டங்களுக்கிணங்க 'அரசு ஆணைகள்' பிறப்பிக்கப்படும்.



வெள்ளத்தினால் துண்டிக்கப்பட்ட நிலையில் உள்ள இடங்களுக்கு செய்தி - போக்குவரத்து சாலை வசதிகள், மற்றவசதிகளை ஏற்படுத்துவதே நிவாரணப் பணிகளில் முதல் நடவடிக்கையாகும்.

பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உணவு, உடை, தங்குமிடம் மருத்துவ வசதி ஆகியவற்றை நிவாரணக்குழு உடனடியாகச் செய்யும்.

நெசவாளர்கள், தொழிலாளர்கள், கைவினைத் தொழிலாளர்கள் வெள்ளத்தினால் தங்களுடைய தொழிற்கருவிகள் இழந்து இருப்பார்களேயானால் ஆதாரத்துடன் மனுச்செய்தால் பாதித்தொகை மானியமாகவும் பாதித்தொகை கடனாகவும் வழங்கப்படும்.

அரசாங்க உயர் அதிகாரிகள் உள்ளடக்கிய வெள்ள நிவாரணக் குழு 'போர்க்கால முனைப்போடு' சீரமைப்பு வேலைகளை மேற்கொள்ளும்.

அதிக வளைவாக இருக்கும் பாதைகள் நேர்ப்பாதைகளாக மாற்றி அமைக்கப்படும். அந்தப் பகுதியில் வசிப்பவர்கள் மேட்டுப்பாங்கான இடத்தில் குடியமர்த்தப்படுவார்கள்.

தீயினாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.200 ரூ. 100, ரூ. 50 என்ற அடிப்படையில் முன்பு உதவி அளிக்கப்பட்டு வந்தது.

இனிமேல், வீடு இழந்த குடும்பத்தில் உள்ளவர்களின் உழைப்பைப் பெற்று பாதி மானியமாகவும், பாதி கடனாகவும் வழங்கி மேட்டுப்பாங்கான இடத்தில் அவர்களுக்கு வீடுகட்டிக் கொடுக்கப்படும். கடனை ரூபாய் பத்து வீதம் தவணைகளில் திருப்பிச் செலுத்தினால்போதும்.

ஏரி, குளம் ஆற்றுப் படுக்கைகளின் கரைகள் உறுதி உள்ளதாக உயர்த்தப்படும்.

ஆறு, ஏரிக்கரைகளின் மேல் மரங்களை நடுவதால் அவற்றின் அகலம் குறைந்து வெள்ளம் ஏற்பட்டால் உடைப்புகள் எடுத்துக் கொள்வதால் இனி கரைகளில் மரங்கள் நடுவதை அனுமதிப்பதில்லை. எதிர்காலத்தில் வெள்ள அபாயங்களைத் தடுக்க மக்கள் வசிக்கும் இடங்கள் பாதைகள் ஆகியவற்றுக்குச் சேதம் விளைவிக்காத வகையில் ஆற்றின் தண்ணீர் வேறு பக்கம் ஓட வழிவகை செய்யப்படும்.

இப்படிப்பட்ட நெருக்கடி ஏற்படும் காலங்களில் உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படாத வகையில் அவசர கால உதவிக்காக உணவுப் பொருட்கள் சேமிப்பில் இருக்கும் தானியங்கள் கெட்டுப்போகாமல் இருக்க ஆண்டுதோறும் மாற்றப்படும்.

நகரங்களில் குடிசைவீடுகளை இழந்தவர்கள் மீண்டும் வீடு கட்டிக்கொள்ள அவர்களுக்குச் சொந்த இடம் இல்லை என்றால் மேட்டுப்பாங்கான இடத்தில் வீடு கட்டிக் கொடுக்கும்போதே வீட்டு மனைப்பட்டாவும் வழங்கப்படும்.

அந்தப் பகுதிகளில் மக்கள் தொகைக்கு ஏற்ப தொடக்கப் பள்ளி, ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவை கட்டப்படும். இந்தப் புதிய குடியிருப்புக்கள் கட்டி முடிக்கப்படும் வரை இப்போது உள்ள இடங்களில் சில திருத்தங்களோடு குடியிருக்க அனுமதி வழங்கப்படும்.

இனி எக்காரணம் கொண்டும் ஏரி, குளம், ஆற்றுப்படுகை போன்ற தாழ்வான இடங்களில் குடிசைவீடுகள் கட்ட அனுமதி கண்டிப்பாக வழங்கப்பட மாட்டாது.

இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெள்ள நிவாரணத்திற்காக அடுக்கடுக்கான ஆக்கப்பூர்வ திட்டங்களை அறிவித்துள்ளார். இன்னலுறும் மக்களுக்கு, தாய்ப்பாசத்துடன் விரைந்தோடி வந்து துயர்துடைக்கும் தமிழக அரசின் பணிகள் பாதிக்கப்பட்ட மக்களின் நெஞ்சங்களிலே பால் வார்த்தது போல இருக்கும் என்பது உறுதி.

—ஆனந்தன்

# உங்களுக்குத் தெரியுமா?

**சிறு தொழில்கள் துவக்குவதற்கான வழிமுறைகள் எளிதாக்கப்பட்டுள்ளன.**

**நீங்கள் துவங்கவிருக்கும் சிறுதொழில் நிர்ணயிக்கப்பட்ட**
**தொழில் பகுதிகளில் அமைவதோடு**

* *பொது சுகாதாரத்தினைப் பாதிக்கக்கூடிய குறிப்பிட்ட*
*14 தொழில்களில் ஒன்றாக இல்லாதிருந்தால்*
*பொதுசுகாதாரத் துறையின்*
*முன் அனுமதி பெறத் தேவையில்லை.*

** *25 பரித்திறனுக்கு மேற்படாத மின் இணைப்பு பெற்றிருந்தால்*
*நகரமைப்புத் துறையின் முன் அனுமதி பெறத் தேவையில்லை.*

** *தொழிற்சாலைகள் சட்டத்திற்கு உட்படாததாக இருந்தால்*
*(அதாவது தொழிலாளர்களின் எண்ணிக்கை மின் சக்தி*
*உபயோகித்தால் 10க்குக் குறைவாகவும்,*
*மின்சக்தி உபயோகிக்காவிடில் 20க்குக் குறைவாகவும்*
*இருத்தல்) தொழிற்சாலைகள்,*
*துறையின் முன் அனுமதி பெறத் தேவையில்லை.*

## தொழிலைத் துவங்குமுன் உள்ளாட்சி மன்றத்தின் ஒப்புதல் மட்டும் பெற்றால் போதுமானதாகும்.

**நீங்கள் துவங்கவிருக்கும் தொழில், குடிசைத் தொழிலாயிருந்து**
**5 பரித்திறனுக்குத் குறைந்த மின் இணைப்பு கொண்டதாயிருந்தால்,**
**குடியிருப்புப் பகுதிகளில் கூட துவங்கலாம். இதற்கும்**
**உள்ளாட்சி மன்றத்தின் ஒப்புதல் மட்டுமே போதுமானதாகும்.**
**சுகாதாரத்துறையின் ஒப்புதல் தேவையில்லை.**

**தேவையான இதர விவரங்களுக்கு உங்கள் மாவட்டத்திலுள்ள**
**தொழில் மையத்தின் பொது மேலாளரை /**
**தொழில் வணிகத்துறை இயக்குநரை அணுகவும்.**

**தொழில் வணிகத்துறை இயக்குநர்.**

DIPR/54457/79-12

# தொழிலாளர் நலம்

தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களுக்குச் சட்டப்படி கிடைக்கவேண்டிய சலுகைகள் முழுமையாக அவர்கள் பெறுவதற்கு வாய்ப்பு அளிக்கவும் அரசு பல சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறது.

தொழிற்சாலைகள், மோட்டார் போக்கு வரத்து நிறுவனங்கள், பீடி மற்றும் சுருட்டு தயாரிக்கும் நிறுவனங்கள், கடைகள், நிறுவனங்கள் முதலியவற்றில் பணிபுரியும் தொழிலாளர்கள் இதுவரை பணியாற்றிய காலம், அல்லது பெற்ற ஊதியம் பற்றிய எந்தவிதச் சான்றும் அவர்கள் கைவசம் இல்லாமலிருந்தது. அதனால் அவர்களால் சட்டப்படி பெற வேண்டிய சலுகைகளைப் பெற இயலாமல் இருந்தது. இந்த நிலைமையை மாற்றும் வகையில் தமிழக அரசு அந்தத் தொழிலாளர்களுக்கு, மேற்படி நிறுவனங்கள் பணிச்சீட்டு (சர்வீஸ் கார்டு) கட்டாயமாக வழங்கவேண்டும் என்று ஆணையிட்டுள்ளது.

தற்போது 100 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட நிறுவனங்களுக்கு 1946ஆம் ஆண்டு தொழில் நிறுவன வேலை (நிலை ஆணைகள்) சட்டத்தின் விதித்துறைகளை 50 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட தொழில் நிறுவனங்களுக்கு நீட்டிக்க அரசு ஆணைகள் பிறப்பித்தது.

**மாதிரி நிலையாணைகள் நீக்கம்**

தொழிலாளர் ஒருவர் தொடர்ச்சியாக 8 நாட்களுக்கு மேல் வேலைக்கு வராதிருந்தால் அவரை வேலையிலிருந்து நீக்கி விடுவதற்கான மாதிரி நிலையாணைகளில் அல்லது சான்றிட்ட நிலையாணைகளில் உள்ள விதித்துறை நீக்கப்படவேண்டுமென்றும், அவர் வேலைக்கு வராது இருந்த நாட்கள் தவறான நடத்தை என்று மட்டுமே கருதப்பட்டு, தன்னிலை விளக்கம் அளிக்க அவருக்குப் போதிய வாய்ப்பு அளித்த பிறகு விசாரிக்கப்பட வேண்டும் என்பதே அரசின் கருத்தாகும். இக்கருத்துக்குச் செயல்வடிவம் அளிக்கும் வகையில் அரசு மாதிரி நிலையாணைகளைத் திருத்தி வெளியிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தொழிலாளர் வர்க்கத்தின் பெரும்பான்மையோர் ஊதியக்கொடைப் பயனைப் பெறும் வண்ணம் ஊதியக் கொடை வழங்குவதைக் கடைகள், நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், சிறுதொழிற்சாலைகள் ஆகியவற்றில் பணி புரியும் தொழிலாளர்களுக்கும், தமிழ்நாடு அரசு நீட்டித்துள்ளது. அதனால் 20 தொழிலாளர்களுக்குக் குறைவாகவும், ஆனால் 10 தொழிலாளர்களுக்குக் குறைவாகவும் உள்ள மேற்கூறிய நிறுவனங்களில் உள்ள பணியாளர்கள் ஊதியக்கொடை வழங்கல் சட்டத்தில் வகைசெய்துள்ள பயன்களைத் துய்த்து வருகின்றனர்.

**பீடித் தொழிலாளர்களுக்குச் சலுகை :**

தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டு பீடி சுருட்டுத் தொழிலாளர்கள் (பணிநிலைமைகள்) விதிகள் 31(5)ன்கீழ் மேல்முறையீடு செய்பவர் என்ற முறையில், தொழிலாளரில் ஒருவர் தேவையான நகல் முத்திரைத் தாள்களுக்குக் கட்டணம் செலுத்துவதன் பேரிலேயே, மேல் முறையீட்டு அதிகாரியின் ஆணைகளைப் பெற இயலும் முத்திரைத் தாள்களை வழங்கவேண்டும் என்னும் நிபந்தனையிலிருந்து, தொழிலாளர்களுக்கு இருந்த இந்த இடர்ப்பாட்டை அரசு அகற்றியது.

இப்போதுள்ள நிலவரத்தின்படி, தொழிலாளர்கள் ஆணை நகலை இலவசமாகப் பெற இயலும்.

தொழிலாளர் துறை அலுவலர்கள், தொழிலாளர்கள், நீதிமன்றம் அல்லது தொழில் நடுவர் நீதிமன்றங்கள் முன்னிலையில் தொழிலாளர்கள் அல்லது தொழிலாளர் சார்பாகத் தொழிலாளர் சங்கங்கள் தாக்கல் செய்யும் மனுக்களில் நீதிமன்றக் கட்டண முத்திரைத் தாள் ஒட்ட வேண்டியதில்லை என்று அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

**உணவகங்கள் சட்டம்**

தொழிலாளர் நலனைக் கருத்திற் கொண்டு அரசு, உணவகங்களில் உள்ள தொழிலாளர்கள் மேல் முறையீடு செய்யும் பொழுது அத்தகைய அலுவலர்களுக்கு, வழக்கில் சம்பந்தப்பட்டவர்களுக்குச் சம்மன் (அழைப்பு ஆணை) அனுப்பிக் கட்டாயமாக வரவழைக்கும் அதிகாரத்தை வழங்கும் சட்டத்திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறது.

1948-ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் கீழ் மாநில அரசு சம்பந்தப்பட்ட அட்டவணையிலுள்ள வேலைகளுக்கும், தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டத்தின் விதிகளை அரசு தற்போது நீட்டித்துள்ளது. இதன் பலனாக, இந்த நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களும் தேசிய பண்டிகை விடுமுறை நாட்களைப் பெற உரிமை பெற்றுள்ளனர்.

**தொழில் உறவு**

தொழிலாளர்களுக்கு வேலை நிறுத்தம் செய்வதற்கு உள்ள உரிமையை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. அதே சமயத்தில் வேலை நிறுத்தங்கள் அடிக்கடி நிகழ்வதைத் தடுக்க அல்லது அத்தகைய வேலை நிறுத்தங்கள் நீடித்துக் கொண்டே போகும்போது அவற்றிற்கு முடிவுகாண வேண்டி தொழில் தகராறுகளில் தலையிட்டுச் சிறந்த முறையில் இணக்

கம் செய்வதன் மூலமும் சுமுகமாக அவற்றிற்குத் தீர்வு காண்பதன் மூலமும் அரசு உரிய காலத்தில் நடவடிக்கை மேற்கொண்டது.

தொழிற்சங்க அமைப்பிற்குட்பட்ட பல தொழிலாளிகளின் நலத்தைப் பாதுகாக்க அரசு குறைந்த பட்ச ஊதியச் சட்டத்தின் மூலம் அவர்களுக்குப் பின்வரும் நன்மைகளை அளித்துள்ளது:

வேளாண்மை, வேளாண்மைத் துணைத் தொழில் ஆகியவற்றில் ஈடுபட்டோர்களுக்கான குறைந்த அளவு ஊதியத்தை இந்த அரசு உயர்த்தி அமைத்திருக்கிறது. இத்தகைய உயர்வு, வருவாய்த் துறை வாரிய உறுப்பினர் தலைமையின்கீழ் அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் 15.9.79 முதல் அமுலுக்கு வருவதற்கு ஆணை பிறப்பித்துள்ளது. இதன்படி, களைஎடுத்தல், நாற்று நடுதல் என்ற பணிக்குக் குறைந்த பட்சக் கூலி ரூ. 5-ம், மற்ற பணிகளுக்குக் குறைந்தபட்சக் கூலி ரூ. 7-ம் தன்னுடைய மாட்டைக் கொண்டு உழவுக்கு வரும் தொழிலாளிக்கு நாளொன்றுக்கு ரூ.12-ம் அதிகப்படுத்தப்பட்ட ஊதியம் கிடைக்கும்.

பின்வரும் வேலைகளுக்குக் குறைந்த பட்சக் கூலி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது:

1. ''மார்க்கட்டுகள்'' சந்தைகள் மற்றும் இதுபோன்ற இடங்களில் பாரம் ஏற்றி இறக்கும் தொழில்.
2. மோட்டார் வண்டிப் பட்டறைத் தொழில்.
3. அச்சகத் தொழில்

பின்வரும் வேலைகளுக்குக் குறைந்த பட்ச ஊதியம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது:

1. தீப்பெட்டி, வாணவெடி, உற்பத்தித் தொழில் பணிகள்.
2. செங்கல், ஓடு உற்பத்தித் தொழில் பணிகள்
3. சவ்வரிசித் தொழில் பணிகள்
4. உப்பளத் தொழில் பணிகள்.
5. பொதுப் போக்குவரத்துத் துறைப் பணிகள்.
6. புகையிலை (பீடி உற்பத்தி அடங்கலாக) தொழில் பணிகள்

### தமிழில் பெயர்ப் பலகைகள்


கடைகள், நிறுவனங்கள், உணவு விடுதிகளின் பெயர்ப்பலகைகளைத் தமிழில் எழுதி வைக்க உத்தரவிட்டு சம்பந்தப்பட்ட சட்ட விதிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

### தொழிலாளர் நலச் சட்டத்திருத்தங்கள்

சட்டத்திலேயே விதித்துறைக்கு வகை செய்து தொழிலாளர்களுக்குப் பயனும் பாதுகாப்பும் அளிக்க உறுதி செய்வதே அரசின் கொள்கையாகும். இதைக் கருத்திற்கொண்டு தற்போதுள்ள தொழிலாளர் நலச் சட்டங்களுக்குத் திருத்தங்களை எடுத்துரைக்கத் தொழிலதிபர்கள், தொழிலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் ஆகியோர் அடங்கிய முத்தரப்புக் குழுவை அரசு அமைத்துள்ளது.

### சிறந்த தொழில் உறவு

இத்திட்டத்தின் கீழ் நிர்வாகத்தினருக்கும், தொழிற்சங்கங்களுக்கும் சிறப்புப் பரிசுகளை வழங்குவதன் மூலம் நிர்வாகத்தினருக்கும், தொழிலாளர்களுக்கும் இடையே சிறந்த தொழில் உறவைப் பராமரிக்கவும், அதைத் தொடர்ந்து பாதுகாத்து வரவும் ஊக்குவிப்பதற்காக 1978ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு, சிறந்ததொரு நடவடிக்கை எடுத்தது. பரிசு பெறுவதற்கு உரியோரைத் தேர்ந்தெடுக்க ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் இயங்கிய குழுவின் பரிந்துரைகளை ஏற்று அரசு 1978ஆம் ஆண்டிற்கான பரிசு பெறும் நிர்வாகத்தினரையும், தொழிற்சங்கங்களையும் தேர்ந்தெடுத்துள்ளது.



### தொழிலாளர் நல வாரியத்தின் பணிகள்

இவ்வாரியம் மாமல்லபுரம், குற்றாலம், ஊட்டி ஆகிய இடங்களில் தொழிலாளர்களுக்கு விடுமுறை ஓய்வு இல்லம் நடத்தத் தீர்மானித்துள்ளது. தற்போது ஏர்க்காட்டில் விடுமுறை ஓய்வு இல்லம் நடைபெற்று வருகின்றது. இங்கு ஒரே சமயத்தில் 10 நபர்கள் தங்கலாம். நபர் ஒருவருக்கு ரூ. 1.50 வீதம் இயல்பான வாடகை வசூலிக்கப்பட்டு வருகிறது. பிற இடங்களில் விடுமுறை இல்லங்கள் விரைவில் தொடங்கப்படும்.

### தாம்பரம் காசநோய் மருத்துவமனையில்...

இவ்வாரியம், தாம்பரம் காச நோய் மருத்துவமனையில் தொழிலாளர்களுக்குத் தனியாக 26 படுக்கைகள் கொண்ட காச நோய் வார்டைக் கட்டியுள்ளது.

இவ்வாரியம், பெரம்பூர் (சென்னை) தண்டையார்ப்பேட்டை,(சென்னை) மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் நான்கு படிப்பகங்களை நடத்தி வருகிறது. வாசகர்களின் பயனுக்காகச் செய்தித்தாள்கள், வார, மாதாந்திர இதழ்கள் வழங்கப்படுகின்றன.

இவ்வாரியம் தொழிலாளர்களுக்காக மாவட்ட மண்டல மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசினை அளித்து வருகின்றது.



# கால்நடை வளர்ச்சி

நாட்டின் முன்னேற்றம் கிராமங்களின் முன்னேற்றத்திலேயே சார்ந்துள்ளது என்பதை நன்குணர்ந்த இன்றைய அரசு ஏற்றமிகு சமுதாயத்தை உருவாக்கும் பொருட்டு, பல்வேறு வளமான திட்டங்களைத் திட்டி ஆக்கப் பணிகளில் முனைந்து செயலாற்றி வருகின்றது.

இத்திட்டங்களின் மூலம் முழுப் பலனையும் அடைபவர்கள் சிறு-குறு நில விவசாயிகள், வேளாண் தொழிலாளர்கள் மற்றும் சமுதாயத்தின் நலிந்த பிரிவினர் ஆவர். கடந்த இரண்டரை ஆண்டுக் காலத்தில் கால்நடை பராமரிப்புத்துறை ஆற்றியஅரும் பணிகளின் சிறப்புக் கூறுபாடுகள் வருமாறு:

**கால்நடை வளர்ச்சி சிறப்புத் திட்டங்கள் :**

இத்திட்டம் செங்கல்பட்டு, வடஆர்க்காடு, தென்ஆர்க்காடு, சேலம், மதுரை, கோவை, திருநெல்வேலி மாவட்டங்களில் செயல்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயனடைந்தவர்கள் சிறு-குறு நில விவசாயிகள், வேளாண் தொழிலாளர்களாவர். இத்திட்டத்தின்கீழ் ஏற்பட்ட சாதனைகள் வருமாறு:

(அ) 9909 கலப்பினக் கன்றுகளுக்கு மான்யம் வழங்கப்பட்டன.

(ஆ) 5609 ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன.

(இ) 1570 கோழி வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன.

(ஈ) ரூ. 162.34 இலட்சம் இத்திட்டத்தின்கீழ் செலவிடப் பட்டது.

**பழங்குடியினரின் மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டம் செயற்படும் மாவட்டங்கள் சேலம், தென் ஆர்க்காடு, வடஆர்க்காடு, திருச்சி தருமபுரி ஆகும். இத்திட்டத்தினரால் பழங்குடியினர் பெரும் பயனடைகின்றனர். கடந்த இரண்டரை ஆண்டில் (அ) பயனடைந்த குடும்பங்கள் 3712.

(ஆ) செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 25.70 இலட்சம்.

தமிழக அரசால் புதியதாகத் துவங்கப்பட்டத் திட்டங்களில் ஒன்று. இது ரூ. 9.18 இலட்சத்தில் இதுவரை 6 நிலையங்கள் மதுரை, திருநெல்வேலி, வேலூர் ஊட்டி, கடலூர், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் துவங்கப் பட்டு செவ்வனே பணியாற்றி வருகின்றன.

இராமநாதபுரம், தருமபுரி, சென்னை முதலிய மாவட்டங்கள் தவிர மற்ற 12 மாவட்டங்களில் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு, ரூ.101.87 இலட்சம் செலவில் 18113 சிறுவிவசாயிகள் கறவை மாடுகள், வண்டி மாடுகள், ஆடுகள், பால்குவளைகள் முதலியன பெற்று பயனடைந்துள்ளனர்.

**ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம்**

இத் திட்டம், இரண்டரை ஆண்டுக் காலத்தில் மத்திய அரசின் உதவியோடு துவங்கப்பட்ட புதிய திட்டமாகும். ரூ. 163.70 இலட்சம் செலவில் 161 வட்டாரங்களில் பசுமாடுகள் வழங்கப் பட்டதுடன், ஆடு, கோழி வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கொடைக்கானல் மற்றும் பழனி பகுதியிலுள்ள 1000 கலப்பினக் கன்றுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, கடந்த இரண்டரையாண்டு காலத்தில் அவைகளுக்கு ரூ.7.00 இலட்சம், கன்று மான்யமாக வழங்கப்பட்டுள்ளது.

உதகமண்டலம் மலைப் பகுதியில் வாழும் குறுநில விவசாயிகள், சிறு விவசாயிகள், நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள் இவர்களின் வாழ்க்கை வளம் பெற தமிழக அரசு 6.93 இலட்சம் செலவில் 400 ஆடு வளர்ப்புப் பிரிவுகள் அமைத்து 400 குடும்பங்கள் பயன் அடைய வழிவகை செய்துள்ளது.


மாவட்டக் கால்நடைப் பண்ணையை விரிவுபடுத்த 5.49 இலட்சம் ஒதுக்கியுள்ளது. உதகமண்டலத்தில் கால்நடை புலனாய்வுத் திட்டம் ஒன்றை ரூ. 2.09 இலட்சம் செலவில் ஏற்படுத்தி செயல்படுத்தி வருகிறது.

வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் தருமபுரி, இராமநாத

புரம் மாவட்டங்களில் ரூ.62.09 இலட்சம் செலவில் 3990 விவசாயிகளுக்கு மான்யத் தொகை, கறவை மாடுகள் வாங்க ஆட்டுப் பண்ணை பிரிவுகள் அமைக்க, சிறிய கோழிப்பண்ணைகள் அமைக்க அளிக்கப்பட்டது. 2040 விவசாயிகளுக்கு நவீன முறை கால்நடைப் பராமரிப்பில் பயிற்சி அளிக்கப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டில் தர்மபுரி மாவட்டத்திற்கு 29.76 இலட்சமும் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 29.32 இலட்சமும் செலவிட ஆணை வழங்கப்பட்டுள்ளது.

ஈச்சங்கோட்டையில் முதன் முறையாக உயர் அயலின கால்நடை பண்ணையொன்று ஏற்படுத்தப்பட்டு, 150 ஜெர்சிகிடாரிகளும், 2 காளைகளும் ஆஸ்திரேலியாவிலிருந்து வரவழைக்கப்பட்டு ஈச்சங்கோட்டையில் பராமரிக்கப்படுகின்றன. இதற்காக இதுவரை செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 30.50 இலட்சம் ஆகும்.

இராணிப்பேட்டை தடுப்பூசி மருந்துகள் தயாரிக்கும் நிலையத்தில், முதன்முறையாக கீழ்க்கண்ட புதிய தடுப்பு மருந்துகளை உற்பத்திசெய்து வெளியிட்டு இருப்பது மிகப்பெரிய சாதனைகளில் ஒன்றாகும். 1. வெறிநோய் ஒற்றைத் தடுப்பு மருந்து. 2 புதிய ஆட்டம்மை தடுப்பு மருந்து 3. பி.பி.எல்.ஒ. ஆண்டிஜன்.



**மருத்துவ வசதி**

இரண்டரையாண்டு காலத்தில் கீழ்க்கண்ட புதிய மருத்துவ நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. (அ) கால்நடை மருந்தகங்கள் திறக்கப்பட்டவை 30 (ஆ) மருத்துவ மனையாக உயர்த்தப்பட்டவை, 15, (இ) பிரதம மருத்துவ மனையாக உயர்த்தப்பட்டவை, 4.

மிகக் கொடிய நோயான கோமாரியைத் தடுக்கும் பொருட்டு ரூ. 15.83 இலட்சம் செலவில் 2,08,200 கால்நடைகளை பாதுகாக்க மருந்து வாங்கப்பட்டு கோயம்புத்தூர் நீலகிரி மாவட்டங்களில் தடுப்பூசி போடப்படுகின்றன.

கால்நடை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் புதியதாகத் திறக்கப்பட்ட நிலையங்கள் பின்வருமாறு: (அ) கேந்திர கிராம நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டவை,31 (ஆ) தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டவை,1

# நிலவுடைமை மேம்பாட்டுத் திட்டம்

தமிழக அரசு ''நிலவுடைமைப் பதிவுருக்களைச் சீர் செய்து இன்றைய நிலைக்குக் கொண்டு வருதல்'' என்ற பயனுள்ள ஒரு திட்டத்தினை 1-6-1979 முதல் செயல்படுத்தியுள்ளது. இத்திட்டத்தினால்:—

1 விவசாயின் உரிமையையும், நிலத்தின் எல்லைகளையும் நிர்ணயித்து அதை அவருக்கு உடைமையாக்குதல்,

2 நிலச் சீர்திருத்தச் சட்டங்களை செவ்வனே செயல்படுத்த உதவுதல்.

3 பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்கு ஆதாரமாக புள்ளி விவரங்களை அளித்தல்,

4 விவசாய வளர்ச்சிக்கும் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கும் துணை செய்தல்,

5 கூட்டுறவு நிலவள வங்கிகளாலும், அரசினராலும் வழங்கப்படுகிற கடன்களைப் பெற வாய்ப்பளிப்பதுடன் அவற்றை உரிய வர்களிடமிருந்து திரும்பப் பெறவும் வழிவகை செய்தல்,

6 கிராமப்புற பகுதிகளில் சீரான நில வருவாய்ப் பணிகளை அமுல் செய்யவும் நிலத்தாவாக்களை எளிதில், விரைவில் முடிப்பதற்கும் வழிசெய்தல்.

7 நிலவரி, விவசாய வருமான வரி போன்ற வரிகளை, உரியவர்கள் திட்டவட்டமாக அறிந்து செலுத்த வழி செய்தல்.

போன்ற அனுகூலங்கள் ஏற்படுகின்றன.

இத்திட்டம் சமீபத்தில் நில அளவை செய்து முடிக்கப்பட்ட இடங்கள், சென்னை, கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக மற்ற பன்னிரண்டு மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும். இம் மாவட்டங்களில் கூட, சமீபத்தில் மறு நில அளவை செய்து முடிக்கப்பட்ட வட்டங்களும் தீவிர உட்பிரிவு திட்டத்தின் கீழ் செய்து முடிக்கப்பட்ட நிலப்பரப்பும், சேலம் மற்றும் தென்னார்க்காடுமாவட்டங்களில் தற்போது அளந்து முடிக்கப்பட்ட கல்ராயன்மலைப் பகுதிகளும் அடங்கா. எனவே, இப்பன்னிரண்டு மாவட்டங்களிலும் சுமார் 30,000 சதுர மைல் அளவில் இத்திட்டம் அய்ந்தாண்டுகளில் செயல் படுத்தப்படும். முதலாவதாக பன்னிரண்டு மாவட்டங்களிலும், இருபத்தியெட்டு அலகுகள் அதாவது யூனிட்டுகள் பணிபுரியும். இத்திட்டத்தால் அரசுக்கு கூடுதலாக ரூ. 1.48 கோடி அய்ந்தாண்டு காலத்தில் செலவாகும். இத்திட்டம் 1.6.1979 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



# பெருகிடும் மீன்வளம்

தரமான மீன் குஞ்சு உற்பத்தியைப் பெருக்குவதற்காக 1977ல் 12 தூண்டுதல் முறை மீன் குஞ்சுகள் உற்பத்தி நிலையங்கள் இருந்தன. 1979ல் புதிதாக 2 நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 3 இடங்களில் இந்நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. கண்ணாடி ஜாடிகளில் (Glass Jar hatchery) குஞ்சு பொரிக்க வைப்பதற்கான நிலையமொன்று பவானிசாகரில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

**மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை**

தனியார்களும் மீனவர்களும் உள்நாட்டு மீன் வளர்ப்பிலும் நவீன மீன் வளர்ப்புத் தொழில் நுட்ப முறைகளிலும் ஆர்வம் கொள்ள வேண்டி 1976ல் தஞ்சாவூர் மாவட்டத்திலும், 1978ல் திருச்சிராப்பள்ளி, மதுரை, தர்மபுரி மாவட்டங்களிலும் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மாதிரி முகமைகள் மற்றைய மாவட்டங்களிலும் அமைக்கப்படவிருக்கின்றன.

மலைப்பகுதி வளர்ச்சித் திட்டத்தின்கீழ், உதக மண்டலத்திலுள்ள வில்சன் மீன் பண்ணையில் உள்ள பண்ணைகள் சுமார் 3 இலட்சம் செலவில் விரிவாக்கப்பட்டதுடன் தூண்டுதல் முறை மீன் குஞ்சு உற்பத்தி நிலையம் பரிசோதனைச் சாலை மற்றும் பண்டக சாலை முதலியன கட்டி முடிக்கப்பட்டன. மேலும் ரூ. 1.78 இலட்சம் செலவில் மீன் காட்சிச் சாலை ஒன்றும் கட்டப்பட்டு வருகிறது.

**இறால் வளர்ப்பு**

சென்னை அடையாறு மீன் துறை உவர் நீர்ப்பண்ணையில் ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொண்டதன் பலனாக, இறால் மீன் வளர்ப்பில் அதிக ஆதாயம் இருப்பது தெரிய வந்தது. செங்கல்பட்டு, தென்னார்க்காடு, தஞ்சாவூர், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள தனியார் பலர் இறால் மீன் வளர்ப்பில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இத்தகைய ஆர்வம் கொண்டவர் 80 பேர்களுக்கு இறால் வளர்ப்பு குறித்த தொழில் நுட்பப் பயிற்சி அளிக்கப்பட்டது. உவர் நீர் பரப்பில் எல்லாம் இறால் வளர்ப்பை மீனவர் கூட்டுறவுகள் மூலம் மேற்கொள்ள அரசுஆணை பிறப்பித்துள்ளது. இறால் வளர்ப்புப்பற்றி 600 மீனவர் உள்ளிட்ட கிராமப்புற இளைஞர்களுக்கு ரூ. 75 உதவித் தொகையுடன் ஒரு மாதக் காலத் தொழில் நுட்பப் பயிற்சி அளிக்கும் திட்டம் செயல்படத்துவங்கியுள்ளது.

**மீனவர்களுக்கு உதவி**

முன்பு மீன் பிடிக்கும்போது இறந்துவிடும் மீனவரின் குடும்பத்திற்கு ரூ. 1000 கருணை மானியம் வழங்கிவந்தது. 15.7.77க்குப் பிறகு மீன்பிடிக்கும்போது இறக்க நேரிட்ட மீனவரை நம்பி இருந்த குடும்பங்களுக்கு ரூ. 5000 கருணை மானியம் வழங்கப்படுகிறது. இதுவன்றி மற்றும் ரூ. 5000 வரை இறந்துபோன மீனவர் குழந்தைகள் உயர் தொழில் கல்வி பயிலவும் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

**வீட்டு வசதி**

எல்லா மீனவர் குடும்பங்களுக்கும் இலவசமாக வீட்டுவசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க 1975ம் ஆண்டில் ஒரு திட்டம் துவங்கப்பட்டது. இத்திட்டத்தின்படி 1975-76 வரை 182 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. பிறகு இந்நாள் வரை 3619 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஆண்டொன்றுக்கு ஒரு கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. இது தவிர புயல் பாதுகாப்பு இல்லங்களும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

**மீன் விற்பனைத் திட்டம்**

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மீன் விற்பனையையும் 17.12.1978 முதற்கொண்டு நடத்திக் கொண்டு வருகிறது. இதன் நோக்கம் 'மக்களுக்குக் குறைந்த விலையில் சுகாதார முறையில் புரதச் சத்து நிறைந்த மீன்களை வழங்குவதாகும்.


சென்னையில் 7 இடங்களில் மீன் விற்பனைக் கூடங்கள் இயங்கி வருகின்றன. சென்னையில் நடமாடும் ஊர்தி மூலமாகவும் மீன்விற்பனை நடத்தப்பட்டு வருகின்றது. 1978-79ஆம் ஆண்டில் கழகம் சென்னை நகரத்தில் மட்டும் 101 டன் மீன்களை ரூ. 6.36 இலட்சத்திற்கு விற்பனை செய்துள்ளது.

சென்னையைத் தவிர கோவையில் 3 இடங்களிலும் உடுமலைப் பேட்டையிலும், திருநெல்வேலி பேட்டையில் ஓர் அங்காடியும், மதுரை பேச்சியம்மன் படித்துறையில் ஓர் அங்காடியும் இயங்கி வருகின்றன. மேலும்14 மீன்விற்பனைக் கூடங்களை விரைவில் மதுரை, கோவை, திருநெல்வேலி, சென்னை, செங்கல்பட்டு, திருச்சி முதலிய இடங்களில் திறக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**ஆழ் கடல் மீன்பிடிப்புத் திட்டம்**

ஆழ்கடலிலும் மற்றும் தூரக் கடலிலும் உள்ள மீன் வளத்தினை வெளிக் கொணர்வதன் பொருட்டு தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் சுமார் 80 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள இரண்டு 23 மீட்டர் நீளம் கொண்ட ஆழ் கடல் மீன்பிடி நாவாய்களை மெக்ஸிகோ நாட்டிலிருந்து 1978ஆம் ஆண்டு இறக்குமதி செய்தது. தஞ்சை, நெல்லை எனும் பெயர் கொண்ட இவ்விரு நாவாய்களும் 7.3.1978 அன்று சென்னை வந்தடைந்தன.

நாவாய் 'தஞ்சை' 26.5.'78 முதல் மீன்பிடிப்பினை ஆரம்பித்து 26 கடற் பயணங்களையும் 'நெல்லை' 14.4.'78 முதல் மீன்பிடிப்பினை ஆரம்பித்து 30 கடற் பயணங்களையும் 17.10.'79 முடிய மேற்கொண்டுள்ளன. இவ்விரு நாவாய்களின் 56 கடற் பயணங்களின் மூலம் 55 டன்கள் இறாலும் 89 டன் இதர மீன்களும் பிடிக்கப்பட்டு ரூ. 32,85,491.90 வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.



# பாசனத் துறையின் பெருமைமிகு பணிகள்

**1978**-79ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட பாசனத்திட்டங்களினால் சுமார் 2,700 எக்டேர் (6,600 ஏக்கர்) புதிய நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும். நடப்பு (1979-80 )நிதி ஆண்டில் சுமார் 5,000 எக்டேர் (12,400 ஏக்கர்) புதிய நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தில் 6 நீர்த்தேக்கங்கள், ஒரு அணை, 7 கால்வாய்கள் தொடர்புச் சுரங்கங்கள் முதலியன கட்டி முடிக்கப்பட்டுப் பாசனவசதி அளிக்கப்பட்டு வருகிறது. கீழ் நீராறு நீர்த்தேக்கம், குடைவரை வேலைகள் நடைபெற்று வருகின்றன. இவை நடப்பு ஆண்டில் முடிக்கப்பட்டு மேலும், 6,520 எக்டேர்(16,000 ஏக்கர்) நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்க வகை செய்யப்படும். இத்திட்டத்தின்கீழ் பாசன வசதி பெற திட்டமிட்ட பரப்பு இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ஏக்கர் ஆயினும், மற்றும் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பு பாசன நீர் வசதியின்றி உள்ளன. வறட்சியான பகுதிகளிலும், இத்திட்டத்தின் பயன் விரிவாக்கப்பட வேண்டும் என்று கருதி இந்த அரசு இத்திட்டத்தை மேலும் 1.15 இலட்சம் ஏக்கர் நிலங்களுக்கு இரண்டு ஆண்டிற்கு ஒரு முறையாவது பாசன வசதி அளிக்கும் வகையில் விரிவாக்க, அங்கீகரித்துள்ளது.

**பெரியாறு — வைகை பாசனத்தை நவீனப்படுத்தும் திட்டம்:**

பெரியாறு - வைகை பாசனத்தை நவீனப்படுத்தும் வகையிலும், நிலநீர் உறிஞ்சி வீணாகும் அளவைக் கட்டுப்படுத்தும் வகையிலும் ஒரு புதுமையான திட்டத்தை உலக வங்கியின் உதவியுடன் நிறைவேற்ற அரசு திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 41.04 கோடியாகும். இதனால் 15,950 எக்டேர் (39,420 ஏக்கர்) புதிய நிலங்கள் பாசன வசதி பெறும். இத்திட்டத்தை நடப்பு ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சாத்தனூர் நீர்த்தேக்கத்தின் கீழ் உள்ள அணைக்கட்டிலிருந்து முன்பு பாசன வசதி அளிக்கப்படாத வலது பக்கத்தில் ஒரு கால்வாய் வெட்டப்பட்டு வருகிறது.

இக்கால்வாய்த் திட்டத்தைப் புன்செய் பாசனத்திற்குப் பயன்படுத்தினால் சுமார் 6,554 எக்டேர் (16,443 ஏக்கர்) நிலங்கள் பயனடையும் என்ற முறையில் மாற்றப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நமக்குக் கிடைக்கும் நீரைக் கூடியவரை அதிக விவசாயிகள் பயன் பெறும் வகையில் புன்செய் பயிர்களுக்காவது பாசன வசதி அளிக்கப்பட வேண்டுமென்ற கருத்தினைக் கொண்டே இந்த அரசு இம்மாற்றத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

தர்மபுரி மாவட்டத்தில் பெண்ணையாற்றின் குறுக்கே கேலவரப்பள்ளி கிராமத்திற்கு அருகில் சுமார் 607 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் ஓர் அணை கட்டப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு 1977-ஆம் ஆண்டில் இந்த அரசு ஒப்புதல் அளித்தது. இதனால் 3,237 எக்டேர் (8000 ஏக்கர்) பரப்புள்ள புதிய புன்செய் நிலங்கள் பாசனவசதி பெறும். 386 மில்லியன் கனஅடி கொள்ளளவுள்ள நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு இரண்டு கால்வாய்களும் வெட்டப்படும்.

வறட்சிப் பகுதி நிவாரணத் திட்டத்தின் கீழ், வறட்சியான பகுதியான தர்மபுரி மாவட்டத்தில் ஊத்தங்கரை தாலுக்கா, மரம்பட்டி கிராமத்திற்கு அருகில் பாம்பாற்றின் குறுக்கே 248 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் ஓர் நீர்த்தேக்கம் கட்டப்பட்டு வருகிறது. இதனால் 1,620 எக்டேர் (4,000 ஏக்கர்) பரப்புள்ள புதிய புன்செய் நிலங்கள் பாசன வசதி பெறும்.

மேலும், முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்திலிருந்தே சிறப்புச் சிறுபாசன வேலைகளும் நடந்து வருகின்றன.

கடந்த 1977-78 மற்றும் 1978-79 ஆகிய 2 ஆண்டுகளில் 8,533 எக்டேர் (21,087 ஏக்கர்) புதிய நிலங்களுக்குப் பயனளிக்கும் வகையில் 216 வேலைகள் முடிக்கப்பட்டன. 1978-79ஆம் ஆண்டு முடிய மொத்தம் 17,911 வேலைகள் முடிக்கப்பட்டு 2.13 இலட்சம் எக்டேர் (5.26 இலட்சம் ஏக்கர்) புதிய நிலயங்களுக்குப் பாசனவசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் சிறப்புச் சிறுபாசன வேலைகளுக்காக 250 இலட்சம் ரூபாய் இந்த அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

தூர் ஏறிவிட்டதன் காரணமாக பாசன ஏரிகள் கொள்ளளவை இழக்கின்றன. துவக்கத்திலிருந்து 1978-79ஆம் ஆண்டு முடிய மொத்தம் 263 ஏரிகளிலும் கடந்த இரண்டு ஆண்டுகளில் 13 ஏரிகளிலும் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இவ்வேலைக்காக நடப்பு ஆண்டில் இவ்வரசு 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது.

தமிழ்நாட்டில் 37,000க்கும் மேற்பட்ட ஏரிகளின் மூலம் சுமார் 9.3 இலட்சம் எக்டேர் (22.98 இலட்சம் ஏக்கர்) நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இவற்றுள், 40 எக்டேருக்கு (100 ஏக்கர்) அதிகமாக பாசன வசதியளிப்பவை மட்டுமே தற்போது பொதுப்பணித்துறையின் பராமரிப்பில் உள்ளது.

1978-79ஆம் ஆண்டு முடிய 3,734 இத்தகைய வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. கடந்த 1977-78 மற்றும் 1978-79ஆகிய இரண்டு ஆண்டுகளில் மட்டும் 1,043 வேலைகள் முடிக்கப்பட்டன. நடப்பு ஆண்டில் இவ்வேலைகளுக்காக மொத்தம் 135 இலட்சம் ரூபாய் அரசு ஒதுக்கியுள்ளது.

மேலும், 200 எக்டேரும் (500 ஏக்கர்) அதற்கு அதிகமாகவும் ஆயக்கட்டு கொண்ட சுமார் 500 ஏரிகளை நவீனப்படுத்தவும், அவற்றின் நீரைச் சிக்கனமுறையில் பயன்படுத்தவும் ஒரு பெரிய திட்டம் 192.68 கோடி ரூபாய்க்குத் தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

இருக்கும் நீர்வளத்தைக் கொண்டு நல்லமுறையில் பாசன வசதிகளை இயன்ற அளவு விரிவுபடுத்த இந்த அரசு ஆவன செய்கிறது. இனியும் தொடர்ந்து செய்யும்.

# வேளாண்மை உற்பத்தியில் வியத்தகு பணிகள்



இதுவரை எந்த அரசும்-குறிப்பாக எந்த மாநில அரசும் முன் வந்து வேளாண் மக்களின் நீண்ட காலப் பிரச்னைகளை ஆய்ந்து அறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ளவில்லை. இந்த அரசு அமைத்த உயர்மட்டக் குழுவின் சிபாரிசுகளின் முன் பரிசீலனையில் உடனடியாக விவசாயிகளுக்கு 40 கோடி ரூபாய் அளவு சலுகைகள் அளித்துள்ளது.

## மிகக் குறைவான மின்சாரக் கட்டணம்

முன்பு யூனிட்டிற்கு 16 காசாக இருந்ததை 14 காசாகக் குறைத்திட்ட அரசு, சிறு உழவர்களுக்கு யூனிட்டிற்கு 12 காசாகவும், இதர உழவர்களுக்கு 14 காசு என்றும் மாற்றி அமைத்தது. இதனால் ஆண்டிற்கு 6 கோடி ரூபாய் அளவு அரசுக்கு இழப்பு ஏற்பட்டாலும், இந்தச் சலுகை 1.6.1978 முதல் செயலாக்கப்படுகிறது.

மீட்டர் கட்டணம் ரூ5லிருந்து ரூ.4ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் அளவு இழப்பு ஏற்படுகிறது.

## புயலும் நிவாரணமும்

கடந்த இரண்டு ஆண்டுகளிலும் தமிழ்நாட்டு விவசாயிகள் புயலினாலும், வெள்ளத்தினாலும் பெரிதும் பாதிக்கப்பட்டனர். எனினும் பாதிக்கப்பட்ட பயிர்களுக்குஉடன் எடுக்கப்பட்ட மீட்பு நடவடிக்கைகளால் அப்பயிர்களுக்கு ஏற்பட்ட கடுமையான சேதமும், உற்பத்தியில் ஏற்படவிருந்த பெருமளவு இழப்பும் தவிர்க்கப்பட்டன. கீழ்க் கண்ட நிவாரண நடவடிக்கைகளை அரசு உடனடியாகச் செயல்படுத்தியது;

### (அ) இலவச விதை விநியோகம்

தாளடி, சம்பா பயிர் செய்வதற்காகத் தரமான நெல்விதைகள் சிறு உழவர்களுக்கும், குத்தகைச் சாகுபடியாளர்களுக்கும் 30 இலட்சம் ரூபாய் அளவிற்கு இலவசமாக வழங்கப்பட்டது.

### (ஆ) சிறு விவசாயிகளுக்கு மானியம்

கரும்பு பயிரிட்டிருந்த சிறு உழவர்கள் மற்றும் குத்தகைச் சாகுபடியாளர்களுக்கு ரூ.87,300 மானியமாக வழங்கப்பட்டது.

வாழை சாகுபடியாளர்களில் சிறு உழவர்களுக்கும் மற்றும் குத்தகைச் சாகுபடியாளர்களுக்கும் ரூ. 5,42,600 மானியமாக வழங்கப்பட்டது.

வெற்றிலை பயிரிட்டிருந்த சிறு உழவர்கள் மற்றும் குத்தகைச் சாகுபடியாளர்களுக்கும் ரூ. 10,27,000 மானியமாக வழங்கப்பட்டது.

எல்லா பயிர்களுக்கும், எல்லா விவசாயிகளுக்கும் ரூ. 80 இலட்சம் அளவிற்குப் பூச்சி மருந்துகள் 25 சதவிகித மானிய விலையில் வழங்கப்பட்டது.

98,200 தென்னங்கன்றுகள் இலவசமாக சிறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

மண்மேடிட்டுப் போன நிலங்களில் 7,064 எக்டேரில் சிறு உழவர்கள் மற்றும் குத்தகைச் சாகுபடியாளர்களுக்கு இலவசமாகவும், ஏனைய உழவர்களுக்கு 50 சதவிகித மானிய செலவிலும் நிலச் சீர்திருத்தம் செய்யப்பட்டது.

தாளடி, சம்பா பயிர் செய்வதற்காகச் சிறு விவசாயிகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் ரூ. 2,11,770 பெறுமான தரமான நெல் விதைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட வாழை மற்றும் கரும்பு பயிர்களைப் புதுப்பிக்க சிறு விவசாயிகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் ரூ. 79,400 உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட வெற்றிலைக் கொடிக்கால்களைப் புதுப்பிக்க சிறுவிவசாயிகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் ரூ. 3,51,370 உதவித் தொகை அளிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்குப் பதிலாக சிறு விவசாயிகளுக்கு இலவசமாக 4,017 தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்பட்டன.

நீலகிரியில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 25 சதவிகித மானிய விலையில் ஏக்கருக்கு ரூ. 250 வீதம் ஒரு நபருக்கு ரூ. 1000 வரை உருளைக் கிழங்கு விதைகள் வழங்கப்பட்டன. இந்த வகையில் ரூ.38,600 மானியமாக வழங்கப்பட்டது.

இலவசமாக ரூ. 54,000 பெறுமான காய்கறி விதைகள் வழங்கப்பட்டன.

மண்மேடிட்ட நிலங்களையும் கிணறுகளையும் சிறுவிவசாயிகளுக்கும் குத்தகைதாரர்களுக்கும் இலவசமாகவும், மற்ற விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியத்திலும் ரூபாய் ஆயிரம் உச்ச வரம்பிற்கு உட்பட்டு வேளாண்மைத் துறை மூலம் சீர்திருத்தம் செய்து கொடுக்கப்பட்டது. இந்த வகையில் 35.53 இலட்சம்ரூபாய் மானியமாக வழங்கப்பட்டது.

## வரிவிலக்கு

புயல், மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிலங்களுக்கு நில வரி, நிலத்தீர்வை, இதர நில வரிகள், இதர நீர்வரிகள், வர்த்தகப் பயிர்கள் வரி ஆகியவற்றிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

## கரும்புக்கு அதிக விலை

மத்திய அரசு கரும்பின் விலையை டன்னுக்கு ரூ. 85ஆக நிர்ணயித்திருந்தாலும், கூட்டுறவு மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகள் மூலம் டன்னுக்கு ரூ. 100 முதல் ரூ. 125 வரை விவசாயிகளுக்கு விலை கிடைக்க அரசு ஏற்பாடு செய்துள்ளது.

## உற்பத்தியில் உபரி

இவ்விரு ஆண்டுகளில் விளை பொருட்களின் உற்பத்தியில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1977இல் 62 இலட்சம் டன் அரிசியும், 19 இலட்சம் டன் சிறுதானியங்களும், 3 இலட்

சம் டன் பயறு வகைகளும், 14 இலட்சம் டன் வெல்லமும், 4.04 இலட்சம் பேல் பருத்தியும் 12,29 இலட்சம் டன் எண்ணெய் வித்துக்களும் உற்பத்தி செய்யப் பட்டுள்ளன.

1978-ஆம் ஆண்டு 64 இலட்சம் டன் அரிசியும், 20 இலட்சம் டன் சிறுதானியங்களும், 3.25 இலட்சம் டன்கள் பயறுவகைகளும், 14.07 இலட்சம் டன்கள் எண்ணெய் வித்துக்களும்,19.05 இலட்சம் டன்கள் வெல்லமும், 4.96 இலட்சம் பேல்கள் பருத்தியும் உற்பத்தி செய்யப்பட்டுள் ளன.

தமிழ்நாட்டில் 1976-77இல் ஏக்கருக்குச் சராசரி நெல் உற்பத்தி 1277 கிலோ என்று இருந்தது. 1978-79ஆம் ஆண்டு 1350 கிலோ என்ற அளவிற்கு உயர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

**வேளாண்மைத்துறையும், நீர்ப் பாசனத்துறையும்**

வேளாண்மைத் துறையும், நீர்ப்பாசனத்துறையும் வேளாண் மைத் துறை அமைச்சரின் கீழ் செயல்பட்டு வருவதால் தமிழ் நாட்டு விவசாயிகளுக்குக் காலத்தில் தட்டுப்பாடின்றி ஒழுங்காகப் பாசனத்திற்காகத் தண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது.

**பயறுவகைகள் விதை உற்பத்தி**

பயறு வகைகளின் விதைகள் உற்பத்தியை அதிகப்படுத்த ஐந்து விதை உற்பத்தி நிலையங்கள் வட ஆர்க்காடு, திருநெல்வேலி, மதுரை, புதுக்கோட்டை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் துவக்கப்பட்டுள்ளன. மத்திய அரசின் உதவியுடன் கோவையில் மேலும் ஒரு விதை உற்பத்தி நிலையம் துவங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

**தென்னங்கன்றுகள் விநியோகம்:**

ஆண்டுக்கு 12 இலட்சம் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்து விநியோகித்து வந்ததை அதிகப்படுத்தி, 1978-79ஆம் ஆண்டில் 14,20,000 தென்னங்கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது ஒரு சிறந்த சாதனையாகும்.

தேங்காய் உற்பத்தியை அதிகரிக்க கோயம்புத்தூர், கன்னியாகுமரி, இராமநாதபுரம் மாவட்டங்களில் தென்னை தீவிரவளர்ச்சிச் சாகுபடி திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குட்டை நெட்டை ஒட்டுத் தென்னங்கன்றுகள் தஞ்சை மாவட்டத்திலுள்ள பட்டுக்கோட்டையில் ஆண்டுக்கு ஒரு இலட்சம் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**இரசாயன உர விநியோகம்:**

1976-77ஆம் ஆண்டு 2 இலட்சம் டன் தழைச் சத்தும், 0.45 இலட்சம் டன் மணிச்சத்தும், 0.57 இலட்சம் டன் சாம்பல் சத்தும் தரவல்ல இரசாயன உரங்கள்தான் விநியோகம் செய்யப்பட்டன.

1978-79ஆம் ஆண்டு 2.90 இலட்சம் டன்கள் தழைச்சத்தும் 0.94 இலட்சம் டன்கள் மணிச்சத்தும், 1.07 இலட்சம் டன்கள் சாம்பல் சத்தும் தரவல்ல இரசாயன உரங்கள் விநியோகம் செய்திருப்பது குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

**பயிர்ப்பாதுகாப்பு**

நெற்பயிரைத் தாக்குகின்ற புகையான், தண்டு துளைப்பான் மற்றும் நிலக்கடலையில் தோன்றும் சிகப்புக் கம்பளிப் புழுவை ஒழிக்க ஒட்டுமொத்த மருந்து தெளிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வகையில் 1977-78இல் நெற்பயிரில் 34,000 எக்டேர் பரப்பிலும், மணிலாவில் 53,000 எக்டேர் பரப்பிலும் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 3 மானியம் அளிக்கப்பட்டு இப்பணி மேற்கொள்ளப்பட்டது.

**தோட்டக் கலை வளர்ச்சி**

தோட்டக் கலை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி பழங்கள் மற்றும் காய்கறி உற்பத்தியை அதிகப்படுத்த தோட்டக்கலை இயக்ககம் ஒன்று தனியே அமைக்க அரசு அனுமதித்துள்ளது.

பழ உற்பத்தியை அதிகரிக்கவும், மாதிரி பழப் பண்ணையாக விளங்கவும், புதுக்கோட்டையில் 1000 ஏக்கர் அளவில் ஒரு மாபெரும் பழப் பண்ணை துவக்கப்பட்டுள்ளது.

**விதைச் சான்றிதழ் திட்டம்**

1978-79ஆம் ஆண்டில்4,692 எக்டேரில் நெல்லும், 1.600 எக்டேரில் வீரிய ஒட்டு சிறுதானிய ரகங்களும், 390 எக்டேரில் வீரிய ஒட்டுப் பருத்தி ரகங்களும் சான்றிதழ் விதைத் திட்டத்தின் கீழ் சான்றிதழ் வழங்கப்பட்டன. இதன் மூலம் விவசாயிகளுக்குத் தரமான விதைகள் கிடைக்க வாய்ப்புள்ளது. மேலும், இந்த அரசு விதைச் சான்றிதழ் திட்டத்தை ஒரு தனி இயக்கமாகச் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

தமிழ்நாட்டிலிருந்து சான்றிதழ் பெற்ற விதைகளை வெளிமாநிலங்களிலுள்ள விவசாயிகள் விரும்பி வாங்குகிறார்கள். இதன் மூலம் தமிழ்நாட்டில் விதை உற்பத்தியை அதிகப்படுத்தவும், விவசாயிகளுக்கு அதிக வேலை வாய்ப்புகள் பெருகவும் வழி வகுக்கப்பட்டுள்ளது.

**வேளாண்மைப் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு**

சென்ற ஆண்டு வரைவேளாண்மைப் பட்டம் பெற்றவர் அனைவருக்கும் தமிழ்நாடு அரசுவேலை வாய்ப்பு நல்கியுள்ளது. வேளாண்மைப் பட்டதாரிகளில் வேலை இல்லாதவர் இன்று இல்லை என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த ஆண்டு முதல் கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பு பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 220-லிருந்து 250 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண்மைக் கல்லூரிகளில் நிலமுள்ள விவசாயிகளின் பிள்ளைகளுக்காக இது வரை ஒதுக்கப்பட்ட 12 இடங்களுக்குப் பதிலாக இந்த ஆண்டு 20 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.



**பெரிய விளக்கப் பண்ணைகள்**

மானாவாரி விவசாய மக்களின் வருமானத்தைப் பெருக்க மண்வளப் பாதுகாப்பு, மற்றும் நீர் பராமரிப்பு முறைகள் 400 எக்டேர் ஒருங்கிணைந்த தலைகளில் புதிய முறையில் முதல் முறையாகச் செயல்படத் தொடங்கியுள்ளது. இந்த விளக்கப் பண்ணைகள் 100க்கும் மேற்பட்ட இடங்களில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# விவசாயிகள்-தொழிலாளர் போராட்டங்களும் அரசின் அணுகுமுறையும்!



இந்த அரசு ஆட்சிக்கு வந்தவுடன் - விவசாயிகளுக்குப் பல சலுகைகள் அளித்தும், விவசாய சங்கத்தினர் தங்களது கோரிக்கைகளுக்காக ஏப்ரல் '78ல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின்போது சாலைகளில் போக்குவரத்திற்கு இடையூறாகத் தடைகளை வைத்தும் சிறு சிறு பாலங்களைத் தகர்த்தும், வெடிகளைப் பயன்படுத்தியும் வன்முறையில் ஈடுபட்டனர். பேருந்துகள் எரிக்கப்பட்டன. சமூக விரோதிகள் இந்தப் போராட்டங்களைப் பயன்படுத்திக்கொண்டு அமைதிக்கு ஊறு விளைவிக்க முயற்சித்தனர். இதனால் உண்டான நட்டங்கள் ஏராளமாகும். மீண்டும் ஜூன் '78ல் அரசு அலுவலகங்கள் முன்பாகப் போராட்டங்கள் நடத்தினர். நகர்ப்புறங்களுக்குக் காய்கறிகள் முதலிய பொருட்கள் கிடைக்கா வண்ணம் தடைசெய்தனர்.

மீண்டும் அவர்கள் 23.4.'79 அன்று போராட்டத்தில் ஈடுபட்டனர். இப்போராட்டத்தின் போது திருநெல்வேலி மாவட்டத்தில் மெசியாபுரம் என்ற இடத்தில் ஒரு காவல்துறை துணை ஆய்வாளர் படுகொலை செய்யப்பட்டார். அரசு அதிகாரிகளைத் தாக்கவும்அரசு வாகனங்களுக்குச் சேதம் ஏற்படுத்தவும் விவசாயிகள் தூண்டிவிடப்பட்டனர்.

மேற்கண்ட போராட்டங்களின்போது நாட்டில் சட்டம் ஒழுங்கைக் காக்க அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டது.

போராட்டத்தின்போது விவசாயிகள் மீது சாதாரண குற்றங்களுக்காகப் போடப்பட்ட வழக்குகளைத் திரும்பப்பெற அரசு ஏப்ரல் '78 மற்றும் ஆகஸ்டு'78ல் ஆணையிட்டுள்ளது.

## தொழில் — தொழிலாளர்

தமிழ்நாடு, தொழில் அமைதியை நோக்கிப் பீடு நடைபோடுகிறது.

தொழிலாளர்களுக்குப் பயனளிக்கின்ற சட்டங்கள் அனைத்தையும் கண்டிப்பாகச் செயல்படுத்துவதும், தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் இடையே ஏற்படும் மோதல்களைக் குறைப்பதற்காகத் தொழிலாளர்களின் நிலையைப் பாதுகாக்க சட்டத்தில் வகை செய்வதுமே இவ்வரசின் கொள்கையாகும்.

இதனையே நோக்கமாகக் கொண்டு, தற்போதைய தொழிலாளர் சட்டங்களில் செய்ய வேண்டிய திருத்தங்கள் பற்றி யோசனை தெரிவிப்பதற்காக அரசு, தொழிற்சாலை நிர்வாகம், தொழிற் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் சட்டமன்ற உறுப்பினர்களும் அடங்கிய உயர் அதிகாரக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. அத்தியாவசியத் தொழில்களில் வேலை நிறுத்தங்கள் நடைபெற்றால், அதுபற்றிக் கலந்தாலோசிப்பதற்காகப் பிரபலமான ஏழு தொழிற்சங்கத் தலைவர்கள் அடங்கிய நிலைக் குழு ஒன்றையும் அரசு அமைத்துள்ளது.

போக்குவரத்துத் தொழிலாளர்கள், டி.வி.எஸ்., லட்சுமி மிஷின் ஒர்க்ஸ், சிம்கோ மீட்டர் ஆகிய தொழிலாளர் போராட்டங்களில், அரசு தலையிட்டு அவர்களது போராட்டங்களைச் சுமுகமாகத் தீர்த்து, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கும் வேண்டிய அனைத்து முயற்சிகளையும் அரசு எடுத்துக்கொண்டது.

பெரியார் நூற்றாண்டு விழாவினைச் சிறப்பிக்கும் வகையில் தொழிலாளர்கள் மீதுள்ள சாதாரண வழக்குகளைத் திரும்பப் பெற அரசு ஆணையிட்டது. இவையனைத்தும் தொழில் வளர்ச்சியிலும் தொழிலாளர் நலனிலும் அரசு கொண்டுள்ள அக்கறைக்குச் சான்றுகளாகும்.

## மழையினால் பாதிக்கப்பட்ட சிறு விவசாயிகளுக்கு மானிய உதவி



நவம்பரில் பெய்த கடுமையான மழையாலும், வெள்ளத்தாலும் நெற்பயிர்கள் நாசமடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட சிறு விவசாயிகளுக்கு உதவியளிக்க அரசு தீர்மானித்துள்ளது. நெற்பயிர் பாதிப்பினைச் சரி செய்வதற்குத் தேவைப்படும் உரங்களின் செலவில் 25 சதவீதம் மானியமாக வழங்கப்படும். அவ்வாறு வழங்கப்படும் மானியம் ஏக்கர் ஒன்றுக்கு அதிகபட்சம் ரூ. 50/- ஆகும். மேலுரம் இடுவதற்கு ஆகும் செலவில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 25க்கு மேற்படாமல், உரங்களின் செலவில் 25 சதவிகிதமும் மானியமாக அளிக்கப்படும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மழையாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ள பகுதிகளிலுள்ள சிறு விவசாயிகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் நேரடி ஆய்விற்குப் பின் இந்த உதவிகள் அளிக்கப்படும். இந்த உதவிகள் பயிர்களுக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தின் அளவைப் பொறுத்திருக்கும்.

# கோ-ஆப்டெக்ஸ்
# அழகோவியம்!

அழகு மகளிர்
ஆவலோடு வாங்கி அணிவதெல்லாம்
கோ-ஆப்டெக்ஸ் சேலைகளையே!
அதில் உள்ள விந்தையெல்லாம்
அழகும் நயமும் இழைய...
அகம் கவரும் வண்ணங்கள் மிளிர..
கோடுகளும்-புள்ளிகளும் குலவ...
எண்ணற்ற வகைகளை
கோ-ஆப்டெக்ஸ் வழங்குகிறது!



கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

ELEGANT

கட்டடம் கட்டுவதற்கும், நிலம் மேம்படுத்தும் பணிக்கும் 1977-78, 1978-79 மற்றும் 1979-80 (30.9.79 வரை) ஆண்டுகளில் செலவிட்டத் தொகை முறையே ரூ. 1741, ரூ.2116.16 மற்றும் 723 இலட்சங்களாகும். இது கடந்த 1969-70-ஆம் ஆண்டு செலவிடப்பட்டத் தொகையை விட 300 சதவீதம் அதிகமாகும்.

நிலம் கையகப்படுத்தி மேம்படுத்தும் திட்டத்திற்காக வாரியத்தால் 1977-78ஆம் ஆண்டு ரூ. 346.02 இலட்சங்களும், 1978-79ஆம் ஆண்டு ரூ. 462.49 இலட்சங்களும், 1979-80 ஆம் ஆண்டு 30.9.79 வரை 103.00 இலட்சங்களும் செலவிடப்பட்டுள்ளன.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களின்கீழ் 500 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ. 235 இலட்சம் மதிப்பீட்டில் மறைமலை நகர் என்ற இடத்தில் மேம்படுத்தும் திட்டங்களைத் துவங்கியுள்ளது. சாலை போடுதல், மழை நீர் வடிகால் அமைத்தல், சிறுபாலம் அமைத்தல் போன்ற மேம்படுத்தும் வேலைகளை வீட்டு வசதி வாரியம் மேற்கொண்டுள்ளது. இந்நகரில் வாரியம் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்காக 144 குடியிருப்புகள் கட்டி வருகிறது.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் 419 ஏக்கர் நிலப்பரப்பில் திட்டப்பட்டுள்ள மற்றுமொரு மேம்படுத்தும் திட்டம் மணலி என்ற இடத்திலாகும். இவ்விடத்தில் 212 ஏக்கர் நிலப்பரப்பினை மேம்படுத்துவதற்கான திட்ட வேலைகளை வீட்டு வசதி வாரியம் மேற்கொண்டுள்ளது. மேலும், வாரியத்தால் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்காக இந்த இடத்தில் 960 குடியிருப்புகள் கட்டப்பட்டு வீடுகள் முடியும் தருவாயில் உள்ளன.

உலக வங்கி நிதி உதவியுடன் துவக்கப்பட்டுள்ள வேலை மற்றும் மேம்படுத்தும் திட்டம் 1977-78ஆம் ஆண்டுகளில் வீட்டுவசதி வாரியத்தால் எடுக்கப்பட்ட மன நிறைவு தரும் திட்டங்களில் ஒன்றாகும். இத்திட்டத்தின் கீழ் 13,467 மனைகள் அரும்பாக்கம், வில்லிவாக்கம் மற்றும் கொடுங்கையூர் ஆகிய இடங்களில் கிடைக்கும். இவற்றில் 9760 மனைகள் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்காகவும் உள்ளன. அரும்பாக்கத்தில் இத்திட்டம் முடிவடையும் தருவாயில் உள்ளது. வில்லிவாக்கத்திலும், கொடுங்கையூரிலும் இத்திட்டம் துவங்கிச் செயல்பட்டு வருகிறது. மொத்த மதிப்பீடாக ரூ.932.88 இலட்சத் தொகையில் 1977-78 ஆம் ஆண்டு ரூ. 175 இலட்சங்களும், 1978-79ஆம் ஆண்டு ரூ. 206.16 இலட்சங்களும் மற்றும் 1979-80ஆம் ஆண்டு 30.9.79 வரை ரூ. 92.68 இலட்சங்களும் செலவிடப்பட்டுள்ளன.

## குடிசைப்பகுதி மாற்றுத் திட்டம்

பெருகிவரும் குடிசைப் பகுதிகளின் பல பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு மாற்றுத் திட்டத்தின் கீழ் குடிசைமாற்று வாரியத்தால் 1977-78. 1978-79 ஆண்டுகளில் 1013 இலட்சம் செலவில் 11,996 வீடுகள் கட்ட திட்டம் தீட்டப்பட்டு, ரூ. 340 இலட்சம் செலவில் 4416 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தற்போது ரூ. 667.68 இலட்சம் செலவில் 7658 குடியிருப்புகள் கட்டும் வேலை 26 திட்டப்பகுதிகளில் நடைபெற்று வருகிறது. 1979-80ஆம் ஆண்டிற்கு ரூ. 613.705 இலட்சம் செலவில் 4784 குடியிருப்புகள் 15 பகுதிகளில் புதிதாகக் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இக்குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசு நிதி உதவியுடன் அட்கோ (HUDCO) நிறுவனமும், 8776 குடியிருப்புகள் 30 பகுதிகளில் கட்டுவதற்கு ரூ. 674.14 இலட்சம் நிதி உதவியுள்ளது.


## விரைவுபடுத்தப்பட்ட மேம்பாட்டுத் திட்டம்

இந்தத் திட்டம் 1977ஆம் ஆண்டு முதல் தொடங்கி செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் கீழ்க்காணும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன:

1. 10 குடும்பங்களுக்கு ஒரு கழிவுநீர் அறை.
2. 20 குடும்பங்களுக்கு ஒரு குடிநீர்க் குழாய்.
3. குடிநீர்க் குழாய் அமைக்க முடியாத இடத்தில் ஒரு குழாய்க் கிணறு அல்லது ஊர்தி மூலம் குடிநீர்வழங்குதல்.
4. 150லிருந்து 200 குடும்பங்களுக்கு ஒரு மின் விளக்கு

# தமிழகத்தில் வீட்டு வசதி





மதுரை ரேஸ்கோர்ஸ் காலனியில் உருவாகி உள்ள குடியிருப்புகள்.

அல்லது ஒரு ஏககரா பரபபுள்ள குடிசைப் பகுதிக்கு ஒரு மின் விளக்கு.

இத்திட்டத்தின் மூலம் வாரியம் ரூ. 72.43 இலட்சம் செலவில் 125 குடிசைப்பகுதிகளுக்கு 1978-79-ஆம் ஆண்டு வசதி செய்து தந்துள்ளது. மேலும் 30,000 குடும்பங்களுக்கு ரூ.100 இலட்சம் செலவில் 1979-80ஆம் ஆண்டு வசதி செய்து தருவதற்குத் திட்டமிடப்பட்டுத் துரிதமாகச் செயல்பட்டு வருகிறது.

எல்லாக் குடிசைப் பகுதிகளுக்கும் அவர்கள் வாழும் குடிசைப் பகுதி நிலத்தை அவர்களுக்கே சொந்த உரிமை வழங்க பட்டா கொடுக்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**தமிழ்நாட்டில் கூட்டுறவு வீட்டு வசதி:**

கிராமங்களில் இருக்கும் பொருளாதாரத்தில் நலிவுற்றோர் அதிகமாக வீடுகள் கட்ட முன்வரவேண்டும் என்று கிராமக் கூட்டுறவு வீடுகட்டும் திட்டத்தின் கீழ் அரிஜனங்களுக்கு மானியம் வழங்கப்படுகின்றது. அரிஜனமல்லாதவர்கள் அரிஜனங்கள் அதிகமாக வசிக்கும் இடத்தில் ரூ. 3,000க்கு மேற்படாமல் வீடுகட்ட முன்வந்தால் அவர்களுக்கும் மானியம் வழங்கப்படுகிறது. இநத மானியம் கடன் தொகையில் 20 சதவிகிதம் அல்லது ரூ.600 இதில் எது குறைவோ அத்தொகையை மானியமாக வழங்கப்படும். அரிஜனங்களுக்கு வீடுகட்ட வழங்கப்படும் கடன்களுக்கு வட்டியை அரசே செலுத்த இசைந்துள்ளது. இச்சங்கங்களில் கிறிஸ்தவர்களாக மாறிய அரிஜனங்களுக்கும் மேற்படிச் சலுகைகள் வழங்கப்படும்.

அரிஜனமல்லாதவர் பொருளாதாரத்தில் நலிந்தவர்கள் $9\frac{1}{4}$ சதவீதம் வட்டி செலுத்தவேண்டும். குறைந்த வருவாய் உள்ளவர்கள் $10\frac{3}{4}$ சதவிகிதம் வட்டி செலுத்த வேண்டும்.

1979-80-ஆம் ஆண்டிற்குக் கட்டி முடிக்கவேண்டிய வீடுகளின் குறியீட்டை 20,000 லிருந்து 30,000 ஆக அரசு உயர்த்தியுள்ளது. 30.9.79வரை 20,810 கடன்கள் வழங்க ரூ. 850.14 இலட்சத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 1979-80 ஆம் ஆண்டில் 30,000 வீடுகள் கட்டிமுடிக்க வேண்டிய குறியீட்டை அடைய எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

துணி, தானியம் மற்றும் அழுகும் பொருள் தொடர்பான மொத்த வியாபாரிகளை, பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள கோயம்பேடு என்ற இடத்தில் மாற்றுவது முக்கியமான திட்டமாகும்.. இதற்காக 230 ஏககா தனியார் நிலத்தை மேறகொள்ளும்பணி, முடிவு பெறும் தருவாயில் உள்ளது.

கோயம்பேடு அங்காடியுடன் ஒரு பேருந்து மற்றும் சுமை வண்டி முனையையும் அமைக்க சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் திட்டமிட்டுள்ளது.

வடக்கு மற்றும் தென் சென்னையில் அலுவலக மையம் நிறுவுதல், பிராட்வே பழ அங்காடியைப் புதுப்பித்தல் ஆகியனவும் விரைவில் நிறைவேற்றப்பட இருக்கும் திட்டங்களாகும்.

பர்மாவிலிருந்து இடம் பெயர்ந்து வந்தோரும், மற்றோரும், வாழும் வியாசர்பாடியில் சில மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புனர் வாழ்வுப்பணி மற்றும் ஐ.டி.ஏ. உதவியின் கீழ் செலவினங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தை ஒருங்கிணைந்த நிறைவேற்றும் பொறுப்பை ஓர் ஆட்சிக்குழு கவனித்து வருகின்றது.



நாடு நலம் பெற, 'நன்மை விளைந்திட 1.7.1977 முதல் 15.11.1979 வரை 99 சட்டங்கள் மாநிலச் சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்டுள்ளன.

சமூக நீதி தொடர்பான சட்டமியற்றுவதைப் பொறுத்த மட்டில், கடன் தீர்த்தல் நிறுத்திவைப்புச் சட்டம் குறிப்பிடத்தக்கது. ஏழை மக்களிடமிருந்து கடனை வசூலிப்பதை, இந்தச் சட்டங்கள் ஒத்திப் போட்டிருக்கின்றன. முதலில் கடன் வசூலிப்பது 1978 சனவரி 15 ஆம் தேதி வரை ஒத்திவைக்கப்பட்டது. அதன் பிறகு மேலும் ஓர் ஆறுமாத காலத்திற்கு அந்த நிறுத்திவைப்பு நீட்டிக்கப் பட்டது.

அடகுக் கடைக்காரர்கள் தங்களிடம் அடகு வைக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதைத் தடை செய்வதையும் 1978 சூலை 15ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டது. மேலும் அடகுக் கடைக்காரர்கள் மீட்கப்படாத பொருள்களை விற்பனை செய்வதற்கு விதிக்கப்பட்ட தடையை 15.1.79 வரை நீட்டித்து, அதன் மூலம் அடகு வைத்தவர்களைத் தவணைகளில் தங்கள் கடன்களைத் திரும்பச் செலுத்தித் தங்களது பொருட்களை மீட்க இயலும்படி செய்ய வேண்டும் என்று தமிழக அரசு கருதியதால் 1943 ஆம் ஆண்டு தமிழ்நாடு அடகுக் கடைக்காரர்கள் சட்டம் அதற்குத் தகுந்தவாறு திருத்தப்பட்டது.

1979-ம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டமானது கடன்பட்டவர்கள் சிலருக்கு விரிவானமுறையில் நிவாரணம் அளிக்க வகை செய்கிறது.

குத்தகைத் தொகை பாக்கிக்காக, பயிரிடும் வாடகைதாரர்கள் வெளியேற்றப்படுவதிலிருந்து முதலில் 15.1.1979 வரை பாதுகாப்பளிக்கப்பட்டது. அந்தத் தேதிக்குப் பின்னர் ,குத்தகைத் தொகை பாக்கி வசூலிப்புக்காக ஏராளமான மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்திருக்கும். இதைத் தவிர்ப்பதற்காக, மேற்படி பாதுகாப்பை 15.7.79 வரை நீட்டித்து அரசு மூலம் ஓர் சட்டம் செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து, பயிரிடும் வாடகைதாரர்களுக்கு 1978 சூன் 30ந் தேதி முடிய பசலி ஆண்டுக்கு குத்தகைத் தொகை செலுத்தாமைக்காக, அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதிலிருந்து - அதிலிருந்து அல்லது அவர்கள் அதற்காக வெளியேற்றப்படுவதிலிருந்து புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள அத்தகைய பயிரிடும் வாடகைதாரர்களுக்கு முதலில் அளிக்கப்பட்ட பாதுகாப்பானது தற்போது 15.1.1980 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

1978ஆம் ஆண்டு அரிசன நலத் திட்டங்களுக்காக நிலத்தைக் கையகப் படுத்துதல் சட்டத்தை அரசு நிறைவேற்றியுள்ளது. திரைப்படத் தொழிலில் உள்ளவர்கள் கேளிக்கை வரியை ஒன்று சேர்த்துக் கட்டும் திட்டத்தைக் கொண்டுவருமாறு அரசைக் கேட்டுக் கொண்டு வந்தனர். இதனைச் செயல்பாட்டுக்குக் கொண்டுவந்து அத்தொழிலை ஊக்குவிக்கும் வகையில் 1978ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைவரி மற்றும் உள்ளாட்சி நிதி (திருத்தச்) சட்டம் கொண்டு வரப் பட்டது.

1976 ஆகஸ்டு 3ந் தேதி அமலுக்கு வந்த தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்ச வரம்பும் ஒழுங்குபடுத்துதலும்) சட்டத்தைச் செயல்படுத்தியதில் பொது மக்களுக்குச் சில இன்னல்கள் ஏற்பட்டுள்ளன. என்று தெரியவந்தது. அதை அகற்றும் பொருட்டு அச்சட்டம் நீக்கப்பட்டு கணிசமான மாற்றங்களுடன் தற்போதுள்ள சட்டம் மீண்டும் இயற்றப்பட்டது.

பொறியியல், தொழில் நுட்பவியல் மற்றும் அவற்றையொத்த அறிவியற் கலைகளில் மேற்படிப்பையும் ஆராய்ச்சியையும் வளர்ச்சியுறச் செய்து மேம்பாடுகாணும் நோக்கத்துடனும், மாறி வரும் தேவைகளுக்குகேற்ப கல்விமுறை அமைவதுடன் அவற்றிற்கு ஆதரவாக அது இருக்க வேண்டும் என்பதை உறுதி செய்யவும் தமிழ் நாட்டில் தொழில்நுட்பக் கல்வி வளர்ச்சிக்குத் தேவையான தலைமையை நல்கும் மையமொன்றை வளர்க்க வேண்டுமென்பதற்காகவும், மாநிலத்தில் தொழில் நுட்பப் பல்கலைக் கழகமொன்றை நிறுவ அரசு தீர்மானித்தது. அதன் விளைவாக 1978 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகச் சட்டம் இயற்றப்பட்டது.

சென்னைப் பல்கலைக் கழகம், மதுரைப் பல்கலைக் கழகம் ஆகிய வற்றின் எல்லைக்குட்பட்ட சில கல்லூரிகளுக்குச் சுயாட்சி உரிமை அளிக்கும்வகையிலும் திருத்தச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டன.

சென்னை, உதகமண்டலம் உள்ளிட்ட இந்தியாவிலுள்ள பல்வேறு நிலையங்களில் நடத்தப்படும் பந்தயங்களுக்கு, பந்தயம் கட்டுபவர்களின் சார்பாக, குதிரைப்பந்தய (டர்ப்) ஏஜன்சிகள், தரகுக்காக குதிரைப் பந்தயம் எதற்கும் சீட்டுகளை வாங்கி வந்தன. இந்தக் குதிரைப் பந்தய (டர்ப்) ஏஜன்சி முறையில், தீய பழக்கங்களும், மோசடியான செயல்களும் காணப்பட்டன. எனவே, பொதுநலனை முன்னிட்டு, இந்த முறையானது, அவசரச் சட்டமொன்றின் மூலமாக ஒழிக்கப்பட்டது.

இவற்றிற்கெல்லாம் மேலாக, மதுவிலக்கைத் தீவிரமாக அமல்படுத்தும் வகையில் திருத்தச் சட்டமொன்று நிறைவேற்றப்பட்டது. மதுவிலக்கைச் செயல்படுத்துவதை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு அதைத் திறம்பட நிறைவேற்றி, இரண்டாண்டுக் காலத்தில் முழு மதுவிலக்கைக் கொண்டுவருவதாக 11.6.1977ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாவது திருத்த) அவசரச் சட்டம் முதலில் பிரகடனம் செய்யப்பட்டு, பின்னர் சட்டமாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளது. கள்ளச் சாராயம் காய்ச்சுவதும், போதையூட்டும் மதுபானச் சரக்குகளை விற்பனை செய்வதும், நாளுக்குநாள் பெருகிக் கொண்டே போவது சமுதாயத்திற்குத் தீங்கு விளைவிக்கும் என்பதை உணர்ந்து, அதிலிருந்து சமுதாயத்தை மீட்டு மேம்படச் செய்யும் எண்ணத்துடன், குற்றவாளிகளுக்கு மிகக் கடுமையான தண்டனைகளைப் புகுத்தி இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. சமூகப் பொருளாதாரத் துறையில் சட்டமியற்றுவதில் இதை ஒரு மைல் கல் என்று குறிப்பிடலாம்.



# குடிநீர்த் தேவைகள் நிறைவேற அரும் பணிகள்

**1978-79** ஆம் ஆண்டுவரை 2 மாநகராட்சிகளுக்கும், 90 நகராட்சிகளுக்கும் 5 நகராட்சி நகரியங்களுக்கும் 8 பேரூராட்சி நகரியங்களுக்கும் மற்றும் 108 பேரூராட்சிகளுக்கும் ஆக மொத்தம் 213 நகரங்களுக்குக் குடிநீர்த் திட்டம் அமலாக்கப்பட்டுப் பயனுக்குக் கொண்டு வரப்பட்டன. இதனால் 105.40 இலட்சம் நகர மக்கள் பயனடைந்துள்ளனர். மொத்த நகர மக்கட் தொகையில் இது 68 விழுக்காடுகளாகும்.

73 நகரங்களில் புதிய குடிநீர்த் திட்டங்கள் செயலிலும், 146 நகரங்களில் குடிநீர்த் திட்டங்கள் ஆய்விலும் தற்போது உள்ளன. வடிகால் திட்டங்களைப் பொறுத்தவரை மொத்தமுள்ள நகர மக்கட் தொகையில் 38 இலட்ச மக்கள் செயலாக்கப்பட்ட திட்டங்களால் பயன் பெற்று வருகின்றனர்.

இது நகர மக்கட் தொகையில் 25 விழுக்காடுகளாகும். மற்றும் 9 நகரங்களில் புதைச் சாக்கடைத் திட்டங்கள் செயலிலும் 29 நகரங்களில் ஆய்விலும் தற்போது உள்ளன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தொடங்கிய பின்னர் இதுவரை ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து ரூ. 38.04 கோடிகளும் தமிழக அரசிடமிருந்து ரூ. 17.03 கோடிகளும் கடனாகப் பெறப்பட்டு குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கப்பட்டு பல திட்டங்கள் பயனிலும், பல திட்டங்கள் செயலிலும் உள்ளன. செலவிடப்பட்ட தொகை ரூ. 67.15 கோடிகளாகும்.

நடப்பு ஆண்டில் இதுவரை 12 குடிநீர்த் திட்டங்களுக்கு ரூ.208.40 இலட்சங்கள் மதிப்பில் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

1979-80 ஆண்டுக்குக் குடிநீர் ரூ. வடிகால் திட்டங்களுக்காக 1187.26 இலட்சங்கள் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு ரூ. 31 குடிநீர்த் திட்டங்களும் 2 வடிகால் திட்டங்களும் மக்கள் பயனுக்குக் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளன.

ஒருங்கிணைப்பு நகர முன்னேற்றக் குழுவிடமிருந்தும் கடன்கள் பெறப்பட்டுத் கோவை, மதுரை திருச்சி ஆகிய நகரங்களுக்குத் திட்டங்கள் தீட்டப்பட்டு செயலில் இருந்து வருகின்றன. ஒரு இலட்சத்துக்கு மேல் மக்கள் தொகையுள்ள ஒன்பது நகரங்களுக்கு வடிகால் திட்டங்களும் உலக வங்கியின் உதவியுடன் அமைக்கப்படும்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சாரிபில், நிறைவேற்றப்பட்டுள்ள கிராமக் குடிநீர்த்திட்டங்கள் வருமாறு:

1976-77ல் நிதி ஒதுக்கீடு 300 அரசு ஆணையிட்ட தொகை 1,205.93. ஆழ்துளைக் கிணறுகளின் எண்ணிக்கை 8,466. பயனடைந்த சிற்றூர்களின் எண்ணிக்கை 9,470. பயனடைந்த மக்கள் தொகை இலட்சத்தில் 32.270. செலவிடப்பட்ட தொகை ரூபாய் 388.00 இலட்சம்.

1977-78ல் நிதி ஒதுக்கீடு 400. அரசு ஆணையிட்ட தொகை 717.30. ஆழ்துளைக் கிணறுகளின் எண்ணிக்கை 3,712. பயனடைந்த சிற்றூர்களின் எண்ணிக்கை 2,888. பயனடைந்த மக்கள் தொகை இலட்சத்தில் 14,590. செலவிடப்பட்ட தொகை 675.69 இலட்சம்.

1978-79ல் நிதி ஒதுக்கீடு 600. அரசு ஆணையிட்ட தொகை 1316.87. ஆழ்துளைக் கிணறுகளின் எண்ணிக்கை 1,921. பயனடைந்த சிற்றூர்களின் எண்ணிக்கை 1,404. பயனடைந்த மக்கள் தொகை இலட்சத்தில் 7,440. செலவிடப்பட்ட தொகை 860.30 இலட்சம்.

1979-80ல் நிதி ஒதுக்கீடு1200. அரசு ஆணையிட்ட தொகை 600. ஆழ்துளைக் கிணறுகளின் எண்ணிக்கை 900. பயனடைந்த சிற்றூர்களின் எண்ணிக்கை 262. பயனடைந்த மக்கள் தொகை இலட்சத்தில் 850. செலவிடப்பட்ட தொகை 317.61 இலட்சம்.

இவ்வாறு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், குடிநீர்த் தேவைகளை நிறைவேற்றும் வகையில் பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயலாற்றிவருகின்றது.

# வருவாய்த் துறையின் அரிய பணிகள்!

**1978**-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலச் (உச்சவரம்பு-முறைப்படுத்துதல்) சட்டத்தின்படி 20.10.1979 முடிய தாக்கல் செய்யப்பட்ட அறிக்கைகள் 13,957 ஆகும். இதில் 10,257 அறிக்கைகள் உச்ச வரம்பிற்குட்பட்டதாகும். மீதி 3,700 அறிக்கைகள் நடைமுறையில் உள்ளன.

இந்த அறிக்கைகளின்படி 2,579 எக்டேர், 58 ஏர், 92 சதுர மீட்டர் காலி நிலங்கள் உபரியாக உள்ளன. 54 அறிக்கைகளின் பேரில் நடவடிக்கை எடுத்து 35 எக்டேர், 57 சதுர மீட்டர் உபரி காலி நிலங்களைக் கையகப்படுத்தும் பொருட்டு அறிவிப்பு ஒன்று தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. 5 அறிக்கைகளின் பேரில் 4 எக்டேர், 12 ஏர், 63 சதுர மீட்டர் உபரி காலி நிலங்களை அரசால் கையகப்படுத்தி தமிழ்நாடு அரசிதழில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

**நகர்ப்புற நிலவரி**

1966ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம், தற்போது சென்னை மாநகரம், மதுரை மாநகரம், கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி நகரங்கள் மற்றும் சென்னை நகர எல்லையோரப் பகுதி ஆகிய இடங்களில் அமலில் உள்ளது.

1979-80-ஆம் ஆண்டு கேட்புத் தொகை ரூ. 1380.96 இலட்சத்தில் 1979-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31ந் தேதி வரை 135.96 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. ரூ.1245.00 இலட்சம் வசூலிக்கப்பட வேண்டியுள்ளது.

**அரசு நிலங்கள் ஒப்படை**

நில ஒப்படையில் உள்ள முறைகேடுகளையும், ஒப்படை செய்யப்பட்டபின் ஏற்பட்ட விளைவுகளால் தகுதியற்றவர்களிடம் சென்றடைந்த நிலங்களைக் கண்டுபிடிக்கவும் ஏழைகளும், தகுதியுள்ளவர்களும் ஒப்படை செய்யப்பட்ட நிலங்களைப் பெறத் தேவையான நடவடிக்கை எடுக்கவும், இதுவரை கொடுக்கப்பட்ட ஒப்படைகளை மறு ஆய்வு செய்யவேண்டும் என்று அரசு ஆணையிட்டது.

மறு ஆய்வுப் பணிக்காக சென்னை, நீலகிரி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் சிறப்புப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரசின் கொள்கையின்படி விலை மதிப்பீடு செய்யப்படாத நிலம், நேரடி சாகுபடியில் ஈடுபடும் நிலமற்ற ஏழை மக்களுக்கு இலவசமாக ஒப்படை செய்யப்படுகிறது.

கடந்த பத்தாண்டுகளில் ஒப்படை செய்யும் பணியைத் துரிதப்படுத்த அரசு எடுத்துக் கொண்ட தனி முயற்சியின் காரணமாக 1967-68-ஆம் ஆண்டிலிருந்து 31.8.79 முடிய 8,82,555.47 ஏக்கர் பரப்புள்ள அரசு நிலம் 5,12,116 நபர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ளது. ஒப்படை செய்வதற்கு அதிக அளவில் அரசு தரிசு நிலங்கள் கிடைக்கும் மாவட்டங்களில், ஒப்படை செய்யும் பணியை விரைவுபடுத்த 27 சிறப்புப் பணியாளர் தொகுதிகள் பணியாற்றி வருகின்றன.

தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப் பூண்டி வட்டம், ஜாம்பவான்ஓடை கிராமத்தில் முன்னாள் இராணுவத்தினர் நிலக் குடியேற்றக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட 74265 ஏக்கர் நிலத்தை அரசு திரும்பப் பெற்று, அந்நிலத்தைச் சங்கத்தின் உறுப்பினர், நிலமில்லாத ஏழையா என்றும், அவரோ அல்லது அவரது குடும்பத்தினரோ நிலத்தைச் சீர்படுத்தி சாகுபடி செய்தாரா என்றும் விசாரணை செய்து, ஒவ்வொரு உறுப்பினருக்கும் 5 ஏக்கர் வீதம் இனாமாக ஒப்படை செய்யலாம் என்று அரசு ஆணையிட்டுள்ளது.

**நிலச் சீர்திருத்தம்**

இவ்வரசு பதவியேற்ற பின் 866 அறிக்கைகள் நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் சுமார் 30,668 ஏக்கர்களை உபரி நிலமாக அரசுடைமையாக்கி வெளியிடப்பட்டுள்ளன. ஒப்படை செய்யப்பட்ட மொத்த நிலம் 79,906 ஏக்கர்.

| பயன் அடைந்தவர்கள் | மொத்த நபர்கள் | பரப்பு |
|---|---|---|
| ஷெட்யூல் வகுப்பினர் | 17,767 | 24,497 |
| ஷெட்யூல் மலை சாதியினர் | 20 | 9 |
| இதர நபர்கள் | 32,139 | 50,871 |
| | 49,926 | 75,377 |

உபரி நிலம் ஒப்படைபெறும் ஏழை மக்கள் சந்தை விலையைவிட அதிக நிலக்கிரயம் கொடுக்க வேண்டிய நிலையினைத் தவிர்க்க, உபரி நிலங்களுக்கு அளிக்க வேண்டிய தொகை நிலவரி அடிப்படையில் மாற்றியமைக்கப்பட்டு அதன்படி மிகச்சிறந்த நிலத்துக்கும் தொகை ஏக்கருக்கு ரூ. 3,500-க்கு மேற்படாமலிருக்கு மாறு சட்ட விதிகள் 27.10.78 முதல் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.



**தக்காவிக் கடன்கள்:**

விவசாயிகளின் பிரச்சனைகளைப் பரிசீலிப்பதற்காக தமிழக அரசினால் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவின் அறிக்கையையும், அதன் பல்வேறு பரிந்துரைகளையும் விரிவாகப் பரிசீலித்து, தக்காவிக் கடன்கள் தொடர்பான பரிந்துரைகளை முழுமையாக ஏற்று விவசாயிகளுக்கு நிவாரணங்கள் அளித்து அரசு உத்தரவுகளைப் பிறப்பித்தது. இந்த உத்தரவுகளின்படி 7,48,123 விவசாயிகள் ரூ. 8,43,74,254 தொகை அளவில் பயன் பெறுவார்கள் என கணக்கிடப்பட்டுள்ளது. தகுதியுள்ள விவசாயிகளுக்கு இந்தச் சலுகைகள் விரைவில் கிட்டப்பெற வேண்டுமென மாவட்ட ஆட்சியாளர்கள் வலியுறுத்தப்பட்டுள்ளனர். இதுவரை 2,60,859 விவசாயிகளின் நேர்வுகளில் ரூ. 2,23,99,655 தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

**மறுவாழ்வுத் துறை**

பர்மா, வியட்நாம் ஆகிய நாடுகளினின்றும் தாயகம் திரும்புபவர்களைத் த விர சிரிமாவோ சாஸ்திரி ஒப்பந்தப்படி தாயகம் திரும்பும் சுமார் ஆறு இலட்சம் அகதிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு, இவ்வரசு பல்வேறு திட்டங்களை அமல்படுத்திக் கொண்டிருக்கின்றது. இவ்விதமாகக் குடியமர்த்தப்பட்ட பர்மா அகதிக் குடும்பங்கள் 541க்கும், வியட்நாம் அகதிக் குடும்பங்கள் 199 ஆகிய வற்றிற்கும் ரூ. 82.88 இலட்சம் மத்திய அரசின் மானியமும், ரூ. 1,517.69 இலட்சம் இவ்வரசின் நிதியினின்றும் செலவிடப்பட்டுள்ளன.

கீழ்க்கண்ட குறிப்பிடத்தகுந்த திட்டங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன:

மண்டபம் முகாமில் ரூ. 88,000 செலவில் மருத்துவம் மற்றும் சுகாதார வசதிகள் பெருக்கப்பட்டுள்ளன. நெய்வேலி, மாநிலப் பண்ணையில் இலங்கை அகதிகளுக்காக ரூ. 28,000 செலவில் தனி மருத்துவமனை நிறுவப்பட்டுள்ளது.

தாயகம் திரும்பியோருக்காக ஒரு கிலோ அரிசி 57 காசு விலையில், அகதிகள் கூட்டுறவு வங்கியின் வாயிலாகக் குடியமர்த்தப்பட்டோருக்கு விரிவுபடுத்தப்பட்டன. திட்டங்களில் குடியமர்த்தப்பட்ட ஒவ்வொரு அகதிகள் குடும்பத்திற்கும் தற்காலிகமாகக் குடியிருப்பதற்காக ரூ. 250 மானியமாக வழங்கப்படுகிறது.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்காக நீலகிரி மாவட்டத்தில் ஜன்மம் நிலத்தில் 4000 ஏக்கர், தமிழ்நாடு தேயிலைக் கழகத்தின் மூலம் தேயிலை பயிரிட ஏற்பாடு செய்யப்பட்டது. இலங்கை அகதிகள் குழந்தைகள் கல்விச் சலுகைகள் பெற உயர்ந்த பட்ச மாத வருமானம் ரூ. 250லிருந்து ரூ. 400 ஆக உயர்த்த மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டது.

திருச்சி மாவட்டத்தில் கோட்டப்பட்டு என்னும் இடத்தில் ரூ. 26.46 இலட்சம் செலவில் புதிய இடைத்தங்கல் முகாம் நிறுவப்பட்டுள்ளது.

இராணிப்பேட்டையில், தமிழ்நாடு குரோமேட் மற்றும் இரசாயனத் தொழிற்சாலையில் அகதிகளுக்காக வீடு ஒன்றுக்கு ரூ. 5,805 வீதமும், தண்ணீர் வசதிக்காக ரூ. 47,200மாக, ரூ. 9,81,045 செலவில் 159 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, 28.9.78ல் மத்திய வீட்டு வசதி அமைச்சரால் திறந்து வைக்கப்பட்டது. வியாசர்பாடியில் ரூ. 177.63 இலட்சம் செலவில், 3,132 அகதிக் குடும்பங்கட்கு வீடு கட்டும் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

மத்தியப்பிரதேசத்தில் இயங்கி வந்த கனரகத் தொழில்நுட்பம் மற்றும் ஓட்டுநர் பயிற்சி நிலையம், தமிழ்நாடு, செங்கல்பட்டு, கும்மிடிப்பூண்டி முகாமிற்கு மாற்றப்பட்டு ரூ. 25.41 இலட்சம் செலவில் புதிய நிலையம் கட்டி முடிக்கப்பட்டு, மத்திய வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களால் 29.9.78 அன்று திறந்து வைக்கப்பட்டது.

நெய்வேலி, மாவட்டப் பண்ணைக் கழகத்தில் பணியாற்றும் அகதிகட்கு ரூ. 28.50 இலட்சம் செலவில் 600 வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பொதுவாக, இதுவரை தாயகம் திரும்பியோர்களில் 75 சதவீத்தினருக்கு வணிகக் கடன் அளிக்கப்பட்டும், மற்ற 25 சதவீதத்தினர் இதர திட்டங்களிலும் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

## இராணுவ வீரர்களுக்கு அரசு உதவி!

நாட்டுப் பாதுகாப்பிற்காகப் பாடுபடும் இராணுவ வீரர்களின் குடும்பப் பாதுகாப்பில், தமிழக அரசு கொண்டுள்ள அக்கறை மகத்தானதாகும். படைவீரர்களின் மனைவியரின் பொது நலச் சேவைகளுக்காக ரூபாய் ஒரு இலட்சம் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டுள்ளது.

கப்பற்படையில் பணிபுரிந்து வருகின்ற, கப்பற்படைப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற பணியாளர்களின் ஊனமுற்றக் குழந்தைகளுக்காகப் பள்ளிகள், தொழிற்பயிற்சி உதவி போன்ற பணி நலத் திட்டங்களுக்காகக் கடற்படையினரால் நிதி திரட்டப்படுகிறது. இந்நிதிக்குக் கடந்த ஆண்டு தமிழ்நாடு அரசு ரூ. 10,000 வழங்கியுள்ளது. அதுபோல இவ்வாண்டும் ரூ. 10,000 வழங்கியுள்ளது.

திருச்சிராப்பள்ளியில் உள்ள தமிழ்நாடு பிரதேச இராணுவப் படையின் 117வது காலாட் படைப் பிரிவிற்கு விருது அளித்தல் விழாவின் போது, இப்படைப் பிரிவு இந்தியாவிலேயே சிறந்தது என்னும் கௌரவம் அடைந்ததைப் பாராட்டும் வகையில் தமிழ்நாடு அரசு ரூபாய் ஒரு இலட்சம் வழங்கிச் சிறப்பித்துள்ளது.

நீலகிரி மாவட்டம் "மெட்ராஸ் ரெஜிமெண்டல் சென்டர்" இராணுவப் பிரிவில் பணியாற்றும் வீரர்களின் குடும்பத்தினருடைய பொது நலச் சேவைகளுக்காக இவ்வரசாங்கம் ரூபாய் ஒரு இலட்சம் நன்கொடையாக வழங்கியுள்ளது.

# தமிழகத்தில் மின் வசதி

சுருளியாறு நீர் மின் திட்டம் (35மெ.வா) ஆகஸ்ட் 1978-ல் துவக்கி வைக்கப்பட்டது. குந்தா நீர் மின் திட்டத்தின் நான்காவது நிலையின் இரண்டாவது மின் பிரிவு (50 மெ.வா) 1978-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் துவக்கி வைக்கப்பட்டது. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் முதல் மின் பிரிவு (210 மெ.வா) 1979ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் துவக்கி வைக்கப்பட்டது. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் மூன்றாவது பிரிவு (210 மெ.வா)க்கான அனுமதி மத்திய அரசிடம் இருந்து பெறப்பட்டு இத்திட்டத்திற்கான பணிகள் செப்டம்பர் 1977ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன.

பல்வேறு காரணங்களுக்காக, நிறுத்தி வைக்கப்பட்ட காடம்பாறை நீரேற்று மின் நிலையத்தின் (4 X 100 மெ.வா) பணிகளை ஜனவரி 1978ஆம் ஆண்டு மீண்டும் துவக்க அரசு ஆணையிட்டது. கீழ்மேட்டூர் நீர் மின் திட்டம் (120 மெ.வா) பணிகள் ஆரம்பக் கட்ட நிலையில் உள்ளன. இதற்கான மத்திய அரசின் அனுமதி கிடைக்க மாநில அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

எண்ணூர் அனல் மின் நிலையத்தில் மேற்கொண்ட புனரமைப்புப் பணிகளின் காரணமாக இந்நிலையம் அதிகபட்சமாக 440 மெ.வா. மின் உற்பத்தியை 1978ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் எட்டியது. இந்நிலையத்தின் நிறுவனத்திறன் 450 மெ,வா. என்பது குறிப்பிடத்தக்கது.

மின் உற்பத்தியிலும், தமிழ்நாடு முன்னேறிக் கொண்டு வருகிறது.

ஜூலை 1976-ஜூன் 1977- 815.2 கோடி யூனிட்

ஜூலை 1977-ஜூன் 1978-1006.4 ,,

ஜூலை 1978-ஜூன் 1979- 1041.8 ,,

தமிழகத்தின் உச்ச மின் தேவை 1641 மெ.வா. (1977-78) இல் இருந்து 1779மெ.வா(1978-79ல்) ஆக உயர்ந்தது.

சிறு விவசாயிகளுக்கான மின் கட்டண விகிதம் ஒரு யூனிட்டுக்கு 16 காசிலிருந்து 14 காசாக ஜூலை 1977-இல் குறைக்கப்பட்டது. பின்னர் இவ்விகிதம் 14 காசிலிருந்து 12 காசாக ஜூன் 1978ல் மீண்டும் குறைக்கப்பட்டது. இதனால் சிறு விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கை அரசால் நிறைவேற்றப்பட்டது.

ஊரெல்லாம் ஒளிமயமாக ஆக்கிய தமிழக அரசு, வீடெல்லாம் ஒளிமயமாக்க வேண்டும் எனக் கருதிக் குடிசைகளுக்கும் மிகக் குறைந்த கட்டண விகிதத்தில் (மாதம் ரூபாய் 2½ மட்டும்) ஒரு 40 வாட் பல்ப் மின் இணைப்புக் கொடுக்க ஆணையிட்டுள்ளது.

1977 ஜூலைத் திங்கள் முதல் இன்று வரை, மின்வெட்டு எதுவும் அமல் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ஆனால் தவிர்க்க முடியாத காரணங்களால் உயர் மின் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு மட்டும் உச்ச மின் தேவையில் மின்வெட்டு 1979 மார்ச் முதல் ஜூன் வரை அமலில் இருந்தது).

விவசாயிகளுக்கான மின் இணைப்புக் கொடுப்பதில் முன்னுரிமை அவரவர்கள் விண்ணப்பம் கொடுத்த தேதியின் வரிசைப்படி தான் கொடுக்கப்பட வேண்டும் எனப் புது ஆணையிடப்பட்டுள்ளது. புது மின் இணைப்புக் கொடுக்கும்போது இதுவரை கருத்தில் கொண்ட குறைந்தபட்ச வருமானம் என்கிற விதிமுறை நீக்கப்பட்டுள்ளது. விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கும்போது இதுவரை நில அடி நீர்த்துறையில் இருந்து ஒப்புதல் பெறவேண்டும் என இருந்த விதிமுறையும் நீக்கப்பட்டுள்ளது.


தொழிற்சாலைகள் மின் இணைப்புப் பெறுமுன் ஊராட்சி, நகராட்சி போன்றவற்றில் இருந்து அனுமதி பெறவேண்டும் என இருந்த விதிமுறையும் தற்போது நீக்கப்பட்டுள்ளது. 1979-மார்ச்சில் தமிழகத்தில் உள்ள எல்லா அரிசனக் குடியிருப்புகளுக்கும் (25526) மின் இணைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. வாரிய ஊழியர்கள் பணியில் இருக்கும்போது இயற்கை எய்தினால், வாரிய ஊழியர்களின் வாரிசுகளுக்கு வாரியத்தில் வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது.


உயர் மின் அழுத்தப் பயனீட்டாளர்களின் மூன்று மாதப் பிணைப்புத் தொகையினை, ஒன்றரை மாதப் பிணைப்புத் தொகையாக வாரியம் குறைத்துள்ளது. இத்திட்டத்தை அமல்படுத்துவதற்காக உயர் மின் அழுத்தப் பயனீட்டாளர்களின் மின் பட்டியல் அனுப்புவதைத் துரிதமாக்கும் புதுமுறையினை, வாரியம் நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது.

சிறு தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் கேட்கும்போது, அதே இடத்தில் முன்னால் ஒரு தொழிற்சாலை இருந்து, அந்தத் தொழிலதிபர் மின் கட்டணப் பாக்கியை வாரியத்திற்குக் கொடுக்காமல் இருந்தால், புது மின் இணைப்பு இதுவரை கொடுப்பது இல்லை. இது தொழில் வளர்ச்சிக்குத் தடங்கலாக இருப்பதால், இப்போது வாரியம் புதுமின் இணைப்பை, புதிய தொழில்களுக்குக் கொடுத்துவிட்டு, பழைய பாக்கியைச் சட்ட ரீதியாகப் பழைய தொழிலதிபரிடம் இருந்து வசூல் செய்ய முயற்சி எடுக்கிறது.


அனுமதிக்கப்பட்ட மின் சுமையினைவிட அதிகமாக மின் சுமையை இணைத்திருப்பவர்கள் அவர்களாகவே இதனை மின் வாரியத்திற்குக் குறிப்பிட்ட தேதிக்குள் தெரியப்படுத்தினால், அபராதம் எதுவுமின்றி, இந்த அதிக மின் சுமை, அனுமதிக்கப்பட்ட மின் சுமையாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

# வோட்டாவின் சொந்தக்காரர் நதிகளின் சொந்தக்காரர்!







வோட்டா ஹை ஸ்பீடு டீசல் பம்ப்செட்




வோட்டா எலெக்ட்ரிக் பம்ப்செட்




வோட்டா மோனோ ப்ளாக்



வோட்டா ஸ்லோ ஸ்பீடு டீசல் எஞ்சின்



வோட்டா கபாசிட்டர்




வோட்டா ஸ்டார்ட்டர்

வோட்டா — நீங்கள் முழுதும் நம்பக்கூடிய பெயர்.
ஏனெனில் உயர்ந்த தரத்தின் மறுபெயரே வோட்டா.
வோட்டா சாதனங்களை உங்களிடம் கொணர்ந்தளிப்போர் வோல்டாஸ் — விற்பனைக்குப் பிந்திய சேவைகளுக்குப் புகழ் பெற்றோர்.


நீங்களும் வோட்டா வாங்கிடுவீர். வேண்டியபோது நீர்ப்பாசனம் பெறறிடுவீர்!

**வோல்டாஸ் லிமிடெட்**
ஆக்ரோ இண்டஸ்டிரியல்
புரோடக்ட்ஸ் டிவிஷன்
52, அரண்மனைக்காரத் தெரு
சென்னை 600 001.

வெள்ளி விழா

VT-5210

# அரிசன - பழங்குடி மக்களுக்கு அரசின் உதவிகள்



**1977**-ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் புதிய அரசு மலர்ந்த பின், அரிசன மக்கள் - பழங்குடியினர் நலப் பணிகளுக்கான பல் வேறு புதிய திட்டங்கள் வகுக்கப் பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழகத்திலுள்ள அரிசன பழங்குடியினரின் எண்ணிக்கை 76 இலட்சமாகும். இது நமது மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 18 சதவிகிதமாகும்.

அரிசன பழங்குடி மக்கள் நலப் பணித் திட்டங்களுக்காக 1977-78-ஆம் ஆண்டில் ரூ. 1595.09 இலட்சமும், 1978-79-ஆம் ஆண்டில் ரூ. 1694.46 இலட்சமும், 1979-80-ஆம் ஆண்டில் ரூ. 1941.13 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1976-77-ஆம் ஆண்டு வரையில் 1 முதல் 11-ஆம் வகுப்பு வரையில் படித்த அரிசன பழங்குடி மாணவர்களுக்கும், கிறித்துவர்களாக மதம் மாறிய அரிசன மாணவர்களுக்கும் புத்தகச் செலவுக்கும், சிறப்புக் கட்டணங்களும் படிப்பு உதவித் தொகை பணமாக வழங்கப்பட்டது. இப்படிப்பு உதவித் தொகையை வழங்குவதற்குப் பெற்றோர், காப்பாளரின் ஆண்டு வருமானம் ரூ. 3000 ஆகும். 1977-78-ஆம் ஆண்டில் இருந்து 4 முதல் 10வது வகுப்பு வரையில் படிக்கும் அரிசன பழங்குடி மற்றும் கிறித்துவர்களாக மாறிய அரிசன மாணவர்களுக்கு அவர்களது பெற்றோரது ஆண்டு வருமானத்தைக் கருத்திற்கொண்டு பாராமல் எல்லாப் பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. (1 முதல் 3 வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கும் கல்வித் துறை இலவசமாகப் புத்தகங்களையும் பலகைகளையும் வழங்குகிறது) சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களுக்கு மாணவர்கள் செலுத்த வேண்டிய சிறப்புக் கட்டணத்தை வழங்கிவிடுகிறது.





1976-77-ஆம் ஆண்டு வரை மெட்ரிக்குக்குப் பிந்திய வகுப்புகளில் படிக்கும் அரிசன பழங்குடி மாணவர்களுக்கு அவர்களது பெற்றோரின் வருமானம் ரூ2500 வரை இருந்தால் மட்டுமே கட்டணச் சலுகை அளிக்கப்பட்டது. 1977-78-ஆம் ஆண்டில் இருந்து அவர்களது பெற்றோரின் வருவாயைக் கருதிப் பாராமல் படிப்புக் கட்டணச் சலுகை. எல்லா அரிசனப் பழங்குடி மாணவர்களுக்கும் அளிக்கப்படுகிறது. அவர்களுக்கு எல்லா நிலைகளிலும் இலவசமாகக் கல்வி கற்பிக்கப்படுகிறது.

அரிசன பழங்குடி மாணவர்களுக்கு வழங்கும் இந்திய அரசு படிப்பு உதவித்தொகையில் அடங்கும் பராமரிப்புத் தொகையை: மாணவ விடுதிகளில் உள்ள மருத்துவம், பொறியியல், பட்டப்படிப்பு மாணவர்களுக்கு 1978-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1ஆம் நாளிலிருந்து மாதமொன்றுக்கு ரூ. 60 கூடுதலாக வழங்கப்படுகிறது.

**அரிசனங்களுக்கு வீட்டுமனை கையகப்படுத்துதல்**

தனியார் நிலங்களைக் கையகப்படுத்தி வீடற்ற அரிசனங்களுக்கு இலவசமாக வீட்டுமனை வழங்கும் திட்டமானது கடந்த இரண்டரை ஆண்டுகளாகத் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1977-78-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 63.17இலட்சம் செலவில் 1282.66 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, 20,799 வீட்டு மனைகள் வழங்கப்பட்டன. இவற்றிற்கு முந்தைய ஆண்டுகளில் ரூ. 50 இலட்சத்திற்கும் ஒவ்வொரு ஆண்டும் செலவு செய்யப்பட்டது.

1978-79-ம் ஆண்டில் ரூ.111.29 இலட்ச செலவில் 1842.36 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 31,304 வீட்டு மனைகள் வழங்கப்பட்டன.

1979-80ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஈமக் கடன் செய்ய நிதி உதவி**

அரிசனக் குடும்பங்களில் இறந்துபோகும் நபர்களுக்கு ஈமக் கடன் செய்வதற்கென நபர் ஒன்றுக்கு ரூ. 50 வீதம் நிதி உதவி வழங்கும் புதிய திட்டம் 1978ஆம் ஆண்டு சூலை மாதம் அரசினரால் அனுமதிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகிறது.

1978-79-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 5309 அரிசனக் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது. இதற்கான செலவு ரூ. 2,65,400 ஆகும்.

நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ. 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




தற்போதைய அரசு பதவி யேற்ற பிறகுதான் அரிசன மக்களுக்கு வியாபாரக் கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷா, பெட்ரோல் பங்க் வைத்து நடத்துதல் போன்றவைகள் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன. சைக்கிள் ரிக்ஷா விலையில் நபர் ஒன்றுக்கு ரூ. 270 வீதம் 37 நபர்களுக்கு இறுதி நிலை ரொக்கமாக (மார்ஜின் மணி) இந்த அரசு வழங்கியுள்ளது. மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷாவுக்கு ஐந்து நபர்களுக்குத் தலா ரூ. 750 இந்த அரசு வழங்கியுள்ளது. மீதமுள்ள தொகையை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி வழங்கியுள்ளது. ஒரு நபருக்கு ரூ. 1,300 இறுதி நிலை ரொக்கமாக (மார்ஜின்மணி) ஆட்டோ ரிக்ஷா வாங்குவதற்கு இந்த அரசு வழங்கியுள்ளது. மீதித்தொகையை யுனைடெட் கமர்ஷியல் வங்கி கொடுத்துள்ளது.

பெட்ரோல் வியாபாரத்திற்கான (Petrol Dealership) ஒரு நபருக்கு ரூ. 12,000 இந்த அரசு வழங்கியுள்ளது. இதுவரை13,717 நபர்களுக்கு ரூ. 96.38 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**விவசாயக் கிணறு மானியம்**

விவசாயக் கிணறு வெட்ட ரூ. 2,500 மானியமாக வழங்கப்படுகிறது. 1977-78-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 537 அரிசன மக்களும், 47 அரிசன கிறித்தவ மக்களும் பயனடைந்தனர். அதேபோல 1978-79ல் 152 அரிசன மக்களும், 15 அரிசன கிறித்தவர் மக்களும் பயனடைந்தனர்.

நடப்பு நிதியாண்டில் அரிசன மற்றும் அரிசன கிருத்துவ விவசாயிகளுக்கு விவசாயக் கிணறு வெட்ட மான்யம் வழங்க ரூ. 6.98 இலட்சமும், உழவு மாடு மான்யம் வழங்க ரூ. 1.52 இலட்சமும் ஒதுக்கப்பட்டுச் செலவு செய்யப்படுகிறது.



**குடிநீர் வசதி**

அரிசன காலனிகளில் குடிதண்ணீர் வசதிக்காகக் கிணறு தோண்டுவதற்கு உச்சவரம்புத் தொகை ரூ. 5,000 லிருந்து ரூபாய் 6,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.


முன்பெல்லாம் அரசு ஒப்புதலின் பேரில் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு வந்தன. தற்போது மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எங்கெங்கே நீர்த்தொட்டிகள் அவசியமோ அங்கங்கே கட்ட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் குடிதண்ணீர் வசதியில்லாத காலனிகளில் தண்ணீர் இருந்தும் குடிக்க லாயக்கில்லாத - வசதியற்ற காலனிகளுக்கும் 1978-79ல் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கத் தீவிர திட்டம் வகுக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது

1979-80ஆம் ஆண்டில் சேலம் மாவட்டம் பச்சை மலைக்குன்றுகளில் பெரிய பாக்காளம் கிராமத்தில் அரசு பழங்குடியினர் தங்கிப் பயிலும் பள்ளியொன்று திறக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. 1979-80ஆம் ஆண்டில் ரூ. 0.50 இலட்சம் செலவில் நீலகிரி மாவட்டத்தில் இரண்டு அரசு பழங்குடியினர் நடுத்தரப் பள்ளிகளுக்குப் பயிற்சிக்கூடங்கள் கட்டுவதற்காக அரசு ஆணை பிறப்பித்தது.

## ஆதி ஆந்திரா வகுப்பினருக்கு வீட்டுமனைப் பட்டா

சென்னை நகரில் ஆதி ஆந்திரா வகுப்பினர் சிறுபான்மையினராக சுமார் 4,000 குடும்பங்கள் பல ஆண்டுகளாக வசித்து வருகின்றனர். இவர்கள் அரசுக்குச் சொந்தமான நிலத்திலும், மாநகராட்சியின் நிலத்திலும், மற்றும் கோவில், தனியார் நிலத்திலும் குடிசைகளில் அல்லது தகரக் கூரையினால் ஆன வீடுகளில் வசித்து வருகின்றனர்.

இவர்கள் வசிக்கும் நிலம் அவர்களுக்கே சொந்தம் செய்யவேண்டும் என்ற தமிழக அரசின் திட்டத்திற்கு இணங்க, கடந்த ஆண்டு நவம்பர் திங்களில் சென்னை நேரு அரங்கில் மாண்புமிகு முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்களால் 393 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது. அதன் பிறகு, 135 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது. தற்போது 29.11.'79 அன்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் 150 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கினார்கள். ஆக மொத்தம் இதுவரையில் 729 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.



# பெருமைக்குரிய பிற்பட்டோர் நலத்துறை



பரவர், முக்கவர் அல்லது முக்கையர், பர்வதராச குலம் பட்டணவார், செம்படவர், மற்றும் மீனவர் இனத்தைச்சேர்ந்த மீனவ கிருத்துவர்கள் பின் தங்கிய வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். கோயம் புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டிலுள்ள ''தாசபளிஞ்சிகா'' வகுப்பினரும், நான் குடி வேளாளர் வகுப்பினரும், பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அரசுப் பணியிடங்களிலும் மற்றும் கல்வி நிறுவனங்களிலும் பின்தங்கிய வகுப்பினருக்காக ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு எவருடைய பெற்றோரின் மொத்த ஆண்டு வருமானம் ரூ. 9000-க்கு மிகைபடாது உள்ளதோ மற்றும் ஆணை இணைப்பில் குறிப்பிட்டுள்ள சாதி மற்றும் இனத்தைச் சார்ந்திருக்கிறார்களோ அவர்கள்தாம் சாதி மற்றும் கல்வி நிலையில் பின்தங்கியோர் எனக் கருதப்படுவர் என்று 2.7.'79 நாளிட்ட சமூக நலத்துறை ஆணை எண் 1156ல் ஆணை வெளியிடப்பட்டது.

பிற்பட்டோர் நலத்துறையால் நடத்தப்படும் மேல்நிலை உயர்நிலை மற்றும் இடைநிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் சுற்றுலா செல்ல பள்ளி ஒன்றுக்கு ரூ. 500- செலவு செய்ய அரசு அனுமதித்துள்ளது.

இந்த அரசு பதவியேற்றபின் பின்தங்கிய வகுப்பு மாணவர் மாணவியருக்காக 1977-78ஆம் ஆண்டுகளில் 23 விடுதிகளைக் திறந்துள்ளது. 1979-80ஆம் ஆண்டில் புதிதாக மூன்று குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த மாணவர் விடுதிகளும் 25 பிற்பட்டோர் மாணவர்களுக்கான விடுதிகளும் திறக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. கல்லூரி விடுதி மாணவ மாணவியர்களுக்கு உணவுத் தொகை மாதம் ரூ. 65ஆக இருந்ததை ரூ. 80ஆக உயர்த்தியுள்ளது. இதேபோல் பள்ளி மாணவ, மாணவியர் விடுதிகளில் உள்ள மாணவர்களுக்கு உணவுத் தொகை ரூ. 40லிருந்து ரூ. 45-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. பிற்பட்டோர் நலத்துறையால் நடத்தப்படும் விடுதிகளில் மாணவர், மாணவிக்ளை அனுமதிப்பதற்காக அவர்களது பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 2000க்கு மேற்படாது இருக்கவேண்டும் என்பதை ரூ. 2500ஆக உயர்த்த ஆணை வெளியிட்டுள்ளது.

மாநிலத்தில் +2 கல்வி முறை அமலாக்கப்பட்டதைத் தொடர்ந்து, மேல்நிலைச் கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த மாணவ-மாணவியருக்கு மெட்ரிக் படிப் பிற்குப் பிந்திய படிப்புக்கு உரிய உதவித்தொகையினை வழங்கவும், அவர்களை உயர்நிலைப் பள்ளி மாணவ-மாணவியர்களை பிற்பட்டோர் நலத்துறை நடத்தும் விடுதிகளில் சேர்த்துக் கொள்ளவும் அரசு ஆணை வழங்கியுள்ளது.

முந்தைய ஆண்டுகளில் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 2,500க்குக் குறைவாக உள்ள, பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட, குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை வழங்கப்பட்டது.

1977-78ம் ஆண்டு முதல், பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு உதவித்தொகையினைப் பணமாக வழங்குவதற்குப் பதிலாக, குறிப்பிட்ட புத்தகங்களை நேரிடையாக வழங்கவும் தனிக் கட்டணங்களை நேரிடையாகக் கல்வி நிலையங்களுக்கு வழங்கவும் பள்ளி இறுதி தேர்வு எழுதும் மாணவர்களுக்குரிய தேர்வுக் கட்டணங்களை அரசுத்தேர்வுகள் இயக்குநருக்கு வழங்கவும் புதிய திட்டம் அமலாக்கப்பட்டது. அரசால் நேரிடையாகச் செலுத்தப்படும் இச்செலவுகள் முன்பு வழங்கப்பட்ட உபகாரச் சம்பளத்திற்கு இணையாக இருக்கும்.

முடி திருத்துவோருக்கும், சலவைத் தொழிலாளர்களுக்கும் அவரவர் தொழில்களைச் செய்து வர தொழிற் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இவை தவிர, சலவைத் தொழிலாளர்கள் இயங்கும் சலவையகம் நடத்த பாரத ஸ்டேட் பாங்கிலிருந்து கடன் பெறுவதற்காக ஒவ்வொரு நபருக்கும் ரூ. 165 மானியமாக வழங்கவும் ரூ. 1050 மதிப்பளவில் சலவையகம் தொடங்குவதற்கு பாங்கியிலிருந்து கடன் பெற வசதியாக மேற்படி தொகையில் 20 விழுக்காடான ரூ. 210-ஐ மானியமாக வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கான ஆணைகள் 1978ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் பிறப்பிக்கப்பட்டன.

கல் உடைக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் போயர்களுக்கு இலவச தொழில் கருவிகள் வழங்கும் திட்டம் ஒன்று 1978-79ல் தொடங்கப்பட்டது. ஒரு செட் தொழில் கருவிகளின் விலை ரூ. 100 ஆகும். இத்திட்டம் முதலில் சேலம், தென்னார்க்காடு, கோவை மதுரை மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் அமல் செய்யப்பட்டது. 1979-80க்கு இத்திட்டத்தின் கீழ் ரூ. 25,000 ஒதுக்கீடு செய்யப்பட்டதால் இத்திட்டத்தை இவ்வாண்டுமுதல் திருநெல்வேலி, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தர்மபுரி ஆகிய மாவட்டங்களுக்கு விரிவுபடுத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

பிற்பட்ட வகுப்பு மற்றும் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த பெண்களுக்குத் தையல் பயிற்சி அளிப்பதற்காக 1978-79ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட ஐந்து இடங்களிலும் தையல் பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டன.

1. கன்னியாகுமரி மாவட்டம்
2. அஜிஸ்நகர் குடியிருப்பு
3. மதுரை மாவட்டம்
4. இராமநாதபுரம் மாவட்டம்
5. திருநெல்வேலி மாவட்டம்



## நான்குடி வேளாளர்

### பிற்பட்ட வகுப்பார் என அறிவிப்பு

நான்குடி வெள்ளாளர் ஜாதியினைச் சேர்ந்தவர்கள் சமூகத்திலும், கல்வியிலும், பின் நிலையில் இருப்பதால் அவர்களை பிற்பட்டோர் வகுப்பினர் பட்டியலில் சேர்க்க அரசு ஆணை யிட்டுள்ளது. நீண்ட நாட்களாக 'நான்குடி வெள்ளாளர்' சமூக சங்கங்கள் தங்கள் இனத்த வரை பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கவேண்டும் என அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளன. பிற்பட்டோர் வகுப்புப் பட்டியலில் வரிசை எண். 70-ஆ என்ற இடத்தில் இச் சமூகத்தினர் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

உழவுத் தொழிலுக்கு உதவும் ஓர் புதுமைக் கருவி

## 'புவனு மினி டில்லர்'

நவீன விவசாய வளர்ச்சிக்கு ஓர் வரப்பிரசாதமாக அமைந்திருப்பது, நான்கு டிஸ்குகள் இணைக்கப்பட்டுள்ள 'புவனு மினி டில்லர்' கலப்பைகள். நிலத்தில் உழுவதற்கு மிகவும் நேர்த்தியாக அமைந்துள்ளது. எட்டு எருதுகளைப் பூட்டி நான்கு ஆட்களைக் கொண்டு செய்யும் வேலையை ஒரு ஜோடி எருதுகளைக் கொண்டு ஒரே ஆள் சிரமம் இல்லாமல் உட்கார்ந்த வண்ணம் ஒரு ஏக்கர் நிலத்தை 3 மணி நேரத்திற்குள் உழுது பண்படுத்த முடிகிறது. மாடுகளுக்கு எந்தவிதமான சிரமமும் இல்லாமல் சுலபமாக இழுத்துச் செல்கிறது. நஞ்சை, புஞ்சை இருவித விவசாயத்திற்கும் ஏற்ப அமைந்துள்ளது.


விவசாயம் செய்ய 'புவனு மினி டில்லர்' கலப்பை மிகவும் பயன் உள்ளதாக இருக்கிறது. எனது அனுபவத்தில் அனைத்து விவசாயிகளும் மேற்படி கலப்பைகளை வாங்கிப் பயன் அடைய வேண்டும் எனத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இங்ஙனம்,

எஸ். கோவிந்தராஜ முதலியார்,
48, சுப்பிரமணிய சுவாமி கோயில் தெரு,
செந்நீர்க்குப்பம், பூந்தமல்லி,
சென்னை — 600 056

புவனு
மினிடில்லர்
நான்கு டிஸ்க்குகள்
இணைக்கப்பட்டது

நஞ்சை, புஞ்சை இருநில விவசாயத்திற்கும் ஏற்றது. உங்கள் உழவுத் தொழிலை நீங்கள் உட்கார்ந்தபடியே செய்ய உதவும். 30 அங்குல அகலமும் 8 அங்குல ஆழமும் உழக்கூடியது.



*விவரங்களுக்கு:*

புவனு அக்ரோ சர்வீஸ் கார்ப்பரேஷன்
72, ஆலந்தூர் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை - 600015.

S.R.A.A.

**த**மிழ்நாட்டில் மொத்தம் 375 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. நிர்வாகச் சீரமைப்பினைக் கருதி, மிகப் பெரிய ஊராட்சி ஒன்றியங்களாக இருக்கும் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கந்தர்வக்கோட்டை, புதுக்கோட்டை, திருவரங்குளம், அறந்தாங்கி, ஆவுடையார் கோயில் ஒன்றியங்கள், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள போகலூர் மற்றும் நைனார்கோயில் ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்க அரசு ஆணை பிறப்பித்தது. பெரிய ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்கும் அதே நேரத்தில், மாநிலத்தில் உள்ள சிறிய ஊராட்சி ஒன்றியங்களை ஒன்றாகவும் இணைக்க அரசு எண்ணி இருக்கிறது. இதைப் பிறகு அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும்.

**நிர்வாகப் பணியாளர்கள் சீரமைப்பு :**

ஊர் வளர்ச்சி நிர்வாகக் கிளைகளில் பணிபுரியும் தொழில் நுட்பமில்லா இதர பணியாளர்களின் பணி விதிகளைச் சீரடையச் செய்யவும், எல்லா நிலுவைகளிலும் தேக்கத்தைப் போக்கவும், வேலை உயர்வில் அனைவருக்கும் சமவாய்ப்புகள் அளிக்கவும் ''ஒரு பணி விதிகள்'' அமைக்க அரசு முடிவு செய்து தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

**விவசாய வளர்ச்சியும், பொருளாதார மேம்பாடும் :**

தற்போது மத்திய அரசின் திட்டங்களாகிய ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டங்களும், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டங்களும், வறட்சிப் பகுதி திட்டங்களும் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் சிறு விவசாயிகளுக்கு 25 சதவிகிதமும், குறுநில விவசாயிகளுக்கும் விவசாயத் தொழிலாளர்கட்கும் 33 1/3 சதவிகிதமும் மானியமாக அளிக்கப்படுகின்றன.

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 161 வட்டாரங்களும், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 166 வட்டாரங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு, திட்டங்கள் செயலாற்றப்பட்டு வருகின்றன.

மொத்தத்தில் இவ்விரண்டு திட்டங்களின் மூலம் சுமார் 7 கோடி ரூபாய் மானியமாக வழங்கி 1,40,000 குடும்பங்களுக்குப் பொருளாதார மேம்பாட்டுக்கான வழிவகைகள் செய்து தரப்பட்டுள்ளன. கிராம மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காகக் கிராமங்களின் அடிப்படைத் தேவைகளான பாதைகள் அமைத்தல், குடிதண்ணீர் வசதி அமைத்துக் கொடுத்தல் போன்றவைகளும் செய்யப்பட்டு வருகின்றன.

**கல்விக் கட்டடங்கள் அமைத்தல் :**

ஒன்றியங்களில் பள்ளிக்கூடங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் இல்லாத கிராமங்களின் எண்ணிக்கை 2848. நடப்பாண்டில் 500 பள்ளிக் கட்டடங்கள் கட்ட ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 1 கோடி. சொந்தக் கட்டடங்கள் கொண்ட பள்ளிகளின் எண்ணிக்கை 18,939.

ஒன்றியப் பள்ளிக்கூடக் கட்டடங்கள் கட்டுவதற்கு 1975, 1976, 1977-ஆம் ஆண்டுகளில் சுமார் 53 இலட்சம்தான் செலவு செய்யப்பட்டு இருந்தது. இது சென்ற ஆண்டு 85 இலட்சமாகவும், இந்த ஆண்டு ஒரு கோடியாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

கிராமங்களில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஹையர் செகண்டரி பள்ளிக்கூடக்

# உயர்ந்தோங்கும் ஊரக வளர்ச்சி





கட்டடங்களுக்கு உதவி செய்திட ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து ரூ. 20,000 வரை வழங்கிட அனுமதி அளிக்கப்பட்டு இருக்கிறது.

**குடிநீர் வசதியும், வேலைவாய்ப்பும் :**

குடிநீர்த் தட்டுப்பாடுகளைக் களைவதற்கு இவ்வரசு இரண்டாண்டுக் காலக் கட்டத்திற்குள் கட்டி முடித்துள்ள குடிநீர்த் தேக்க கட்டடங்களின் விவரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் | 454 |
| மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் | 440 |
| தானியங்கு அழுத்தத் தொட்டி | 91 |
| கைக் குழாய்கள் | 3034 |
| திறந்த கிணறுகள் | 1488 |
| ஆழ் குழாய்க் கிணறுகள் | 602 |
| ஆழப்படுத்தப்பட்ட குடிநீர்க் கிணறுகள் | 512 |

கிராம வேலைத் திட்டங்கள் செயல்படுத்துவதன் மூலமாகச் சராசரி ஆண்டொன்றுக்கு 40,000 பேருக்கு வேலை வாய்ப்புகள் தர ஏதுவாகிறது.

ஆண்டுதோறும் உயர்கிறது நிதி ஒதுக்கீடு. கிராமப்புற வளர்ச்சிக்கு ஒதுக்கப்படும் நிதிகளின் விவரம் ஆண்டுதோறும் உயர்ந்து கொண்டே வருகிறது.

| ஆண்டு | ஊராட்சி வளர்ச்சியின் மீது ஆகும் செலவினத்தின் மொத்தம் (ரூபாய் இலட்சத்தில்) | வட்டாரம் ஒன்றுக்கு அளிக்கப்படும் சராசரி ஒதுக்கீடு |
|---|---|---|
| *1976—77* | *1,16,25.40* | *31.08* |
| *1977—78* | *1,32,55.30* | *35.44* |
| *1978—79* | *1,43,07.36* | *38.25* |

**சமுதாயக் கிணறுகளும், ஆற்று நீரேற்றுத் திட்டமும் :**

தமிழ்நாட்டில் தென்னார்க்காடு, திருநெல்வேலி, சேலம், இராமநாதபுரம், திருச்சி, தஞ்சாவூர், தர்மபுரி, புதுக்கோட்டை ஆகிய எட்டு மாவட்டங்களில் மொத்தம் 511 சமுதாயக் கிணறுகள் செயல்பட்டு வருகின்றன. இதனால் பயன்பெறும் உழவர்களின் மொத்த எண்ணிக்கை 5,786. பயிர் செய்யப்படும் மொத்த நிலப்பரப்பு 18,728.56 ஏக்கர்.

**சமூகக் கல்வி :**

கிராமங்களில் வயது வந்தோர் நாட்டு நடப்புச் செய்திகளின்மீது அவரவர்களுக்குள் விவாதிக்கும் நிலையமாக நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரை 13,259 சமூகக் கல்வி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**மகளிர் நலம் :**

ஓர் ஊராட்சிக்கு ஒரு மகளிர் மன்றம் என்ற விகிதத்தில் ஓர் ஒன்றியத்திற்கு 30 மகளிர் மன்றமும் நிறுவப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. தற்போது 12,308 மகளிர் மன்றங்கள் செயல்படுகின்றன.

**ஊட்டச்சத்துணவுத் திட்டம் :**

நடப்பு ஆண்டில் 38 ஊட்டச்சத்துத் திட்ட முடிவுற்ற ஒன்றியங்களும் 37 திட்டம் நடைமுறையிலுள்ள ஒன்றியங்களும் ஆக 75 ஒன்றியங்களில் ஊட்டச்சத்துணவுத் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காகக் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை விவரங்களாவன1977-78 ரூ. 26.73 இலட்சம், இதில் சுமார் 10.38 இலட்சம் நடுவண் அரசின் தனி மானிய உதவியாகும். 1978-79-ஆம் ஆண்டு ஒதுக்கீடு ரூ. 39 இலட்சம். இவற்றில் நடுவண் அரசின் பங்கு ரூபாய் 15.02 இலட்சமாகும்.

**சிறு சுகாதார நிலையம் :**

சிறு ஆரம்பச் சுகாதார நிலையம் ஏறத்தாழ 1000 குடும்பங்கள் அல்லது 5000 மக்களுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட சுகாதாரப் பாதுகாப்பு வழங்கும். சென்ற ஆண்டு 49 நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வாண்டு 24 நிலையங்கள் திறக்கப்பட்டு, மொத்தம் 73 நிலையங்கள் நடைபெற்று வருகின்றன.

**சாண எரிவாயுத் திட்டம் :**

ஒரு சாண எரிவாயுக் கூடத்தை நிறுவ ஏறத்தாழ 4,000 ரூபாய் ஆகிறது. இந்திய அரசு 20 சதவீத உதவித் தொகையை ஒவ்வொரு கூடம் அமைப்பதற்கு அளிக்கிறது. 75 சதவீத உதவித்தொகை அரிசனங்களுக்கும்

மலைச் சாதியினருக்கும் அளிக்கப்படுகிறது. எரிவாயுக் கூடங்களை நிறுவுவதில் அரசு வங்கிகளும், கூட்டுறவுத் துறை வங்கிகளும் கடன் வழங்கி வருகின்றன.

1978-79-ஆம் ஆண்டில் மட்டும் சாதனை 1200 எண்ணிக்கையை எட்டியுள்ளது. இது தவிர ஒன்றியங்களில் பெரிய அளவில் சமுதாய சாண எரிவாயுச் சாதனங்களை அமைத்து கொடுக்கவும் கருத்து ஒன்று செயல் வடிவம் பெற்று வருகின்றது.

**கிராம முழு வளர்ச்சித் திட்டம் :**

இத்திட்டத்தைச் செயல்முறைப்படுத்த தமிழ்நாட்டிலுள்ள நெல்லை மாவட்டம் மேலநீலிதநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தி லுள்ள (1) சின்னக்கோயிலான் குளம் (2) பெரிய நடுவக்குறிச்சி (3) சிறிய நடுவக்குறிச்சி (4) பட்டாடைக்கட்டி ஆகிய கிராமங்களை தேசிய வேளாண்மைக்குழு தேர்ந்தெடுத் தது. மூன்று கடைசிக் கிராமங்கள் ''கிராம தானக் கிராமங்களாகும்''. சின்னக் கோயி லான் குளம் கிராமதானக் கிராமமாக அறி விக்கப்பட்டு உள்ளது.

மாநில அரசு மூலமாக இத்திட்டம் இந்திய அரசால் செயல்படுத்தப்பட்டு வரு கிறது.

இதுகாறும் இத்திட்டச் செயலாக்கத் திற்கு ரூ. 14.35 இலட்சம் மைய அரசு ஒப் பளிப்புச் செய்துள்ளது. இத்திட்டத்தால் பல தரப்பட்ட வருமானங்களை உடைய 1,102 குடும்பங்கள் பயனடைந்து வருகின்றன.

**உழைப்புக்கு உணவுத் திட்டம் :**

உழைப்புக்கு உணவுத் திட்டம் மாநில அரசால் நடப்பாண்டில் செயல்படுத்தப்படு கிறது.

நீர்ப்பாசன, மண் பாதுகாப்பு, சாலைகள், பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல் இன்னும் இது போன்ற இதர பணிகளில் ஈடுபடும் தொழி லாளர்களுக்கு அளிக்கப்படும் கூலியின் ஒரு பகுதி அரிசியாக அளிக்கப்படும். இது மத்திய அரசால் இலவசமாக வழங்கப்படும். இதுவே இத்திட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாகும்.

# வேளாண்மை விற்பனைத் துறையின் அரிய பணிகள்



விளைபொருள் விற்பனையின் முக்கியத்துவத்தை உணர்ந்து இதற்கெனத் தனித்தியங்கும் துறையின் அவசியத்தைக் கருதி, தமிழக அரசு சரியாக வேளாண்மை விற்பனை இயக்கு நரகத்தைத் தோற்றுவித்தது.

உற்பத்தியாளர்கள், தம் விளை பொருளை மிக நல்ல முறையில் இலாபகாமாக விற்பதற்குத் தேவையான ஒழுங்குமுறை விற் பனைக் கூடங்களின் எண்ணிக் கையை 140லிருந்து 187 ஆக உயர்த்தியுள்ளனர். இவற்றின் பயன்களைச் சிற்றூர்களிலும் கிட்டச் செய்ய 33 இடங்களில் துணை விற்பனைக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன.

இதன் விளைவாக 3,30,000 டன் வரத்துக்கள் 4,77,400 டன்களாக உயர்ந்துள்ளது. இம் முன்னேற்றங்கள் தற்காலிகமான தாக இல்லாமல், நிரந்தர அடிப் படையில் இருக்கச் செய்யவும், விற்பனைக் கூடங்களை நவீனப் படுத்தவும் தற்பொழுது 77 விற் பனைக் கூடங்களில் சொந்த நிலங்களில் இயங்கி வருகின்றன. இவற்றின் மூலம் 25 இலட்சத் திற்கும் அதிகமான விவசாயிகள் நேரடியாக ஒழுங்குமுறை விற் பனைக் கூடங்களின் மூலம் பய னடைந்து வருகின்றனர்.

விற்பனைக் குழுக்களின் ஆண்டு வருமானத்தை 2.59 கோடியி லிருந்து ரூ.2.96 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் பதினோரு மாவட்டங் களில் விற்பனைக் குழுக்கள் இருந்து வந்தன. தற்பொழுது சேலம், புதுக்கோட்டை மாவட் டங்களையும் சேர்த்து பதின் மூன்று மாவட்டங்களில் விற் பனைக் குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன. தமிழ்நாட்டில் முதன் முறையாக 25 விற்பனைக் கூடங்களின் வளர்ச்சிக்காக ரூ. 37.5 இலட்சம் உதவி பெறப் பட்டுள்ளது.

நுகர்வோருக்குத் தரமான தூய்மையான கலப்படமற்ற பண்டங்களை வழங்கச் செய்ய 13 அக்மார்க் ஆய்வுக்கூடங்களை, 20 அக்மார்க் ஆய்வுக் கூடங் களாக அதிகரிக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு சுமார் 4.3 இலட் சம் குவிண்டால் உணவுப் பண் டங்கள் ''அக்மார்க்'' தரம் பிரிக் கப்பட்டுள்ளன.

விவசாயிகள் தம் விளை பொருள்களின் தரத்திற்கேற்ற நியாயமான விலையைப் பெறு வதற்கேதுவாக 52 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் இருந்த வணிகமுறைத் தரம் பிரிப்பது தற்பொழுது 77 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ஆரம் பிக்கப்பட்டுள்ளன.

மாநிலத்திலுள்ள அனைத்து ஒழுங்குமுறை விற்பனைக் கூடங் களையும், மேம்படுத்துவதற்கும், புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள வற்றிலும், அனைத்து வசதி களும் ஒருமித்துக் கொண்டு வர வும், விளைபொருள் ஈட்டுக் கடன் பெறுவதற்கேற்ற வகை யில் சேமிப்புக் கிடங்குகள், வங்கிகள், போதுமான ஏலக் கொட்டகைகள், ஓய்வுக் கூடங் கள், பணப்பட்டுவாடா அறை கள், உணவு விடுதிகள், தபால் அலுவலகங்கள், காய்வுக் குளங் கள், தண்ணீர், மின்வசதி, கால் நடை மருத்துவ வசதிகள் ஆகிய வைகளுக்காகவும் உலக வங்கி யின் நிதி உதவி பெறுவதற்குச் சுமார் 102 கோடி ரூபாய்க்கான வளர்ச்சித் திட்டம் தீட்டப்பட் டுள்ளது.

# விடுதலைப்போராட்ட வீரர்களுக்கு உதவிகள்




விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், முன்னாள் இந்தியத் தேசிய இராணுவ வீரர்களுக்கும், அவர்களின் குடும்பத்தார்க்கும் இன்றைய அரசு அளித்துவரும் உதவிகள் அளவற்றவைகளாகும்.

முன்பு ஒருவர் ஓய்வூதியம் பெற்றிட, அவரது உயர்ந்தபட்ச மாத வருமானம் ரூ. 100 என இருந்து வந்தது. அதனை, இவ்வரசு மறுபரிசிலனை செய்து இதைத் தளர்த்துவதனால் மேலும் பல விடுதலைப் போராட்ட வீரர்களும், முன்னாள் தேசிய இராணுவ வீரர்களும், அவர்களின் குடும்பத்தினரும் ஓய்வூதியம் பெறும் வாய்ப்புக் கிட்டும் வகையில், உயர்ந்தபட்ச மாத வருமான வரம்பை ரூ.125 ஆக உயர்த்தி ஆணை பிறப்பித்தது. இதனைத் தொடர்ந்து ஏறக்குறைய 2,500க்கு மேலான விடுதலைப் போராட்ட வீரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரப்பெற்று அவை பரிசிலிக்கப் பட்டு வருகின்றன.

மத்திய அரசு வழங்கி வரும் ஓய்வூதியமான ரூ. 200 பெற்று வரும் ஓய்வூதியம் பெறுபவர்க்கு, மாநில அரசின் ஓய்வூதியம் முன்னர் நிறுத்தப்பட்டு இருந்தது. இதனை இவ்வரசு மறுபரிசீலனை செய்து, மத்திய ஓய்வூதியம் பெற்று வருவோருக்கும் மாநில ஓய்வூதியம் வழங்கிட அனுமதித்து உத்தரவிட்டது.

இந்தப் புதிய ஆணை சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் ஊக்கத்தினை அளித்திடுவதாகும்.

நாட்டு விடுதலைப் போராட்டத்தில் தியாக உணர்வோடு ஆறுமாதத்துக்கும் குறையாமல் சிறை சென்றோர் மத்திய அரசிலிருந்து ரூ. 200ம், தமிழக அரசிலிருந்து ரூ. 75-ம் என மொத்தம் ரூ. 275- பெறும்போது, மூன்று மாதங்களுக்கு மேல் ஆறுமாதங்களுக்குள்ளான சிறைத்தண்டனைப் பெற்று, தமிழக அரசு ஓய்வூதியம் ரூ. 75 மட்டும்பெறும் தியாகிகளுக்கு மேலும் உதவி அளித்திடும் வகையில், அதனை மாதம் ரூ. 100 ஆக உயர்த்தியுள்ளது. இது, தமிழக ஓய்வூதியம் மட்டும் பெறுவோருக்கு அரசு அளித்துள்ள தனி உதவியாகும்.

இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றிய பால சேனாவைச் சேர்ந்தவர்களுக்கு உதவித் தொகை 1973 வரை வழங்கப்பட்டு, பின் மத்திய அரசினால் நிறுத்தப்பட்ட நிலையை நமது மாநில அரசு பரிவுடன் மறுபரிசிலனை செய்தது. அப்படிப்பட்டவர்களுக்கு மீண்டும் உதவித் தொகை வழங்கிட அண்மையில் ஆணையிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

காலஞ்சென்ற தலைவர் திரு. காமராசர் அவர்களின் தங்கை திருமதி நாகம்மாவுக்கு ஏற்கெனவே அளிக்கப்பட்டு வந்த மாத உதவித்தொகை ரூ. 250 இப்போது ரூ. 500 ஆக வழங்கப் பட்டு வருகிறது. அதுபோல விடுதலைப் போராட்ட வீரரும் முன்னாள் உள்துறை அமைச்சருமான திரு. கக்கன் அவர்களுக்கு மாத உதவித் தொகையாக ரூ. 500ம் மற்றும் அரசு மருத்துவ மனைகளில் அமைச்சர் தரத்தில் மருத்துவ வசதியும், வாடகையின்றிக் குடியிருப்பும், அரசுத் துறைப் பேருந்துகளில் கட்டணமின்றிப் பயணம் செய்ய வசதியும் வழங்கப்படுகின்றன.

மறைந்த விடுதலைப் போராட்ட வீரர் ஆரணி திரு. சுப்பிரமணி சாஸ்திரியார் அவர்களின் மருமகள் திருமதி எம். வீ. சீதாலட்சுமி அவர்களின் வாழ்க்கைச் சிக்கல் தீர அவர்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து சிறப்பு நேர்வாக ரூ. 2,000 அரசு மூலம் வழங்கப்படுகிறது.

பெருந்தன்மையான இத்தகைய உதவிகளின் மூலம், விடுதலைப் போராட்ட வீரர்களின் நலன்களைப் பரிவுடன் கவனித்து சுதந்திரம் பெற்றிட உறுதுணையாக இருந்தவர்களுக்கு நன்றி செலுத்தினோம் என்ற திருப்தியை மட்டுமல்ல, பெருமையையும் பெறுகின்றது இவ்வரசு!

## நரம்பியல் துறையில் புதிய சிகிச்சைக் கருவி


சென்னைப் பொது மருத்துவ மனையிலுள்ள நரம்பியல் துறையில் (Department of Neurology) ரூ.40 இலட்சம் செலவில் மனித மூளையிலுள்ள நரம்புகளில் ஏற்படும் கோளாறுகளை உடனுக்குடன் படம் பிடித்துக் காட்டித் தகுந்த சிகிச்சை அளிக்க உதவும் ''நவீன ஊடுருவிக் கருவி (Scanner) ஒன்றினை வாங்க அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

பொதுவாக, ஏழ்மை நிலையிலுள்ள மக்கள் அதிகம் வரும் சென்னை அரசு மருத்துவமனையில் இக்கருவியினைப் பொருத்துவதனால் சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள மக்களும் நவீன விஞ்ஞான ரீதியான மருத்துவ வசதிகளைப் பெறமுடியும்.

ஆயிரக்கணக்கானோருக்கு வேலை வாய்ப்பும், அரசுக்கு அதிக அளவில் வருமானமும் தருகின்ற திரைப்படத்துறை, மக்களிடையே செய்திகளை எளிதில் பரப்பும் சக்தி மிக்கதாகும்.

ஆகவே ஏழை எளியோர் நெஞ்சில் அதன் மூலம் நல்ல பல கருத்துக்கள் விதைக்கப்பட வேண்டும் என்று இந்த அரசு கருதுகிறது. ஆகையால், குடிப்பழக்கத்தால் விளையும் கேடுகளை விளக்கியும், தேசிய ஒருமைப்பாடு, நாட்டுப் பற்று ஆகியவற்றை வலியுறுத்தும் தரமான படங்களைத் தயாரிக்கும் படத் தயாரிப்பாளருக்கு அரசு, இலட்சம் ரூபாய் பரிசு வழங்கிச் சிறப்பிக்கிறது.

அதுமட்டுமல்ல; சிறந்த படங்கள், சிறந்த நடிக-நடிகையர், சிறந்த தொழில் நுணுக்க வல்லுநர்கள் ஆகியோரைத் தேர்ந்தெடுத்து அரசு பரிசளித்துக் கௌரவிக்கிறது.



அரசின் வருமானம் குறையாமல் இருக்கவும், திரைப்படத் துறையினர் பெரும்பயன் பெறவும் வழி வகுக்கப்பட்டது.

திரைப்படம், சமூகத்தில் முக்கியப் பங்கு வகிப்பதால் - ஏழை எளிய மக்கள் குறைந்த செலவில் பார்க்கும் வகையில் கட்டணம் குறைக்கப்பட்டது.

திரையரங்குகள் கட்டுவதற்கான விதி முறைகள் தளர்த்தப்பட்டதால், பல புதிய திரையரங்குகள் உருவாக்க வழி ஏற்பட்டது. திறந்த வெளித் திரையரங்குகள்அமைத்திட அரசு ஊக்கமும் உதவியும் அளித்து வருகிறது.

திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரியின்- செய்திப் படப் பிரிவின் பணிகள் செம்மையுற அமைவதற்காகப் பழம்பெரும் திரைப்பட இயக்குநர் திரு. ப. நீலகண்டன் அவர்கள் அவற்றின் தலைவராக நியமிக்கப்பட்டார்.


# திரைப்படத்துறை வளர்ச்சிக்கு அரசின் உதவிகள்

வெளிப்புறக் காட்சிப் படப்பிடிப்பிற்காக நான்கைந்து துறையினரிடம் அனுமதி பெற வேண்டும் என்றிருந்த நிலையை மாற்றி செய்தித் துறை இயக்குநரிடத்தில் அனுமதி பெற்றால் போதும் என்ற எளிதான நிலை உருவாக்கப் பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் உள்ள டூரிங் திரைப்பட அரங்குகளுக்கு இரண்டேகால் ஆண்டு மட்டுமே அனுமதி என்றிருந்த முறையை மாற்றி அதனை மூன்று ஆண்டுகளாக நீட்டித்துள்ளது, இந்த அரசு. டூரிங் திரையரங்குகள் தீப்பிடிக்காத கூரையோடு அமைந்திட வேண்டும் எனவும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

கேளிக்கை வரி விதிப்பிலும் சிறப்பானதொரு சீர்திருத்தம் இவ்வரசால் கொண்டு வரப் பட்டது. 1977 டிசம்பர் 26 முதல், ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சிகள் மற்றும் இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை நகராட்சிகள் ஆகியவற்றிலுள்ள திரையரங்குகளுக்கு அந்தந்த அரங்கின் மொத்த இருக்கைகளின் வசூல் அடிப்படையில் ஒவ்வொரு காட்சிக்கும் மொத்தமாக வரிவிதிக்க அரசு முடிவெடுத்தது.

இப்படி, 'காம்பவுண்டிங் முறை' மூலம் வரி செலுத்தப்படும்போது, ஊழல் ஒழியவும்,



நடிப்புக் கல்லூரியில் சேருவோருக்கான விதிமுறைகள் தளர்த்தப்பட்டன.

தமிழகத்தில் உள்ள பல திரையரங்குகள் ஆண்டு முழுவதும் ஆங்கிலம், இந்தி போன்ற வேற்றுமொழிப் படங்களையே திரையிட்டு வரும் நிலை இருந்து வந்தது. தமிழ் வளர்ச்சியிலும், தமிழ்த் திரைப்பட வளர்ச்சியிலும் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு, தமிழகத் திரையரங்குகள் அனைத்திலும் ஓராண்டுக்கு 12 வாரங்கள் தமிழ்ப்படம் திரையிடப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பித்துள்ளது.

# அரசு அலுவலர்களுக்கு சலுகைகள்



தமிழகத்தில் உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையின் கீழ் பணி புரியும் ஊதியக் குழுவை இந்த அரசுதான் நியமித்தது.

இந்த மூன்றாவது ஊதியக்குழு, 76 வகையாக இருந்த ஊதிய விகிதங்களை 20 ஆகக் குறைத்துச் சீரமைத்தது.

ஒருவர் ஒரே பதவியில் பத்தாண்டுக் காலம் பணிபுரிந்தால், அந்த அலுவலருக்குத் தானாகவே பதவி உயர் ஊதியம் வழங்கப்படும்.




மத்திய அரசு கைக்கொள்ளும் முறையினை ஒட்டியும் மாநில அரசின் நிதி நிலையினைக் கருத்திலே கொண்டும் வாழ்க்கைச் செலவுப் புள்ளியை அடிப்படையாகக் கொண்டு தமிழக அரசு, ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு அகவிலைப்படி அளிக்க முடிவு செய்தது.



அரசு ஊழியர்களுக்கு மிதிவண்டி (Cycle) வாங்குவதற்காக வழக்கமாகக் கொடுக்கப்பட்டு வந்த முன்பணம் ரூ. 400-லிருந்து ரூ. 600-க்கு உயர்த்தப்பட்டுள்ளது.

அரசு ஊழியர்களின் ஓய்வுபெறும் வயது 55-லிருந்து 58 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.



அரசு அலுவலர்களின் பிள்ளைகள் உயர் கல்லூரிக் கல்வி பெறுவதற்கு வட்டியில்லாக் கடன் முன்பணம் வழங்கும் திட்டம் அமல் செய்யப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களில் அரசுச் சார்புடைய வீடுகளில் வசிக்கும் ஊழியர்களின் ஊதியத்திலிருந்து வீட்டு வாடகைக்காக 10 சதவிகிதம் பிடிக்கப்பட்டு வந்ததை 5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

அரசு ஊழியர்களின் குறைந்த அளவு மாதாந்தர குடும்ப ஓய்வூதியத் தொகையை ரூ. 50-லிருந்து ரூ. 100 ஆக தமிழ்நாடு அரசு உயர்த்தியுள்ளது. இது, கடந்த ஏப்ரல் முதல் அமலாக்கப்பட்டுள்ளது.

அரசு ஊழியர்களின் வருங்கால சேமிப்பு நிதிக்கு 7½ சதவீதம் வட்டி தரப்படுகிறது. இப்போது, முதல் 25 ஆயிரம் ரூபாய் வரையில் இந்தப் பணத்திற்கு 8 சதவீத வட்டி அளிக்கப்படும்.

தானாக ஓய்வு பெற விரும்பும் ஊழியர்களுக்கு மருத்துவப் பரிசோதனை எதுவும் இன்றி அவர்களுக்குச் சேர வேண்டிய ஓய்வு ஊதியத்தின் மொத்தத் தொகையில் மூன்றில் ஒரு பங்குப் பணத்தை உடனடியாக அளிப்பது என்றும் அரசு முடிவு செய்திருக்கிறது.

பத்து ஆண்டுகளுக்குள் கட்டப்பட்ட வீடுகள் வாங்குவதாக இருந்தால் தான் கடன் கொடுக்கப்படும் என்பது மாற்றப்படுகிறது. இனி முப்பது ஆண்டுகளுக்குள் கட்டப்பட்ட முதல்தரமான வீடுகளுக்கும் கடன் கொடுக்கப்படும்.

தமிழரசு
சந்தா விவரம்
ஓர் ஆண்டு ரூ. 12-00
அரையாண்டு ரூ. 6-00



விழாவையொட்டி தமிழ்நாட்டின் 16வது மாவட்டமாக "பெரியார் மாவட்டம்" அமைக்கப்பட்டது.
பெரியார் மாவட்டம்
சத்திய மங்கலம்
பவானி
பெருந்துறை
தாராபுரம்
தொழில் வளர்ச்சி பெற வேலை வாய்ப்பினைப் பெருக்க மாவட்ட தொழில் மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
அரிசனக் குடும்பங்களில் இறந்து போகும் நபர்களுக்கு ஈமக்கடன் செய்வதற்கென நபர் ஒருவருக்கு ரூ 50 வீதம் நிதி உதவி வழங்கும் புதிய திட்டம் 1978 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
வாழ்க்கையில் வசதியற்ற வயதான தமிழ் அறிஞர்களுக்கு மாதம் ரூ 250 உதவித் தொகை வழங்கப்படுகிறது.



1979 மே திங்களில் 40 கோடி ரூபாய் அளவில் அரசுக் கடன்களிலும் கூட்டுறவுக் கடன்களிலும் பல்வேறு சலுகைகளை விவசாயிகளுக்கு அரசு வழங்கியுள்ளது.
கிராம மக்களுக்கு மருத்துவ வசதிகள் எளிதில் கிட்டும் வகையில் நடமாடும் மருத்துவக் குழுக்கள் என்ற புதிய திட்டம் உருவாக்கப்பட்டது.
நடமாடும் மருத்துவமனை
அரசு அலுவலர்களது பிள்ளைகளின் உயர் கல்விக்கு வட்டியில்லா முன்பணம் வழங்கப்படுகிறது.
கட்டாயக் கொள்முதல் முறை அடியோடு ஒழிக்கப்பட்டு விட்டது.


மீட்டர் இல்லா குடிசைகளுக்கு மின்விளக்குக்கு இணைப்பு வழங்கப்படுகிறது. இதற்கு மாதம் மின் கட்டணம் ரூ 2½ தான்
இது வரை போக்குவரத்து வசதி இல்லாத கிராமங்களுக்கு பேருந்து வசதி செய்து கொடுக்கப்படுகிறது.
அத்தியாவசியப் பண்டங்கள் நியாய விலையில் கிராமப்புற மக்களுக்கும் கிடைக்க 'கிராமக் கடைத் திட்டம்' செயல்படுத்தப்படுகிறது.
பெண்கள் வீட்டில் இருந்தவாறு சிறு கைத் தொழில்களில் ஈடுபடும் திட்டம் 25 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப் படுகிறது.

# வேலை வாய்ப்புப் பயிற்சி நிறுவனம்

தொழில் வளர்ச்சியடைவதற்கு ஏற்ப தொழில் நுட்ப பயிற்சி பெற்ற கைவினைஞர்கள் அதிகமாகத் தேவைப்படுகின்றனர். இத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் 1967-68 ஆண்டுத் திட்ட இறுதி வாக்கில் தமிழகத்தில் 31 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் இருந்தன. அவைகளில் பயிற்சிப் பெற ஒப்பளிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கை 13,112 ஆகும். 1968-69 முதல் 1976-77 வரை உள்ள காலத்தில் எந்தவித புதிய அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தவோ அல்லது புதியதாக அதிக இருக்கைகளோ (ஏற்கனவே உள்ள 31 தொழிற் பயிற்சி நிலையங்களிலும்) ஏற்படுத்தப்படவில்லை.

கம்மியர் (பொது மின்னணுவியல்) துறையில் பயிற்சி பெற்ற கைவினைஞர்கள் பெருகிவரும் உடனடித் தேவைகளைப்பூர்த்தி செய்ய, 1977-ம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் 16 பயிற்சியாளர்கள் கொண்ட தொழிற் பயிற்சிப் பிரிவு ஒன்று அடையாறு மின் அணுத்தொகுதி வளாகத்தில் தனியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப் பயிற்சிப் பிரிவில் மொத்தம் 32 பேர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

**தொழில்களைப் பலதிறப்படுத்தும் திட்டம் :**

கோயம்புத்தூரிலுள்ள தொழிற் பயிற்சி நிலையத்தில் பொறிப் பகுதி பொருத்துபவர் பிரிவில் 32 இருக்கைகளுக்குப் பதிலாக கம்மியர் (குளிர்ப்பதனம் தட்ப வெப்ப நிலையைக் கட்டுப்படுத்துதல்) பயிற்சிஒன்று 1.8.1978-ல் தொடங்கப்பட்டது. இதில் 1.8.1978ல் 16 பேர்கள் சேர்க்கப்பட்டு பயிற்சி பெற்று வருகின்றனர். மேலும் 16 பேர்கள் 1.8.1979ல் சேர்க்கப்பட்டனர்.

நுண்ணிய கருவிகளை அதிகமாகப் பயன்படுத்துவதையும் தொழிலியலில் அடைந்து வரும் மாற்றத்தையும் கருத்தில் கொண்டு ஐக்கிய நாடுகள்வளர்ச்சித் திட்டம்-அனைத்து நாடுகள் தொழிலாளர் ஸ்தாபனம் ஆகியவற்றின் உதவியுடன் அம்பத்தூரில் உள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் உயர்நிலை தொழில் பழகுவோர் • பயிற்சிப் பாடப்பிரிவு தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், இந்தியதர நிர்ணயம், பொறியியல் வரைபடங்கள் படித்தல் மற்றும் முன்னேற்ற பற்றவைப்பு கருவி மற்றும் அச்சு செய்பவர், இயந்திரம் மற்றும் மின்சாரச் சாதனங்கள் பராமரிப்பு ஆகிய தொழிற் பயிற்சிப் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இது வரை பல்வேறு தொழிற் சாலைகளிலிருந்து இப்பயிற்சிக்கென அனுப்பப்பட்ட 228 தொழிலாளர்கள் இத்தொழில் பயிற்சிப் பிரிவில் பயிற்சி பெற்றுள்ளனர்.

சிறந்த முறையில் மேற்பார்வையிட்டு கட்டுப்பாடு, ஆய்வு செலுத்துவதில் மூலம் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சியின் திறனைச் செம்மையாக்க 1978-79ஆம் ஆண்டில் திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் மூன்று வட்டார துறை இயக்குநர் அலுவலகங்கள் அமைக்கப்பட்டன.

1978-ம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் முதல் நாளிலிருந்து, பொருத்துபவர், மின் கம்பியாள், பற்றவைப்பவர் முதலிய பயிற்சி பிரிவுகளில் ஏற்கனவே குறைக்கப்பட்ட இடங்களில் 500 இடங்கள் மீண்டும் கொண்டு வரப்பட்டன.

**அனைத்திந்திய ஆண்டு திறனாய்வுப் போட்டியில் முதன்மையிடம் :**

இம்மாநிலத்தில் தொழிற் பயிற்சி நிலையங்களில் அளிக்கப்படும் பயிற்சியின் தரம் மிகச் சிறப்பானதொன்று. 1978-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் நடந்த பதினைந்தாவது அகில இந்திய திறனாய்வுப்போட்டியில் கடைசல் மற்றும் பற்றவைப்பு பிரிவுகளில் நமது பயிற்சியாளர்கள் முதன்மை இடம் பெற்று இம்மாநிலம் 8-வது தடவையாக முதன்மை இடத்தைப் பெற்றுள்ளது. குடியரசுத் தலைவரின் சுழற்கேடயம் 8-வது முறையாக பெற்றுள்ளது.

1977-ம் ஆண்டு வரை, 18 இயந்திர தொழில்களில் பயில்வதற்கு அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் சேர கல்வித் தகுதி பள்ளியிறுதி ஆண்டுக்கு இரண்டாண்டுகள் குறைவு ஆகும். பயிற்சியின் தரத்தை மேம்படுத்துவதற்கு மேற்சொன்ன தொழில்களில்சேர்ந்து பயில கல்வித் தகுதி பள்ளி இறுதி வரை படித்திருக்க வேண்டும் என உயர்த்தப்பட்டது.

மேலும், கணக்கு மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் குறைந்த அளவு மதிப்பெண்களும் நிர்ணயிக்கப்பட்டு 1978-ம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டன.

**ஊரக இளைஞர் பயிற்சித் திட்டம்**

தமிழக அரசு ஆணை 1177 (தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை) தேதி 24.7.1979-ன்படி, ஊரக இளைஞர்களுக்கு பல்வேறு தொழில்களில் குறுகிய காலப்பயிற்சித் திட்டம் ஒன்றிற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் 14.9.1979 முதல் கீழ்க்கண்ட தொழிற் பயிற்சி நிலையங்களில் செயலாக்கப்பட்டுள்ளது.

அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள், வேலூர், திருவண்ணாமலை, கடலூர், உளுந்தூர்பேட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், அரியலூர், புதுக்கோட்டை, திண்டுக்கல், தேனி, கூனூர், மேட்டூர் அணை, கோயம்புத்தூர், ஈரோடு, தாராபுரம், ஒசூர், தூத்துக்குடி, திருச்செந்தூர்.

இத்திட்டம் கிராமப்புறக் கைவினைஞர்களிடையே அவர்களது கைத்திறனை உயர்த்தி அவர்களது தொழிலை இன்னும் செவ்வனே செய்ய உதவி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது வரையில் கைத்திறனில் மேம்பாடு அடையாதவர்களுக்கு கைத்திறன் அளிப்பதையும் இத்திட்டம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமப்புறப் பகுதிகளில் எந்தத் தொழில்களில் கைத்திறன் மேம்பாட்டைச் செய்ய வேண்டுமோ, அந்தத் தொழில்களில் கைத்திறன் அதிகரிக்கச் செய்வதையும், அதன் மூலம் திறமைமிக்க கைவினைஞர்கள் நகர்புறச் சேரிகளுக்குக் குடிபெயர்வதைத் தடுத்து, அவரவர்களது கிராமங்களிலேயே தங்கிதொழில் புரிவதை ஊக்குவிப்பதையும் அடிப்படையாகக் கொண்டது.

# பணியாளர் நிர்வாக சீர்திருத்தம்

அடிப்படை விதி 56 (டி) பிரிவின்படி, 25 ஆண்டுகள் பணிமுடித்த அல்லது 50 வயது நிறைந்த அரசு ஊழியர் மூன்று மாத அறிவிப்பு கொடுத்து தன் விருப்பப்படி ஓய்வு பெறலாம் என்றிருந்த விதியினைத் திருத்தி, 20 ஆண்டுகள் மட்டுமே ஓய்வூதியம் பெறுவதற்குரிய பணி செய்திருப்பின் அவர் தம் விருப்பப்படி ஓய்வு பெறலாம் என அரசு ஆணை பிறப்பித்தது.

அரசு அலுவலர்க்கு ஈட்டிய விடுப்பில் அல்லது பணியில் இருக்கும்பொழுது தம் கணக்கிலுள்ள ஈட்டிய விடுப்பைக் காசாக்கும் சலுகை இருந்தது. பணியில் இருக்கும் பொழுது ஈட்டிய விடுப்பைக் காசாக்கும் திட்டம் இருப்பதால் ஈட்டிய விடுப்பில் இருக்கும்பொழுதும் இச்சலுகை தரவேண்டியதில்லை என்று மாநில கணக்காயர் தெரிவித்த கருத்தை ஒட்டி இச்சலுகை கைவிடப்பட்டது. மீண்டும் இப்பொழுது அரசு அலுவலர்க்கு ஈட்டிய விடுப்பில் இருக்கும்பொழுதும், தம் கணக்கில் உள்ள ஈட்டிய விடுப்பினைக் காசாக்கும் சலுகை வழங்கப்பட்டது.

அரசு அலுவலர் ஓய்வுபெறும்பொழுது, ஓய்வூதியம் மற்றும் அதற்கு நிகரான இறப்பு ஓய்வுக்காலப் பணிக்கொடைக்கான பிடித்தமின்றி, தம் கணக்கில் உள்ள ஈட்டிய விடுப்பினைக் காசாக்கும் சலுகை ஓய்வு பெற்றவர்களுக்கு மீண்டும் 1-10-78 முதல் அளிக்கப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழலுக்கெதிரான பிரச்சார இயக்கத்திற்கு இன்னும் அதிக ஊக்கமளிக்கும் வகையில் பொதுமக்கள், பத்திரிகைகள், துறை அளவிலான கண்காணிப்பு ஆகியவை ஒரு முகப்படுத்தப்பட்டுள்ளன.

ஒழுக்க கண்காணிப்பு இயக்குநர் அலுவலகத்தில், விசாரணை நடைமுறைகளைச் சீரமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் மூலம் விசாரணைகளையும், புலனாய்வுகளையும் விரைவாக முடிக்க இயலுகின்றது.




இந்த இயக்குநர் அலுவலகம், புலனாய்வு அமைப்பு என்ற முறையில் முக்கிய பங்கினை ஆற்றுவதுடன், லஞ்ச ஊழல் நடைபெறுவதைத் தடுக்கும் பணியிலும் தனது நாட்டத்தைச் செலுத்தி வந்துள்ளது. இம்மாநிலத்தில் எல்லா மாவட்டங்களிலும் உள்ள மாநில அரசுத்துறை அலுவலகங்களிலும், பொது நிறுவனங்களிலும் பொதுமக்களுடன் தொடர்பு ஏற்படுகிற இடங்களில் மாவட்ட ஆய்வுக் குழுக்கள் திடீர் சோதனைகள் நடத்துவதற்குரிய விரிவான திட்டம் ஒன்று, இந்த இயக்குநர் அலுவலகத்தின் ஆலோசனையின் பேரில், 1977 ஆகஸ்ட் முதற்கொண்டு செயல்படுத்தப்பட்டது.

அரசு அலுவலர்களின் ஓய்வு பெறும் வயது, 25-4-1979-க்கு முன்பு யார் யாருக்கு 55-ஆக இருந்ததோ, அவர்களனைவருக்கும் 58-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இறந்துபோன அடிப்படை ஊழியர்கள் குடும்பத்தின் வாரிசுதாரர் ஒருவர் அந்த அலுவலர் இடத்திலேயே பணிசெய்யத் தகுதி உள்ளவராயிருந்தால் அவரை நியமனம் செய்ய அறிவுரை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

''கடைநிலை ஊழியர்'' என்னும் பெயர் மாற்றப்பட்டு ''அடிப்படை ஊழியர்'' என்று அழைக்கப்படுவர்.

மூன்று ஊர்தி ஓட்டுனருக்கு ஒரு ஏவலாள் மற்றும் ஓட்டுநர் (Peon-Cum-Driver) என்னும் புதிய பதவி ஏற்படுத்தி அவர்களுக்கு மாதம் ரூ. 10 தனிப்படி வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

அரசுப் பணியில் சேருவதற்கான உச்ச வயது வரம்பை 26-லிருந்து 28 ஆக உயர்த்தி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# செய்தித்துறையின் சிறப்பான பணிகள்

பொதுத் தொண்டாற்றிப் பெருமை பெற்ற அறிஞர்கள், கவிஞர்கள், தேசியத் தலைவர்கள் ஆகியோருக்கு அரசின் சார்பில் விழா எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வகையில்-பேரறிஞர் அண்ணா, மூதறிஞர் ராஜாஜி, பெருந் தலைவர் காமராசர், பசும்பொன்முத்து ராமலிங்கத் தேவர், காயிதே மில்லத், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் ஆகியோரின் விழாக்கள் செய்தித்துறையின் சார்பில் அரசால் கொண்டாடப் பட்டன.

தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழா மாவட்டம்தோறும் சிறப்புற ஓராண்டுக் காலம் கொண்டாடப்பட்டது. சென்னையில் தந்தை பெரியார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் ஒலி-ஒளி காட்சி நடத்தப்பட்டது. அனைத்துக் கட்சித் தலைவர்களும் இதனைப் பாராட்டிக் கருத்துத் தெரிவித்தனர்.

நலிவுற்றிருந்த நாடகத் தமிழை நன்முறையில் வளர்ந்தோங்கச் செய்வதற்காக-தீண்டாமை ஒழிப்பு குறித்தும், மதுவிலக்கு குறித்தும் செய்தித் துறை மூலம் நாடகப் போட்டியொன்று வைக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து நாடகங்களுக்குத் தலா ஆயிரம் ரூபாய் பரிசளிக்கப்பட்டு அந்நாடகங்கள் நாடெங்கும் நடத்தப்பட்டன.



செய்தித்துறைக்கும், பத்திரிகையாளர்களுக்கும் இடையிலான உறவு பலவழிகளிலும் பலப்படுத்தப்பட்டிருக்கிறது. பத்திரிகை எழுத்தாளர் குடும்பங்களுக்கு உதவும் வகையில் 'பத்திரிகையாளர் உதவி நிதி' துவக்கும் திட்டமொன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

சென்னையில், பெருந்தலைவர் காமராசர் வாழ்ந்த இல்லத்தை அரசே வாங்கி 'காமராசர் நினைவு இல்ல' மாக்கிச் சிறப்பித்தது. இதுமட்டுமல்லாமல்-காமராசர் நினைவாலயத்தை நன்முறையில் பராமரிக்கவும், ஈரோட்டில் தந்தை பெரியாரும், காஞ்சியில் அமரர் அண்ணாவும் வாழ்ந்த இல்லங்களைச் சிறந்த முறையில் பராமரிக்கவும் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

வறுமையில் உழலும் கலைஞர்களுக்கு மாதந்தோறும் ரூ. 250 உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

குமரி முனையில் உள்ள கடற்பாறையில் குறள்தந்த வள்ளுவருக்குச் சிலையெடுக்கவும், கன்னியாகுமரியில் திருவள்ளுவர் நினைவாலயம் உருவாக்கிடவும் அடிக்கல் நாட்டப்பட்டது.

பழந்தமிழ்க் கலைமணம் நம்நாட்டில் மட்டுமல்லாமல், உலகு முழுதும் பரவ வேண்டும் என்கிற நன்னோக்கத்தில், வறிய கலைக்குடும்பத்தைச் சேர்ந்த நடனக்கலை வல்லுநர், செல்வி சுவர்ணமுகிக்கு உதவிட அரசு முன் வந்தது.

## நீதிமன்றங்கள்


நீதிமன்றங்களின் அதிகார வரம்புக் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்தும் வகையில், 1978-79 ஆம் ஆண்டில் நான்கு நிரந்தர உரிமையியல் நீதிமன்றங்களும் 1979-80 ஆம் ஆண்டில் மூன்று நிரந்தர உரிமையியல் நீதி மன்றங்களும், நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளை துரிதமாக முடிவுசெய்ய 1978-79 மற்றும் 1979-80 ஆண்டுகளில் ஆறு கூடுதல் உரிமையியல் நீதிமன்றங்களும் துவக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

சென்னை சிறு வழக்கு நீதிமன்றத்தில் (Court of small causes Madras) நிலுவையில் உள்ள வீட்டுவாடகைக்கட்டுப்பாடு வழக்குகளை (House Rent control cases) விரைந்து முடிவு செய்ய, நான்கு கூடுதல் நீதிமன்றங்கள் துவக்க (மாவட்ட முன்சீப் தரத்தில்) 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஆணைகள் பிறப்பிக்கப் பட்டன.


இவை தவிர, 1978-79 ஆம் ஆண்டில் நிலுவை வழக்குகளைக் குறைக்க நான்கு கூடுதல் செஷன்ஸ் நீதிமன்றங்களும், 1979-80 ஆம் ஆண்டில் ஒரு கூடுதல் நீதித்துறை முதல் வகுப்பு குற்றவியல் நீதிமன்றமும், நீதிமன்றங்களின் அதிகார வரம்புக்குழுவின் பரிவுரைகளைச் செயல்படுத்தும் வகையில் 1979-80 ஆம் ஆண்டில் புதியதாக எட்டு நீதித்துறை இரண்டாம் வகுப்புக் குற்றவியல் நீதிமன்றங்களும் இரண்டு நீதித்துறை முதல் வகுப்புக் குற்றவியல் நீதி மன்றங்களும் அமைக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

குற்றவியல் நீதிமன்றங்களில் விளங்கும் வழக்குகளைத் துரிதமாக நடைபெறச்செய்ய மாநிலத்திலுள்ள எல்லாத்தலைமைக்குற்றவியல் நீதிமன்றங்களும், பெருநகர் தலைமைக் குற்றவியல் நீதிமன்றத்திற்கும், சென்னை உயர்நீதி மன்றத்திற்கும் மின்னியக்க நகல்கள் எடுக்கும் பொறிகள் வழங்க ஆணைபிறப்பிக்கப்பட்டுள்ளது

ஆசிரியரும் வெளியிடுபவரும்: தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.



சென்னை கோட்டையில் 4-12-79ல் நடைபெற்ற கப்பல் படை நாளன்று, மேதகு ஆளுநர் அவர்கள் மலர் ஒன்றை வெளியிட்டார்.






ஒரத்தநாட்டில் கிராமப் புறங்களுக்கு புதிய பேருந்து வழித் தடங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1-12-79-ல் துவக்கி வைத்தார்.




மதுரைப் பல்கலைக் கழகம், முத்தமிழ்க் காவலர் திரு. கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களுக்கு வழங்கிய டாக்டர் பட்டத்தை மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் 29-11-79ல் அளித்தார்.



தமிழகத்திற்கு வருகை தந்த
மாண்புமிகு இந்தியக்குடியரசுத்
தலைவர் திரு. நீலம் சஞ்சீவ ரெட்டி
மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அ
5-12-79-ல் மீனம்பாக்கம் விமான
நிலையத்தில் வரவேற்றார். மேதகு
ஆளுநர் அவர்களும் மாண்புமி
நிதி அமைச்சர் அவர்களும்
உடன் உள்ளனர்.



முன்னாள் தமிழக முதல்வர்
திரு. எம். பக்தவத்சலம் அவர்
உருவப் படத்தை மாண்புமிகு
இந்தியத் தலைமை அமைச்
திரு. சரண்சிங் அவர்கள்
24-11-79 அன்று சென்னை
கலைவாணர் அரங்கில் திறந்
வைத்தார்.



சென்னை-திருவள்ளூர்
மின்சார ரயில் போக்கு
வரத்தை மாண்புமிகு முதல்வர்
திரு. எம்.ஜி.ஆர். அவர்கள்
29-11-79-ல் துவக்கிவைத்தார்.